திருக்கோயில்

ஆகஸ்ட் & செப்டம்பர் 1996

விலை ரூ. 6-00



குன்றத்தூரில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஏ. கோதண்டம், அறநிலையத்துறை இணை ஆணையாளர் திரு ப. தனபால், எம்.ஏ.பி.எல்., துணை ஆணையாளர் திரு ப. ராஜா, பி.எஸ்சி.பி.எல்., துணை ஆணையாளர் திரு மு. ராமச்சந்திரன், எம்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

முகப்பு :

அருள்மிகு அரங்கநாதர், திருவரங்கம்.

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை—600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :
கவிஞர் டாக்டர் **ந. அமிர்தலிங்கம்,** M.A.,Ph.D.

மாலை : 38	திருவள்ளுவர் ஆண்டு 2027 தாது ஆண்டு ஆவணி-புரட்டாசி ஆகஸ்ட்-செப்டம்பர் 1996 விலை ரூ. 6—00	மணி : 8 & 9

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்,

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்.

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை (மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	..	ரூ.	18-00
ஓர் ஆண்டு	..	ரூ.	36-00
ஆயுள்	..	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்,

முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

பொருளடக்கம்

புறநானூற்று வீரத்தாய்
—மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்
ஆவினத்தைக் காப்போம்
—ஆ.வெ. இராமானுஜம்
ஆழ்வார்களின் பக்திநெறி
—பா. வேங்கடாச்சாரி
வினை வழி உயிர்
—வ. ராமதாஸ் இ.ஆ.ப.
விநாயகர் —தவத்திரு சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்
மாயையை வெல்வோம்
—வெ. சுந்தரம் எம்.ஏ.
அருள் வழங்கும் வயலூர் திருக்கோயில்
—வே. ராமன்
மனம் எனும் குரங்கு
—ஆ. சுப்பிரமணியன்
ஒரு நேர உதவி —ச. சாவர்க்கர் இ.ஆ.ப.
குரு அஞ்சலி —பெருங்கவிக்கோ டாக்டர் வா.மு. சேதுராமன்
அனுமன் போற்றி
—புலவரேறு ஆ.ஜெ. ராமசாமி
விநாயகர் குங்குமப் பிரசாதம்
—டாக்டர் டி. செல்வராஜ்
நல்ல வண்ணம் வாழலாம்
—துறைசையாதீன குருமகா சந்நிதானம்
அருள்மிகு தொண்டர்கள் நயினார் கோயில்
—பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன்
நவராத்திரி விழாவின் சிறப்பு
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்
மெய்யமலையான் வாய்மைக்கு அப்பன்
—கணேசன் எம்.ஏ. பி.எல்.
சிவபுராணம் —திருமதி லலிதா பூமணி
திருவக்கரை வக்கிர காளியம்மன்
—எம். ஜெகதீசன் எம்.ஏ.,

புறநானூற்று வீரத்தாய்

மாண்புமிகு தமிழக முதல்வர்
முத்தமிழ் அறிஞர்

டாக்டர் கலைஞர்

அவர்கள்

குடிசைதான் ஒரு புறத்தில்:
கூரிய வேல்வாள்

வரிசையாய் அமைந்திருக்கும்-வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்

வடித்துவைத்த படைக்கலம்போல் மின்னும்
மிளிரும்

புலியின் குகையினிலே அழகில்லை-
புதுமையல்ல.

கிலியும் மெய் சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா

மானத்தின் உறைவிடம்-
மறவன் மாளிகை.

இல்லத்து வாயிலிலே
கிண்ணத்துச் சோற்றோடு

வெல்லத்தைச் சிறிது கலந்து
வயிற்றுக்குள் வழியனுப்பப்

பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்

பெருநரைக் கிழவி யொருத்தி.

ஓடி வந்தான் ஒரு வீரன்
'ஒரு சேதி பாட்டி' என்றான்

ஆடி வந்த சிறுமி போல்

பெருமூச்சு வாங்குகின்றாய்

ஆண்மகனா நீ தம்பி

மூச்சுக்கு மூச்சு இடைவேளைஏற்படட்டும்,பின்

பேச்சுக்குத் துவக்கம் செய்' என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர் போன
கிழட்டுத் தமிழச்சி.

'வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி—உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு.

50 ஆண்டுகளுக்கு முன்பு தாம்வடித்த எழுச்சிமிகு கவிதையிதனை அண்மையில் சி. பா. ஆதித்தனார் இலக்கியப் பரிசளிப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நினைவாற்றலோடு எடுத்துக் கூறிய திறத்தை அவையினர் எல்லோரும் கேட்டுப் பரவசப் பட்டார்கள். அந்த வீரமிகு கவிதையை - புறநானூற்றுத் தாயின் மறச்சிறப்பை வடித்துக் காட்டும் மானமிகு கவிதையைத் திருக்கோயில் வாசகர்கள் படித்துமகிழ அன்புடன் வெளியிட்டு மகிழ்கிறோம்.

மடிந்தான் உன் மகன் களத்தில்'
  என்றான்-மனம்

ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி. அக்கணமே,
'தாயம் ஆடுகையில் காய்களை
  வெட்டுவதுண்டு-களமும் அதுதான்

காயம் மார்பிலா?! முதுகிலா ?
  கழறுவாய்' என்றாள் 'முதுகி' லென்றான்

கிழவி துடித்தனள். இதயம் வெடித்தனள்;
  வாளை எடுத்தனள்;

முழவு ஒலித்த திக்கை நோக்கி
  முடுக்கினாள் வேகம்

'கோழைக்குப் பால் கொடுத்தேன்
  குப்புற வீழ்ந்து கிடக்கும்

மோழைக்குப் பெயர்
  போர் வீரனாம். முன்பொருநாள்

பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
  பதில் சொல்ல மார்பைக் காட்டிச்

சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்!
அவருக்குப் பிறந்தானா?
  அடடா மானமெங்கே-குட்டிச்

சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்.

இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும்-இங்கு
  வீணை நரம்பினிலே இசை துடிக்கும்

அதுவும் மானம் மானமென்றே முழக்கும்.
  மாற்றார்க்கு மண்டியிட்டு வாழுகின்ற

மதுவும் சுறாவும் உண்டுவாழும்

மானமற்ற வம்சமாநீ?

மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
  மார்பு கொடுத்தேன்

மடிமேல் வளர்த்தேன்-

தின்று கொழுத்துப்

திமிர் பாய்ந்த தோள்களெங்கே?
தினவெடுக்கவில்லையா? அந்தோ! பகைவர்
வேலுக்கு வழி சொல்ல வகையற்ற
  கோழையே-என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்?''
என்று கதறினாள்.
எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி:
சென்றங்கு செரு முனையில்
  சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப்
  புரட்டிப் பார்த்தாள்-அங்கு

நந்தமிழ் நாட்டைக் காக்க
  ஓடிற்று ரத்த வெள்ளம்!

பிணக் குவியலிலே பெருமூச்சு
  வாங்க நடந்தாள்.

மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை-மகன்
பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு
  எல்லையுண்டு-அவன்

இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி.
  இதைக் கண்டாள்-இதயங் குளிர்ந்தாள்.

எதைக் கண்டாலும் இனிக்கவலை இல்லை
  'என் மகன் வீரனாய் இறந்தான்' என்றாள்.

அறுத்தெறிய இருந்தேன்
  அவன் குடித்த மார்பை-அடடா

கருத்தறியப் பொய் சொன்ன கயவனெங்கே!
  வாளிங்கே? அவன் நாக்கெங்கே!'

ஆவினத்தைக் காப்போம்

ஆ. வே. இராமானுஜம், பி.ஏ.,

பசுமாடு பால் தரும் சாதுவான பிராணி என இளமையிலேயே பள்ளிக்கூடங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது. அத்துடன் நின்று விடுவது இந்த நாட்டின் துர்பாக்கியம்.

பசுஞ்சாணம் மருத்துவ சக்தி மிகுந்தது. தற்போது நோய் கிருமிகள் பரவாமல் தடுக்க பல தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அக்காலத்தில் பசுவின் சாணத்தை தண்ணீரில் கலந்து தெளித்து மிகச் சிறப்பான கிருமி நாசினியாக அதனைப் பயன் படுத்தியுள்ளனர். இன்றும் கிராமங்களில் பயன்படுத்திப் பயன் பெறுகின்றனர்.

பசு சாட்சாத் மகாலட்சுமியின் அம்சம். மகாலட்சுமியை நாம் நேரில் கண்டு தொழுது பூஜிக்க தவம் செய்ய வேண்டும். ஆனால் அதே சமயம் பசுமாட்டினை ஒவ்வொருவரும் நன்கு பேணி, அதனை சுத்தமாக வைத்திருந்து, சாம்பிராணி புகை போட்டு பூஜித்து அதன் கன்றுக்குப்போக மீதிப்பாலைக் கறந்து இறைவன் இறைவிக்கு அபிஷேகம் செய்து அது போக மீதம் உள்ள பாலை ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கினால் அதனால் ஏற்படும் புண்ணியத்தைக் கணக்கிட இயலாது.

இதனை எப்படிச் செய்வது? எனப் பலரும் ஐயுறுகின்றனர். வசதி படைத்தவர்கள் வீடுகளில் தனி தொழுவம் அமைத்து நன்கு பராமரிக்கலாம். மற்றவர்கள் அருகில் உள்ள கோயிலில் நல்ல வசதியாக தொழுவம் அமைத்து கோயிலுக்கு பசுமாடு கன்றுக்குட்டியை காணிக்கையாக விட்டு அதனைப் பராமரிப்பதைப் பார்த்து வரும் விதத்தில் கோ பூஜை செய்தும் அதன் பால் சுவாமி அம்மனுக்கு அபிஷகம் செய்யப்படுவதைத் தரிசித்தும் பேரானந்தம் பெறலாம்.

கோ பூஜையின் பலன் சொல்லிலடங்காது. பசுமாட்டின் பாலைக் கறந்த சூட்டோடு அம்பாளுக்கு அபிஷேகம் செய்தால் அவளது மனம் குளிர்ந்து ஆசீர்வதிப்பதால் ஏழு தலைமுறைக்கு வற்றாத செல்வம் உண்டாகும். இன்றைய பணக்காரர்களைப் பற்றி ஆராய்ந்தால் அவர்கள் இன்றையஉயர்நிலைக்கு வருவதற்கு அவர்களது மூதாதையர் பசுவைக்காப்பாற்றியதும், கோ பூஜை செய்ததும் சம்ரட்சணை செய்ததும்தான் காரணமாக இருக்கும் என உறுதியாகக் கூறலாம்.

அமெரிக்க நாடு உலகிலேயே பணக்கார நாடாக இருப்பதற்குக் காரணம் அங்கு பசுமாடுகள் மிக அருமையாகப் பராமரிக்கப்படுவது ஒரு காரணம் எனச் சொன்னால் அது தவறாகாது.

கோ பூஜை, கோசாலை பராமரிப்பதைவிட வயது முதிர்ந்த பால்கறவையின்றி உள்ள பசுமாடுகளைக் காப்பாற்றுவது நூறு மடங்கு அதிக பலன் தரும். வயது முதிர்ந்த தாய் தந்தையரை பராமரித்து அவர்களது ஆசிகளை பெற இயலாத பக்தர்கள் இதனைச் செய்தால், தமது தாய் தந்தையராக வயது முதிர்ந்த பசுமாடுகளை நினைத்துப்பராமரித்தால் அவர்களது பெற்றோரின் ஆசிகளைப் பெறுவதுடன் மகாலட்சுமியின் அருளைப் பெற்று அதிக பொருட் செல்வத்துடன் நல்வாழ்வு வாழ்வர்.

எனவே அனைவரும் பசுமாடுகள் கொலை செய்யப்படுவதைத்தடுத்து அதனைத் திருக்கோயில்களில் கோசாலை வைத்து வளர்க்கவும் வயது முதிர்ந்த மாடுகளை கோ சம்ரட்சணம் செய்யவும் உதவிகள் செய்து நற்பலன் பெறுவார்களாக. இதுவே வேதத்தில் சொல்லப்பட்டுப் பெரியோர்களால் அருளாசியாக வழங்கப்பட்டுள்ளது. அதன்படி செயல்பட்டு நல்வாழ்வு வாழ்வோம். பசுக்களையும் வாழ வைப்போம்.

— — — —

ஆழ்வார்கள் பக்திநெறி

பா. வேங்கடாச்சாரி

ஆழ்வார் பாசுரங்களை ஸ்ரீமந் நாத முனிகள் தொகுத்து வெளியிட்டார். ஆசார்ய பரம்பரையில் இவரே நம்மாழ்வாருக்கு அடுத்த ஆசாரியர் ஆவர்.

ஸ்ரீமந் நாதமுனிகள் ஒரு சமயம் தன் குடும்பத்துடன் பாரத தேசமெங்கும் யாத்திரை செய்து எல்லா தலங்களையும், கண் குளிரக் கண்டு தரிசித்து, மனதார, வாயார வாழ்த்தி, வழிபட்டு தம்முடைய ஊருக்கு திரும்பி வந்து சேர்ந்தார்-வீரநாராயணபுரம் தற்சமயம் காட்டு மன்னார் கோவில் என்று அழைக்கப்படுகிறது. தென் ஆற்காடு மாவட்டம், தமிழ்நாட்டில் உள்ளது.

பகவதி, பாகவத கைங்கர்யங்களை குறைவர நடத்திக் கொண்டு, வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டு இருந்தார்.

ஒரு நாள் அவ்வூர் கோவிலில் யாத்திரையாக வந்த சில பக்தர்கள் வழிபாட்டின் சமயம்

'ஆரா-அமுதே அடியேன்
உடலம் நின்பால் அன்பாயே,
நீராய் அலைந்து கரைய உருக்கு-
கின்ற நெடுமாலே'-என்று பாடத் தொடங்கிப் பாடினார்கள்.

அது சமயம் ஸ்ரீமந் நாதமுனிகளும் கோவிலுக்கு தரிசனத்திற்குப் போயிருந்தார். பாட்டின் சுவையாலும், பண்ணழகாலும் இவர் முற்றிலும் வசீகரிக்கப்பட்டார்.

''ஆரா அமுதே'' என்ற சொல் விழுந்ததும், சமீபத்தில்தான் தரிசித்த அந்தப் பெருமானினுடைய நினைவு வந்தது-லாவண்யமான தமிழ்ப் பெயர்.-

''எவ்வளவு அனுபவித்தாலும், திகட்டல் பிறவாத அமிர்தமே இறைவன்'' என்ற ஆழ்ந்த பொருளை, எவ்வளவு நன்றாக தெரியப்படுத்துகிறது.

பக்தர்கள் தொடர்ந்து
''சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய்
கண்டேன், எம்மானே'' என்று

பாடிய பொழுது திருக்குடந்தையைக் (கும்பகோணம்) கோவில் கொண்டிருக்கும் அமுதனைக் குறித்த பாசுரம்தான் என்று அறிந்துகொண்டார்.

அவர்கள் உருக்கமாக பாடப்பாட ஸ்ரீமந் நாதமுனிகள் மெய்மறந்து கேட்கிறார்.

அந்த பக்தர்கள் ஒன்றன் பின் ஒன்றாக 10பாட்டுகளைப் பாடி, அடுத்த 11-வது பாட்டுடன் தலைகட்டி விடுகிறார்கள், அந்தப் பாட்டில்

.........''குருகூர்ச் சடகோபன்
குழலின் மலியச் சொன்ன
ஓராயிரத்துள் இப்பத்தும்'' என்ற

பகுதியில் அவரது கவனம் செல்கிறது. இந்த பிரபந்தம் முழுதும் வருமா என்று அந்த பக்தர்களை அவர் கேட்டபொழுது அவர்கள் அந்த பாடல்களுக்கு மேல் தங்களுக்கு தெரியாதென்று கூறினார்கள்.

ஸ்ரீமந் நாதமுனிகள் அந்த பக்தர்களை உபசரித்து வழி அனுப்பி விட்டு அந்த ஆயிரம் பாடல்களையும் தேடிக் கண்டுபிடிக்க நிச்சயம் செய்தார். அந்த பாட்டில் உள்ள குருகூர்ச் சடகோபன் என்ற சொல் மூலம் ஊரும், பெயரும் அறிந்து கொண்டார். உடனே சடகோபர் எனப்படும் நம்மாழ்வார் அவதரித்த குருகூருக்குச் சென்றார். அது தற்சமயம் ஆழ்வார் திருநகரி என்று அழைக்கப்படுகிறது.

நம்மாழ்வாரின் சிஷ்யரான மதுரகவி ஆழ்வாரின் தொடர்பு பெற்றிருந்த ஒரு பக்தரை பாக்யவசமாக சந்தித்தார். அவரது உதவியால், அவரின் ஆலோசனைப் பிரகாரம் மதுரகவி ஆழ்வார் அனுக்கிரகித்த 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்ற பிரபந்தத்தை ஒரு லட்சம் தடவை சேவித்து, தனதுயோக நிலையில் நம்மாழ்வாரிடம் திருவாய்மொழியை உபதேசமாகப் பெற்றார். பிறகு நம்மாழ்வாரின்

இதர பாசுரங்களையும், மற்ற ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களையும் அவரால் தொகுக்கப்பட்ட 4,000 பாசுரங்கள் உள்ளிட்ட 24 பிரபந்தங்களைக் கொண்ட அந்த பிரபந்தம் தான், நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்று போற்றப்படுகிறது. திராவிட வேதமென்றும் கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீமந் நாதமுனிகள் அதற்கு ராக தாளங்கள் அமைத்து தன் முக்கிய இரு சீடர்களுக்கு (கீழை அகத்தான், மேலே அகத்தான்) அதைக் கற்பித்தார்; உபதேசமளித்தார். அதன் பிறகு அப்பிரபந்தங்கள் தமிழ் நாடெங்கும் விரைவில் பரவத் தொடங்கியது.

அருமையான தத்வார்த்தங்களை எல்லாம் ஆழ்வார்கள் தம்முடைய மதுரமான தமிழ் கவிதையில், அறிவுக்கு மட்டுமல்லாமல், உணர்வுக்கும் அமுதமாகும்படி பாடி அனுக்கிரகித்து இருக்கிறார்கள்.

சிலருக்கே சாத்தியமாயிருந்த வேதாந்தத்தை ஆழ்வார்கள் அனைவருக்கும் எடுத்து அளித்துவிட்டார்கள். பெருமானே புதிய வெற்றி அடைந்ததுபோல் பூரித்துவிட்டாராம்.

வட இந்தியா வேதாந்தத்தின் பிறப்பிடம் அதைக்கலையாக்கியும், உரை கண்டும் வளர்த்தது தென் இந்தியா. வேதாந்தத்தை கலையாக்கியவர்கள் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்கள். வேதாந்த நூல்களுக்கு உரை கண்டவர்கள் ராமானுசர், சங்கரர் முதலியோர்.

ஆழ்வார்களுடைய பாடல்களில் உபநிடதக் கொள்கைகளும், வேதாந்தக் கருத்துக்களும், ஆழ்வார்களுடைய சொந்த அனுபவங்களாகி தமிழிலே உருவெடுத்தது என்று கூறினால் மிகையாகாது. உபநிடதத்தின் கருத்துக்கள் இவர்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றன. வேதத்தை தமிழ் செய்தவர் ஆழ்வார்கள் என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இதை வேதத்தின் மொழி பெயர்ப்பென்றோ, வேதாந்த நூல்களின் மொழி பெயர்ப்பென்றோ கருதுவது தவறாகும்.

வேத, வேதாங்க, வேதாந்தங்களின் ஸாரம்தான் நமது ஸநாதன தர்மம். உணர்ந்து ஒழுகிய சான்றோர்களின் மன எழுச்சி, அனுபவம், ஆனந்தம், ஆத்மநிலை முதலியவற்றின் அனுபவத்தைத்தான் நாம் திவ்யப் பிரபந்தத்தில் காண்கிறோம். ஆழ்வார்கள் அருளிச் செய்த இந்தத் தமிழ் வேதம் கலாரஸத்தோடு கூறிய ஒரு புதிய படைப்பாகவே மதிக்கப்படுகிறது, போற்றப்படுகிறது. இசையோடு பாடினால் பன்மடங்கு ஆனந்தமாய் அனுபவிக்கலாம்.

''கடவுள் ஒருவன் உண்டு அவனே இந்த உலகத்தை எல்லாம் படைத்து, பேணிவளர்த்து உலகம் முழுவதும் வியாபித்துள்ளான். அவன் அன்புருவாகிய அழகன்'-அவனுடைய செல்வச் சிறப்பை அனுபவித்து ஆனந்தமடையும்

பொழுது, அந்த அனுபவம் உற்சாக வேகத்தில் கற்பனா சக்தியோடு வெளிப்பட்டு பாட்டாகின்றது என்பதுதான்இதன்கருத்தாகும். இது நமது வாழ்க்கைக்கு ஒரு புது சிவசக்தியைத் தருகிறது. ஆழ்வார்கள் பரம் பொருளை விஷ்ணுவாகவும் அவருடைய அவதார மூர்த்திகளாகவும் வழிபடுகிறார்கள். விசேஷமாக அந்தக் கடவுளின் அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டவர்கள்.

உபநிடதங்களில் ஞானமார்க்கம் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. பற்றில்லாமல் தனது கர்மத்தில் ஈடுபடும் வழியான தர்ம மார்க்கம் பகவத்கீதையில் சொல்லப்படுகிறது. இரண்டையும் உள்ளிட்ட பக்தி மார்க்கம் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. அதிலும் சரணாகதி நெறிக்கு முக்கியத்துவம்அளிக்கப்படுகிறது. ஆழ்வார்களின் வாழ்க்கையும் செயல்களும் கவிதையாக பரிணமித்திருக்கிறது.

கடவுளின் லீலை ஜீவாத்மாவின் நிலை, ஆண்டவனைச் சரணமாகக் கொண்டு, அவன் கிருபையால் அடையும் பக்திநெறி, இதற்கு தடையாக வரும் பழவினைகள், அந்த விரோதிகளான பழவினைகளைக் கடவுளின் கிருபையால் வென்று, அந்த பகவானின் அருநிழலில், அவன் உகந்து நியமித்தபடி கைங்கர்யம் செய்து கொண்டு, அடியார்களோடு கூடிவாழும் வாழ்க்கை முறையை, தத்துவத்தை, ஆழ்வார்களின் பாடல்கள் பிரதிபலித்துக் காட்டுகின்றன. யாழின் இசையிலே அமையத்தக்க வேதம் என்றும் பெரியார்கள் கூறுகிறார்கள்.

ஆழ்வார்கள் தமிழ் மக்களால் விசேஷமாகக் கொண்டாடப்பட்டார்கள். இவர்களும் துறவிகளும் அடியார்களும் யாத்திரை செய்து கொண்டு தமது தர்மத்தின் டரந்த நோக்கங்களையும் சிறந்த லட்சியங்களையும் பரப்பி வந்தார்கள். கங்கை போலப் பெருகி

வரும் இப்படிப்பட்ட பக்தி பரவசத்தின் உற்பத்தி ஸ்தானம் சிலப்பதிகார காலத்திற்கு முன்னே வெகு தூரத்தில் இருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். தமிழ்நாட்டில் விஷ்ணு பக்தி ஆழ்வார் காலத்திற்கு முன்னமே உண்டு என்பதற்கு புராதான தமிழ் இலக்கியம் சான்று தருகிறது.

நமது வாழ்க்கையே ஒரு பெரிய யாத்திரை தான். நமது வாழ்க்கை சீராக நடைபெற ராஜ பாதையைக் கண்டு நமக்கு அந்த வழியைக் காட்டிக் கொடுத்த கலைஞர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆவர்.

''இறைவனுடைய குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுகிறவர்கள்' என்று 'ஆழ்வார்' என்ற தமிழ் பதத்திற்குச் சாதாரணமாக பொருள் கூறுகிறார்கள். ஆழ்வார் என்பதை 'ஆள்வார்' என்ற பதத்தின் திரிபாகக் கொண்டு 'நம்மை ஆள்பவர்' எனறும் பொருள் கூறுவதும் உண்டு. இப்படி இந்தப் பொருளாக ஆழ்வார்கள் கடவுளின் மீது மெய்யன்பு செலுத்தி நம்மை ஆளும் தலைவர்களாக ஆகிறார்கள். ஆழ்வார்கள் தமிழ் நாட்டில் பல இடங்களில் தோன்றினார்கள்.

அவர்கள் பல்வேறு வகுப்பினர். இவர்களின் கொள்கைப்படி ஆண்டவனின் சந்நிதியில் ஜாதி வித்யாசம் இல்லாதது போல் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமும் கிடையாது. இவர்களுக்கு தேசம் மொழி முதலான வித்யாசங்களும் கிடையாது. புதுமை, பழமை என்று அபிமான துரபிமானங்களும் இவர்களிடம் காண முடியாது. ஆம், கடவுளை அடையச் செய்யும் அன்பு நெறியும், பக்தி நெறியும் பழைமைதான், புதுமைக்கும் புதுமைதான். அன்பு கனிந்த பக்திதான் முக்கியம். வேஷத்தால் ஒருவித பயனும் கிட்டாது என்பது கடவுளை அன்பாகக் கண்ட இந்த மெய்யடியார்களின் பொதுவான கொள்கை. இந்த பக்தி வெள்ளம் சமயத்தையும் கலைகளையும் வளர்த்தது. நமது நாகரீகத்தை அழகு செய்தது. இந்த தமிழ்நாட்டில் அவதரித்த ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்கள் மூலம் நாட்டை வளமாகச் செய்தனர்.

உலக நெருக்கடி அவதார புருஷர்களைத் தோற்றுவிக்கிறது. இவர்களைப் பெற்றுக் கொடுப்பது ஆசியா கண்டம்-குறிப்பாக நமது தாய்நாடாகிய பாரதம். தேசத்தின் ஒரு மகத்தான தேவையைப் பூர்த்தி செய்ய நமது நாட்டின் நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ்நாடு ஆழ்வார்களை ஈன்றளித்தது. இவர்களின் உணர்ச்சிமிகுந்த பாடல்கள் உறங்கிக் கிடந்த பக்தி உணர்ச்சியை எழுப்பி தூண்டி விட்டன. ஆழ்வார்கள் தங்கள் அன்புக் கடவுளைக் கோவில்களிலும் கண்டார்கள். கோவில்களாகவும் கண்டார்கள். திவ்யதேசங்களாகவும் கண்டார்கள், உயிர்களாகவும், உலகமாகவும் கண்டார்கள். உலகமே இவர்களுக்கு ஈச்வரமயம்தான், தாயாகவும், தந்தையாகவும், குழந்தையாகவும், நண்பனாகவும், புகழ்ந்து போற்றினார்கள். நாயகனாகவும், காதலனாகவும் பாவித்து காதல்-பக்திப் பாடல்



களைப் பாடினார்கள். தங்களை நாயகியாகப் பாவித்து அனுபவித்துப் பாடினார்கள் என்று சொல்லத் தேவையில்லை.

உலகமனைத்தும் கடவுள் மயம், அழகுச் சுடரும் தருமச் சுடருமான ஆண்டவன் உலகத்தை ஒழுங்குபடுத்துகிறான். உலகெங்கும் வியாபித்துள்ள ஈசுவரன் மூலம் எல்லா உயிர்களும் பரஸ்பரம் தொடர்பு கொள்கின்றன. இதை அஸ்திவாரமாகக் கொண்டுதான் வாழ்க்கை நிலை பெற முடியும். மேலே கூறப்பட்ட ஒற்றுமையை உணர்ந்து நடக்கும் ஒழுக்கமே சமய வாழ்க்கையின் உயர்நிலை. இவர்களே அகமும், புறமும் ஒத்த உண்மையாளர்களாகவும், ஞான வீரர்களாகவும் விளங்குகிறார்கள். இதன்படி அவர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. இவர்களுக்கு எவ்வித பயமோ, கோழைத்தனமோ கிடையாது. மூடபக்தியும் கிடையாது. துன்பமானாலும் சரி, இன்பமானாலும் சரி, இரண்டையும் சமமாகப் பாவித்து, ஆண்டவன் அருள் இயங்குகிற பிரகாரம் வாழ்க்கை நடத்தினார்கள் ஆழ்வார்கள். இவர்கள் நமது நாகரீகப் போக்கையும், சமயப் போக்கையும் மாற்றி விட்டார்கள். இந்த ஆத்ம வீரர்களை பகவானின் பல அம்சங்களின்-அதாவது சுதர்சன சக்ரம், ஸ்ரீவத்ஸம், சாரங்கம், பாஞ்சஜன்யம் கௌஸ்துபம் ஆகியவைகளின் அம்சமென்றும் ஞான பூர்ணர்கள், ஞான வீரர்கள் என்றும் கொண்டாடுகிறோம். ஆழ்வார்களின் பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றி வடநாட்டிற்கும் சென்றன. பக்திச் சுவையும் கலைச்

சுவையும் கொழிக்கும் ஆழ்வார் பாடல்கள், கங்கை, காவிரி, தாமிரபரணி ஆறுகளின் புது வெள்ளம் போல் புறப்பட்டன. பாரத தேச மெங்கும் பரவின.

ஸ்ரீமத் பாகவத மகாபுராணத்தில் 11-வது ஸ்கந்தம், ஐந்தாவது அத்யாயத்தில், ஒரு பிரபலமான சுலோகத்தின் கருத்து குறிப்பிடத் தக்கதாகும்.

''கலியுகத்தில், திராவிட தேசத்தில் பிர சித்தமானதும், புனிதமானதுமான தாமிர பரணி, பாலாறு, காவிரி முதலிய நதிகளின் கரையில் உள்ள புண்ணிய பூமியில்(ஊர்களில்) பல பக்தர்கள் அவதரிப்பார்கள். அவர்கள் மூலம், பக்திக்குப் புத்துணர்ச்சி அளிக்கப்பட்டு பக்தி நாட்டில் விரிவாகப் பரப்பப்படும்'' என்பது அந்த சுலோகத்தின் கருத்தாகும்.

இந்த ஆழ்வார்களில் பொய்கை ஆழ்வார் பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியவர்கள் முதலாழ்வார்கள் என்று புகழப்படுகிறார்கள். நாலாவதாக திருமழிசை ஆழ்வார் உட்பட இவர்கள் முதல், இரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்ததாக கருதப்படுகிறார்கள்.

அடுத்து நம்மாழ்வார் மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார் தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார் உள்ளிட்ட 9 ஆழ்வார்கள், 6-வது 7-வது நூற்றாண்டில் வாழ்ந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த 12 ஆழ்வார்களின் அருளிச் செயலான நாலாயிரப் பிரபந்தம் நாலு பாகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

	பாசுரங்கள்
(1) முதலாயிரம்	
9 பிரபந்தங்கள் கொண்ட	947
(2) பெரிய திருமொழி	
3 பிரபந்தங்கள் கொண்ட	1134
(3) திருவாய்மொழி	
1 பிரபந்தம் கொண்ட	1102
(4) இயற்பா	
11 பிரபந்தங்கள் கொண்ட	817
மொத்தம் 24 பிரபந்தங்கள்	4,000

24-வது பிரபந்தமான இராமானுஜ நூற்றந்தாதி இராமானுஜரின் வைபவம் பற்றி அவர் விஷயமாக திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த பிரபந்தமாகும். இது பிரபந்த காயத்ரி என்றும் கூறப்படுகிறது. இந்த பிர பந்தங்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவை.

ஆழ்வார்கள் எல்லாவற்றையும்விட அர்ச்சாவதார பக்தியில் ஈடுபட்டவர்கள். அவர்கள் ஸ்ரீமந் நாராயணனையே எல்லா அர்ச்சாவதார மூர்த்திகளிலும் கண்டுதரிசித்து அனுபவித்து மங்களா சாஸனம் செய்தனர்.

அவர்களால் அப்படி பாடல்கள் பெற்ற மங்களா சாஸனம் செய்யப்பட்ட 108 சேத்திரங்கள் திவ்ய தேசமென்று புகழ்மிக்கு விளங்குகின்றன. இந்த 108 திவ்யதேசங்கள் தமிழ் நாடு, ஆந்திரம், கேரளா, உத்திரபிரதேசம் குஜராத், நேபால் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

ஆழ்வார்களின் பாசுரங்கள் பற்றி ஸ்வாமி தேசிகன் அதிகார சங்கிரகத்தில்

'தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகத்திலுள்ள பக்தி மார்க்க ப்ரவர்த்தகர்களில் ஆழ்வார்களுக்கு மிக உன்னதமான முக்கியமான ஸ்தானம் உள்ளது. இவர்கள் தோற்றம் தமிழ்நாட்டைப் புனிதமாக்கியது. இவர்களின் உபதேசம் இந்தியாவின் பரம் பரையான ஞானச் செல்வத்தை விருத்தி செய்து அதிகப்படுத்தியது. இவர்கள் ஒரு நாட்டிற்கு மாத்திரம் உரியவரல்லர். தற்கால சூழ்நிலையில் இத்தகைய ஞானவீரர்களின் வாழ்க்கையும் உபதேசமும் நமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

ஆழ்வார்கள் வசித்த புனிதமான பாரத தேசத்தில் நாம் பிறந்து வாழ்வது நமதுபெரும் பாக்கியமாகும். ஆழ்வார்கள் அருள் என்றென்றும் நமக்குகிடைத்துக்கொண்டிருக்கிறது. நம்மை காத்து போசித்து வளர்த்து வருகிறது. அதற்கு தகுந்தவர்களாக ஆக்குகிறது. நம்மை உய்விக்கச் செய்கிறது

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்.

வினை வழி உயிர்

வ. ராமதாஸ், இ.ஆ.ப.,

ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34

இறைவனின் செயல் மனிதனின் எண்ணங்களுக்கு மிகவும் அப்பாற்பட்டது. மனித அறிவினால் அறிய முடியாதது. மனித உணர்வுகளால் உணரமுடியாதது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், ஆட்கொள்ளுதல் ஆகிய ஐந்தொழிலுக்கும் அதிபதியானவன் இறைவன். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். காரணமின்றி காரியம் இல்லை. நினைவு ஒரு காரணம், சொல்லும் செயலும் காரிய வடிவமாகும். நினைவுக்கும் காரணம் வேண்டும். அந்தக் காரணத்தை 'வினை' அல்லது 'செயல்' என்று சொல்லலாம். 'வினை' என்னும் 'சூட்சும' காரணத்தை ஆதாரப் பொருளாகக் கொண்டு உயிர்கள் உய்யும் பொருட்டும், சாந்த நிலையை அடையும் பொருட்டும் ஐந்தொழில்களையும் இறைவன் செய்கிறான். இச்செயல் உயிர்களிடத்தில் இறைவன் கொண்ட அளவற்ற கருணையினாலேயே நடைபெறுகிறது. ஐந்தொழில்களையும் இறைவன் செய்ய காரணமாகவும் அடிப்படையாகவும் வினையை உருவாக்குவது உருவத்தை அடைந்த உயிர்களாகும்.

வினை அதிக சக்தி வாய்ந்தது. யாராலும் அழிக்க முடியாதது. மந்திர, தந்திர மாயா ஜால கட்டுகளுக்கும் கட்டுப்படாதது.

'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'
—இளங்கோ அடிகள்

'ஊழிற்பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்'' —திருக்குறள்

வினை உயிரினங்கள் அத்தனைக்கும் பொதுவானது, பொருத்தமானது. எல்லாவற்றையும் ஆட்டிப் படைப்பது, பாலில் நெய் போல் மலரில் மணம் போல் மண்டிக் கிடப்பது, பாரபட்சமற்றது, ஜாதி, மத, இன, உயிர் இன வேற்றுமைகள் இல்லாதது. அதிக வீரியமுள்ளது. சாரமானது, காரமானது, பாசமற்றது. ஆனால் பாச மாயையாகிப் பல்லுயிர்களையும் பற்றி ஊடுருவிப் பாய்ந்து உறுத்து வருவது. பற்றற்றது. முற்றிலும் களையப்படும் வரை பிறப்பு தோறும் தொடருவது, பிறப்புதோறும் உருத்து வந்து உயிர்களை ஆட்டிப்படைப்பது. ஐம்புலன்களையும் தன் வயப்படுத்திக்கொள்வது. தன் சக்தியால் ஆட்கொள்ளுவது. ஐம்புலன்களுக்கும் தானே அதிபதியாவது, புலன் வழி தன் ஆதிக்கத்தைச் செலுத்துவது, உணர்வுகளைத் தூண்டுவது. அசையாதது. வேண்டாம் வேண்டாமென்று வெறுத்தாலும் விடாதது. போதும் போதுமென்று புலம்பினாலும் தொடருவது. புண்ணியமாவது, பாவமாவது. பாசத்தின் நிலையாகி மனிதனைப் பதற வைப்பது. புண்ணியத்தின் நிலையாகி புலன்கள் வழி இன்பத்தை நுகர வைப்பது. அறிவின் வழியில் நின்று அரசாட்சி செய்வது. செயல்களுக்கு எல்லாம் காரணமானது. தன்னை அறியாமல் தன்னுள் இருப்பது. 'நவ கோள்கள்' வழி வந்து நியாயம் செய்வது. சத்தியமாகி 'நீதி கொடுப்பது'. நன்மையும் தீமையும் 'நானே' என்பது. வெறுத்து ஒதுக்கினாலும் வேறு இடம் போகாதது. கருவினுக்குள்ளே கரைந்து, நிறைந்திருப்பது, ஊற்றாகி உள்ளே ஒழிந்திருப்பது, தாயாய், தந்தையாய், சகோதர சகோதரியாய் உடனிருப்பது, சுற்றமாய், சூழலாய் சுற்றியும் பற்றியும் நிற்பது. ஊராகி, நாடாகி விரிந்து பரந்திருப்பது. நீக்கமற நிறைந்துள்ளது. நிம்மதி கொடுப்பது. நிம்மதி கெடுப்பது, மதியைக் கொடுப்பது. மதியைக் கெடுப்பது. செல்வத்தை அள்ளிக் கொடுப்பது. அல்லல்பட்டு ஆற்றாது, அழுத கண்ணிராகிச் செல்வத்தைத் தேய்க்கும் படையாவது. பாசப்பற்று வலையில் சிக்க வைப்பது. ஆசை, காம குரோதங்களாகி உயிரினங்களை ஆட்டிப் படைப்பது.

வாதமென்றும் வழக்கென்றும் வாட்டி எடுப்பது. சொத்தென்றும், சுகமென்றும் சூழ்ந்து கொண்டுள்ளது, வறுமையென்றும் செழுமையென்றும் வாய்ப்பாகி வந்தது. வியாதிகள் பலவாகி வேதனையைத் தருவது. மெய்மையாகி வந்து மேன்மை கொடுப்பது. பொய் புரட்டுகள் பலவாகி புத்தியில் புழுதியாய்ப் படிவது. நன்றியை மறக்க வைத்து நரகத்தில் சேர்ப்பது. கோபம் ஆணவமாகிக் கொடுங்கோல் ஆவது, சொத்து சுகம் என்னும் சுமையாய் கனப்பது. புகழும் பெயரும் விளங்கி

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருக்குடநீராட்டு விழாவில் நம் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், இ. ஆ. ப. அவர்கள் தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகளுடன் அளவளாவி மகிழ்கிறார்கள்.

பெருமை சேர்ப்பது. கலையாகி ஞானமாகி கண்ணியம் சேர்ப்பது, ஒளியாகத் தோன்றி உய்யும் வழி காட்டுவது. சம்சார வாழ்க்கை சகதி என்று உணரவைப்பது. பாவக் கடனைக் கடக்க தோணியாய் வருவது. இருளை அகற்றி மெய்ஞானம் ஊட்டுவது. பக்தரின் சக்தியாகி பரத்தில் சேர்ப்பது. பாவியரின் தோணி யாக பாவ நரகில் கவிழ்ப்பது. அஞ்சா நெஞ்சமாய் ஆண்மையாவது. கோழையாகி, பேடியாகிக் குடியைக் கெடுப்பது. ருசிக்கவைத்துப்பசியைத் தீர்ப்பது. பசி பொறுக்க மாட்டாமல் புரட்டு களைப் பேச வைத்து வாழ்வைப் பாழாக்கி விடுவது. ஆணாகிப் பெண்ணாகிஆள வருவது. உருண்டு திரண்டு பெண்ணுருவாகிப் பெருங் கேடு செய்வது. பேருதவி செய்து செழிக்கச் செய்வது. எமனுக்கு ஏவல் செய்ய தூதாகி வருவது. விட்டகுறை தொட்டகுறை முடி வில் முடிவது. வேண்டுதல் வேண்டாமை இலா தானை விரும்பச் செய்வது. வேதாந்த சாரத்தை விளங்க வைப்பது. பிறவியறுத்து பிறவாமை சேர்ப்பது. மோகத்தைச் சுட் டெரித்து மோட்சத்தைக் கொடுப்பது. பாவத்தைச் சுட்டெரித்துப் பரமபதம் சேர்ப்பது. நல்லோர் நினைவில் நாணயம், சத்தியம் காப்பது. தர்மம் வளர்க்கும் தாயாக இருப்பது. நீதி விளங்க நீசனை அறுப்பது, கற்பு நெறி காக்கும் காவலனாவது. தான தர்மத்தை தான் விரும்பி ஏற்பது. நினைவு சொல்,செயல்களில் பதிவுற்றிருப்பது. இருந்த படி இருத்திக் காட்டுவது. மறந்து இருந்த தனை மறந்தபடி மறைத்துக் காட்டுவது. என்ன புண்ணியம் செய்தனையோ என்று மகிழ்ந்து சொல்ல வைப்பது. என்ன பாவம் செய்தனையோ என்று தேம்பி அழவும் செய் வது. செயலுக்குத் தக்க பலனைத் தருவது நாம் இப்படிபோனால் அப்படி வரும்.அப்படிப் போனால் இப்படிவரும். வினை முடிந்த நிலை யில் மட்டுமே வீடு பேற்றினைக் காட்டும். நம் கண்ணுக்குக் காட்டப்பட்ட வீட்டில் நம்மை நுழைய வைப்பதும் வாழவைப்பதும் முழுமையாக இறைவன் கருணை.

ஒருவனுக்குத் தான் செய்த தர்ம பலனை பொறுத்துப் பிறவி கிட்டுகிறது. நல்ல கர்மா செய்தாலும், தீய கர்மா செய்தாலும், செய்த கர்ம பலன்களை அனுபவிக்கும் பொருட்டு பிறவி கிட்டுகிறது.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தவிர்தலும் அவற்றோரன்ன''—

என்பது புறநானூறு

செய்தபாவத்தையும் புண்ணியத்தையும் கட் டாயமாக அனுபவித்தே தீர வேண்டும். மன தினால் செய்தவற்றை மனதினாலும், சொல் லால் செய்தவற்றை சொல்லாலும்,உடலால் செய்தவற்றை உடலாலும் நிச்சயமாக அனு பவித்து தீர்க்க வேண்டும்என்பது விதி. ஆனால் 'மெய்வருத்தக் கூலி தரும்' என்பதற்கேற்ப உழைப்புக்கேற்ற பலன் நிச்சயம் கிடைக்கும்.



மனிதனுக்கு ஆறு அறிவுகள் கொடுக்கப் பட்டுள்ளது. ஆறாவது அறிவு பகுத்தறிவு எனப்படுவது. நல்லது கெட்டது எது என்பதைப் பகுத்து அறியும் தன்மையினால் பகுத்தறிவு எனப்படுவது. பிறர் சொல்லக் கேட்டு அறியும் அறிவு கேட்பறிவு - கேள்வி ஞானம். இத்தனையும் அமைத்து மனிதனுக்கு கொடுத்தது இறைவனின் கருணை. ஆனால் வாழ்க்கைப் பாதையில் பலவிதமான சூழ்நிலைகளைச் சந்திக்கும் காலநிலைகளில் ஒருவனுக்கு பகுத்தறிவு எப்படிப் பயன்படுகிறது, அல்லது எப்படி பகுத்தறிவைப் பயன்படுத்துகிறான் என்பதைப் பொறுத்து வினை அமைகிறது. இதையே கர்மா என்று பொதுவாகச் சொல்கிறோம். முதலில் தனக்காகவும், பிறகு தன் குடும்பத்திற்காகவும் பின்பு தம்மைச் சார்ந்துள்ள சுற்றம் நண்பர்கள் அமைப்புகள்மற்றும் ஜாதி இவற்றுக்காகவும் பிறகு நாட்டுக்காகவும் பணிகளைச் செய்கிறான். தான் வணங்கும் தெய்வத்திற்காகவும் பல காரணங்களை முன்னிட்டு பல காரியங்களைச் செய்கிறான். ஒவ்வொரு செயலை எண்ணும் போதும். சொல்லும் போதும், செய்யும்போதும் ஒவ்வொரு கர்மாவைச் செய்ய நேரிடுகிறது. இதனைத் தவிர்க்க முடியாது. சாதாரணமாக மனிதனின் சுபாவம் சும்மா இருக்க முடியாது.

''நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்'' - புறநானூறு.

பல சூழ்நிலைகளில் செய்யும் நற்செயல்களுக்கு நல்ல வினைகளும், தீய செயல்களுக்கு தீய வினைகளும் உருவாகிறது. கர்ம பலன்களைப் பற்றுடன் செய்தாலும் அல்லது அறியாமல் செய்தாலும் செயல்களைப் பொறுத்து பலன்கள் கொடுக்கப்பட்டு விடுகிறது. பிரார்த்தனைகள் மூலமாகவும், பல பற்றுகள் காரணங்கள் பற்றிக் கொண்டு உயிரில் தொற்றிக் கொள்கிறது. ஆகவே பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்க பலப்பல பிறவிகளை எடுக்க நேரிடுகிறது. இப்படி பற்பல பிறவிகளில் செய்யும் வினைகள் நல்வினையாய் தீவினையாய் ஒவ்வொரு பிறவியிலும்உருத்து வந்து பிறவிக்குக் காரணமாகஅமைகிறது. ஒரு பிறவியில் மிக மிக நல்லவன்ஒருவனுக்கு மிகக் கொடியது நேர்வதும், கெட்டவன் ஒருவனுக்கு நற்பலன்கள் நடப்பதும் எப்போதோ எங்கோ செய்த கர்ம பலனேயன்றிவேறில்லை. இப்படிப்பட்ட நல்லவனுக்கா இக்கதி என்பதும், இவன் கெட்டதே செய்தாலும் நன்றாய் வாழ்கிறான் என்று வியக்கவைப்பதும் அவரவர் செய்த வினையின் நுகர்ச்சியே காரணம்.

காரணமின்றி காரியம் இல்லை. எனக்கு ஒருவன் தீங்கு செய்து விட்டான் என்று அடுத்தவனை குறை கூறுவது அர்த்தமற்றசெயல்.

இது கர்ம பலனே என்று உணராமல் அடுத்தவனைக் குறை கூறுவது அல்லது அடுத்தவன் மனம் புண்படும்படியாக செய்வது புதிய கர்மாக்களை உருவாக்க வழி செய்யும். இது தவிர்க்கப்பட வேண்டும். காரியத்தை கண்டு அஞ்சி பேதளித்துத் துடிக்கிற மனிதன் அதற்கான காரணம் என்ன என்று சற்று சிந்தித்தால் அல்லது அதற்கான சத்குருவை நாடினால் நல்லதல்லவா! அப்படிச் சிந்தித்து பெருமையுடன் இருக்கும்போது புதிய கர்மாக்களை உருவாக்குவதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது சான்றோர் வாக்கு.



'வினை' என்பது ஒருசூட்சமமான அதிசக்தி வாய்ந்த விதை. இது கருவறை முதல் கல்லறை வரை உயிரோடு ஊறி வளர்ந்து இன்ப துன்ப நுகர்வுகளுக்கு காரணமாகிறது. கல்லறையில்உடலைஉறங்கவிட்டுஅல்லது அக்கினியில் உடலை சாம்பலாக்கி விட்டு உயிருடன் ஒட்டி உறவாடிக் கொண்டே இருப்பது.

''பிறப்புறு வைகலைத் தொட்டுப் பின்னரே
இறப்புறு நாள்வரை யாவர்க்கு ஆயினும்
உறப்படுதுய்ப்பு எல்லாம் ஊழின் ஊற்றமால்''
—கந்தர் அலங்காரம்.

ஒவ்வொரு செயலின் போதும் ஒவ்வொரு வகையான பலன் கிட்டும். அதே நேரத்தில் ஒவ்வொரு வினையும் உருவாகும். செயல் முடியும்போது பலன் உடனேயே கிட்டலாம். காலங்கடந்தும் கிட்டலாம். பலனோடு தோன்றும் வினை தேக்கி வைக்கப்படுகிறது. செய்த பலனை உடனே அனுபவிக்கமுடிகிறது. ஆனால் வினையை உடனே அனுபவிக்கும்படியாக இறைவன் வைக்கவில்லை. அடுத்து வரும் பிறவிகளிலேயே அனுபவிக்கும்படியாக வைத்துள்ளான். பொதுவாக நற்பலன்கள் நடக்கும்போது, மனிதன் தன் அறிவும், முயற்சியும் காரணம் என்றும், கெட்ட பலன் நடக்கும்போது அடுத்தவன் காரணம் என்றும் எண்ணுகிறான். சிறிது சிந்திக்கும் தன்மை உள்ளவன் நடப்பதெல்லாம் தலைவிதி என்று பலனை அனுபவித்துக்கொண்டு சும்மா இருப்பான். புத்தி பலம் உள்ளவன் எதிர்த்து போராட்டமும் செய்வான். சிலர் குட்டக் குட்டக் குனிவர். அதனால் சிலர் குனியக் குனியக் குட்டுவர். ஆக குனியக்குனியகுட்டுபவனும், அதே நேரத்தில் குட்டக் குட்ட குனிபவனும் அறிவற்றவன். மனித சக்தி முழுவதையுமே பயன்படுத்தித் தார்மீக வழியில் தமக்கு இன்னல்கள் நேராமல் காப்பதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் அந்த முயற்சியில் எவருக்கும் துன்பம் இன்றி செய்வதே சாலச்சிறந்தது. கர்மக் கோலத்தில் நுழைந்து சிக்கிக் கொண்டு குட்டுப்படும் உயிர்கள் ஏராளம். மிக சிலரே இறைஅருளால் விரைவாக சிக்கலில் இருந்து மீள முடியும். ஆனால் அதற்கும் ஒரு நல்ல கர்மா செய்திருக்க வேண்டும்.

தவறு செய்தால் நிச்சயம் தண்டனை உண்டு என்று ஒருவன் உள்ளத்தில் எண்ணம் எழும்போதுதான் தவறு செய்ய தயங்குவான். தவறு செய்து விட்டு அதனை நியாயப்படுத்த சாக்குப்போக்கு சொல்ல மாட்டான். அப்படி ஒவ்வொரு மனிதனும்நினைக்க ஆரம்பித்தால் தான் சமுதாயத்தில் குற்றங்கள் குறையும். எத்தனை தவறுகள் செய்தாலும் தப்பி விடலாம் என்று எண்ணுவதும், தவறுகளை மூடி மறைக்க மென்மேலும் தவறுகள் செய்து கொண்டு போவதும், பணம், பதவி, அந்தஸ்து இவைகளை துஷ்பிரயோகம் செய்வதும் தனக்கும் சமுதாயத்திற்கும் பெரும் கேடு விளைக்கும், இதனால் வான் பொய்க்கும். பருவகால நிலைகளும் மாறும்.

அடுத்த இதழில் இதன்

தொடர்ச்சியைப் படிக்கலாம்.

விநாயகர்

தவத்திரு சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்

தமிழ்நாட்டின் தனிப்பட்ட சிறப்பு எங்கு பார்த்தாலும் பிள்ளையார் கோயில்கள் இருப்பதேயாகும். 'கோயில்' என்று பெயர் வைத்து. விமானமும் கூரையும் போட்டுக் கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பது கூட இல்லாமல்' அரச மரத்தடிகளிலேகூட வானம் பார்க்க அமர்ந்திருக்கும் ஸ்வாமி நமது பிள்ளையார். தெருவுக்குத் தெரு ஒரு பிள்ளையார் கோயில், நதிக் கரைகளிலெல்லாம் பிள்ளையார், மரத்தடிகள்ல் பிள்ளையார் என்றிப்படி இந்தத் தமிழ் தேசம் முழுவதும் அவர் வேறெந்த ஸ்வாமிக்கும் இல்லாத அளவுக்கு இடம் கொண்டு அருள்பாலித்து வருகிறார். அவரைப் 'பிள்ளையார்' என்றே அன்போடு கூறுவது நம் தமிழ்நாட்டுக்கே உரிய வழக்கம். சர்வலோக மாதா பிதாக்களாகிய பார்வதி பரமேசுரர் களின ஜேஷ்டபுத்திரர் அவர். 'பிள்ளை என்றால் அவரைத்தான் முதலில் சொல்ல வேண்டும். வெறுமே 'பிள்ளை' என்று சொல்லக்கூடாது என்பதால் மரியாதையாகப் 'பிள்ளையார்' என்று சொல்வது தமிழ்நாட்டுச் சிறப்பு.

'குமாரன்' என்றால் 'பிள்ளை' என்றே அர்த்தம். பாரத தேசம் முழுவதிலும் குமாரன், குமாரஸ்வாமி என்றால் பார்வதி பரமேஸ்வரர் களின் இளைய பிள்ளையாகிய சுப்பிரமணி யாரையே குறிப்பிடும். தமிழிலும் 'குமரக் கடவுள்' என்கிறோம். ஆனால் அவரைக் 'குமரனார்' என்பதில்லை; 'குமரன்' என்று தான் சொல்வார்கள். மூத்த பிள்ளைக்கே மரியாதை தோன்றப் பிள்ளையார் என்று பெயர் தந்திருக்கிறோம்.

முதல் பிள்ளை இவர்: குழந்தைஸ்வாமி ஆனாலும் இவரே எல்லாவற்றுக்கும் ஆதியில் இருந்தவர். பிரணவம்தான் எல்லாவற்றுக்கும் முதல். பிரணவத்திலிருந்துதான் சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபமே பிள்ளையார். அவரது ஆனைமுகம். வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

குழந்தையாக இருந்து கொண்டே ஆதி முதலின் தோற்றமாக இருக்கிற பிள்ளையார் குழந்தை போல் தோன்றினாலும் பக்தர்களை ஒரேயடியாகக் கைதூக்கி உயர்த்தி விடுவதிலும் முதல்வராக இருக்கிறார். ஔவைப்பாட்டி ஒருத்தியின் உதாரணமே போதும். ஔவையார் பெரிய கணபதி உபாஸகி. பிரணவ ஸ்வரூபியான விநாயகரைப் புருவமத்தியில் தியானித்து கொண்டு ஔவையார் யோக சாஸ்திரம் முழுவதையும் அடக்கியதான 'விநாயகர் அகவலை' பாடியிருக்கிறாள். அதைப் பாராயணம் செய்தால் பரமஞானம் உண்டாகும். இந்த ஔவையாரைப் பற்றி ஒரு கதை உண்டு. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் சேரமான்பெருமாள் நாயனாரும்கைலாசத்துக்குப்புறப்பட்டார்கள். அவர்கள் ஔவையையும் உடன அழைத்துப் போக விரும்பியபோது ஔவை விக்நேசுவருக்குப் பூஜை பண்ணிக்கொண்டிருந்தாள். சீக்கிரம் பூஜையை முடித்துத் தங்களுடன் கைலாசத்துக்கு வருமாறு சுந்தரமூர்த்தியும் சேரமானும் அவளை அவசரப்படுத்தி அழைத்தார்கள். அவளோ, 'நீங்கள் போகிறபடி போங்கள். உங்களுக்காக நான் என் பூஜையை வேகப்படுத்த மாட்டேன். விநாயக பூஜையே எனக்குக் கைலாசம்' என்று சொல்லிவிட்டாள். அவர்கள் அப்படியே கிளம்பி விட்டார்கள். ஔவை சாங்கோபாங்கமாகப் பூஜை செய்து முடித்தாள். முடிவில் பிள்ளையார் பிரசன்னமாகி அவளைஅப்படியே தன் துதிக்கையால் தூக்கி ஒரே வீச்சில் கைலாசத்தில் கொண்டு சேர்த்து விட்டார். அவளுக்குப் பிற்பாடுதான் சுந்தரமூர்த்தியும், சேரமான் பெருமாளும் கைலசத்தை அடைந்தார்கள். அங்கே சேரமான் பெருமாள் திருக்கைலாய ஞான உலாவைப் பாடினார். இதை அருணகிரிநாதர் திருப்புகழில்,

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முன் நாளினில்
ஆடல் வெம்பரி மீதேறிமா கயிலையிலேகி
ஆதி அந்த உலா ஆசு பாடிய
சேரர்......

என்பதில் சொல்லாமல் சொல்கிறார். 'அப்படிப்பட்ட சேரர் ஆண்ட கொங்கு தேசத்தில் உள்ள பழனியில் இருக்கிற பெருமாளே' என்று பழனியாண்டவனைப் பாடுகிறார். சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசம் சேர்தற்கு இப்படி குமாரஸ்வாமியின் சம்பந்தத்தை உண்டாக்குகிறார். மூத்த குமாரரான பிள்ளையாருக்கோ ஏற்கனவே அந்த சம்பவத்தில் சம்பந்தம் இருக்கிறது. அந்த இரண்டு பேருக்கும் முன்னதாக, ஒரு சொடக்குப் போடுகிற நாழிகைக்குள் அவர் ஔவைப்பாட்டியைக் கைலாசத்தில் சேர்த்துவிட்டார். பெரிய அநுக்கிரகத்தை அநாயாசமாகச் செய்கிற ஸ்வாமி விக்நேசுவரர்.

விநாயக மூர்த்தியிலுள்ள ஒவ்வொரு சின்ன சமாசாரத்தைக் கவனித்தாலும் அதில் நிறைய தத்துவங்கள் இருக்கின்றன.



பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது எதற்காக? விக்நேசுவரர், தம் அப்பாவான ஈசுவரனைப் பார்த்து, 'உன் சிரசையே எனக்கு பலி கொடு' என்று கேட்டுவிட்டாராம். எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால்தான் மகா கணபதிக்குப் பிரீதி ஏற்படுகிறது. அவ்வாறு பெரிய தியாகம் டண்ணுவதற்குத் தயார் என்பதன் அறிகுறியாகத்தான், ஈசுவரனைப் போலவே மூன்று கண்கள் உடைய தேங்காயைச் சிருஷ்டித்து அந்தக் காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈசுவரன் அநுக்கிரகித்திருக்கிறார்

சிதறு தேங்காய் என்று உடைக்கிற வழக்கம் தமிழ் தேசத்துக்கு மட்டுமே உரியது. இப்படிச் சிதறிய துண்டங்களில் யாருக்கு உரிமை என்றால் குழந்தைகளுக்குத்தான். இந்த உண்மை ஒரு குழந்தை மூலமாகத்தான் எனக்கே தெரிந்தது. அப்போது 1941இல் நான் நாகைப் பட்டினத்தில் சாதுர்மாஸ்ய விரதம் அநுஷ்டித்து வந்தேன். அங்கே கோயிலில் பிள்ளையாருக்கு நிறைய சிதறுகாய் போடுவது வழக்கம். காயை உடைக்கவே இடம் கொடுக்காத அளவுக்குக் குழந்தைகள் ஒரே நெரிசலாகச் சேர்ந்து விடும், திபுதிபு என்று அவை ஓடி வருவதில் என் மேல் விழுந்துவிடப் போகின்றனவே என்று, என்கூட வந்தவர்களுக்குப் பயம். அவர்கள் குழந்தைகளிடம் ''இப்படிக் கூட்டம் போடாதீர்கள். விலகிப் போங்கள்'' என்று கண்டித்தார்கள். அப்போது ஒரு பையன் 'டாண்' என்று, 'பிள்ளையாருக்குத் தேங்காய் போட்டுவிட்டு, அப்புறம் எங்களை இங்கே வராதீர்கள் என்று சொல்ல உங்களுக்கு என்ன பாத்தியதை இருக்கிறது! சிதறுகாய் போட்டால் அது எங்கள் பாத்தியதைதான். அதை எடுத்துக் கொள்ள நாங்கள் வரத்தான் செய்வோம்'' என்றான். அவன் பேசிய ஜோர், அதிலிருந்த உறுதியைப் பார்த்த போதுதான் எனக்கே, 'வாஸ்தவம்தான். குழந்தை ஸ்வாமியின் பிரஸாதத்தில் குழந்தைகளுக்குத்தான் முழு பாத்தியதையும்' என்று தெரிந்தது.

அகங்கார மண்டையோட்டை உடைத்தால் உள்ளே அமிருத ரஸமாக இளநீர் இருப்பதை இந்தச் சிதறுகாய் உணர்த்துகிறது.

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை, பெரிய வயிறு, பெரிய உடம்பு. அவருக்கு 'ஸ்தூல காயர்' என்றே ஒரு பெயர். மலைபோல் இருக்கிறார். ஆனாலும் அவர் சின்னக் குழந்தை; சரி, குழந்தைக்கு எது அழகு! குழந்தை என்றால் அந்தப் பருவத்தில் நிறைய சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சம்கூட இளைக்கக்கூடாது. ஒரு சந்நியாசி நிறைய சாப்பிட்டுக் கொண்டு பெரிய சரீரியாக இருந்தால் அது அவருக்குஅழகல்ல. வயசாகிவிட்டால் ராத்திரி உபவாசம் இருப்பார்கள். குழந்தை அப்படி இருப்பது அழகா! குழந்தை என்றால் அந்தப் பருவத்தில் நிறைய சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சம்கூட இளைக்கக்கூடாது. ஒரு சந்நியாசி நிறைய சாப்பிட்டுக் கொண்டு பெரிய சரீரியாக இருந்தால் அது அவருக்கு அழகல்ல. வயசாகிவிட்டால் ராத்திரி உபவாசம் இருப்பார்கள். குழந்தை அப்படி இருப்பது அழகா! குழந்தை என்றால் தொந்தியும் தொப்பையுமாகக்

கொழுகொழுவென்று இருந்தால்தான் அழகு. நிறைய சாப்பிடுவதுதான் அழகு. குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்க வேண்டும் என்பதை இந்தக் குழந்தைச் சாமியே காட்டிக் கொண்டிருக்கிறார் கையில் மோதகத்தை வைத்துக்கொண்டு.

இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர் விரோதமான சின்னஞ்சிறு ஆகிருதி உடையது மூஞ்சூறு. இதை அவர் தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மற்ற ஸ்வாமிகளுக்காகவது ஒரு மாடு, ஒரு குதிரை, ஒரு பட்சி என்று வாகனம் இருக்கிறது. இவரோ தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய ஸ்வாமியாக இருக்கிறாரோ, அத்தனைக்கு அத்தனை சின்ன வாகனமாக வைத்துக்கொண்டிருக்கிறார். சுவாமி எதை வாகனமாக வைத்துக் கொண்டாலும் வாகனத்தினால் சுவாமிக்குக் கௌரவம் இல்லை. சுவாமியால் தான் வாகனத்துக்குக் கௌரவம். வாகனத்துக்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி நெட்டிப்பிள்ளையார் மாதிரியாகக் கனம் இல்லாமல் இருக்கிறார். அதற்குச் சிரமம் இல்லாமல். ஆனால் அதற்கு மரியாதை, கௌரவம் எல்லாம் உண்டாகும்படியாகத் தம் உடம்பை வைத்துக்கொண்டிருக்கிறார். தூலகாயரான போதிலும் 'பக்தர்கள் இருதயத்தில் கனக்காமல் லேசாக இருப்பேன்' என்று காட்டுகிறார்.

ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வோர் அங்கத்தில் அதிக கௌரவம் இருக்கும். சவுரி மான் (கவரிமான்) என்று உண்டு. அதன் கௌரவம் வாலில், மயில் என்றால் அதற்குத் தோகை விசேஷம். தோகையை மயில் ஜாக்கிரதையாக ரட்சிக்கும். யானை எதை ரட்சிக்கும்! தன் தந்தத்தை நீட்டி வெள்ளை வெளேர் என்று வைத்திருக்கும். இந்தப் பிள்ளையார் என்கிற யானை என்ன பண்ணுகிறது என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்து அதனால் மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக்காட்டிலும் தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை இவ்விதம் இந்த யானை காட்டியது. நியாயத்துக்காக, தர்மத்துக்காக வித்தைக்காக எதையும் தியாகம் பண்ணவேண்டும் என்பதைத் தானே தந்தத்தைத் தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது. ஸ்வாமிக்கும் கருவி என்று தனியாக ஒன்றும் வேண்டியதில்லை. எதையும் கருவியாக அவர் நினைத்தால் உபயோகித்துக் கொள்வார் என்பதற்கும் இது உதாரணம். ஒரு சமயம் தந்தத்தாலேயே அசுரனைக் கொன்றார். அப்போது அது ஆயுதம். பாரதம் எழுதும் இப்போது அதுவே பேனா.

நமக்குப் பார்க்கப் பார்க்க அலுக்காத வஸ்துக்கள் சந்திரன், சமுத்திரம், யானை ஆகியன. இவற்றையெல்லாம் எத்தனை தடவை, எத்தனை நேரம் பார்த்துக்கொண்டிருந்தாலும் அலுப்புச் சலிப்பில்லாத ஆனந்தம் பொங்கும். அதனால் தான் குழந்தைஸ்வாமி தன்னைப் பார்க்கிற ஜனங்களுக்கு எல்லாம், பார்க்கப் பார்க்க ஆனந்தம் எப்போதும் பொங்கிக் கொண்டிருக்கும்படியாக யானை உருவத்தோடு இருக்கிறார். அது ஆனந்த தத்துவம்; ஆராத ஆசையின் தத்துவம். அவர் பிறந்ததே ஆனந்தத்தில், பண்டாசுரன் விக்ன யந்திரங்களைப் போட்டு அப்பாவின் படை தன்னை நோக்கிவர முடியாதபடி, ஆனந்தமாக இந்த பிள்ளையைப் பெற்றாள். அவர் விக்னயந்திரங்களை உடைத்து அம்மாவுக்கு சகாயம் செய்தார்.

அவர் பார்வதி பரமேசுவரர்களுக்குப் பிள்ளை. இந்த உலகத்துக்கே நலம் உண்டாக்க ஆவிர்ப்பவித்தனால் அவரை நாம் 'பிள்ளையார்' 'பிள்ளையார்' என்றே விசேசித்து அழைக்கிறோம்.

எந்த ஸ்வாமியை உபாசிப்பதானாலும் முதலில் விநாயகருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டால்தான் அந்தக் காரியம் விக்கினம் இல்லாமல் நடைபெறும். அவரையே முழு முதற் கடவுளாக, பிரதான மூர்த்தியாக வைத்து உபாசிக்கிற மதத்துக்கு காணாபத்தியம் என்று பெயர்.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக் கரணம் போடுகிறோமே, அதை நமக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்தவர் மகாவிஷ்ணுதான் என்று ஒரு கதை இருக்கிறது. ஒரு சமயம் மகாவிஷ்ணுவினுடைய சக்கரத்தை அவரது மருமானான பிள்ளையார் விளையாட்டாகப் பிடுங்கிக் கொண்டு தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து திரும்பப் பிடுங்குவது முடியாது. அவர் மிகவும் பலம் உடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால் அவரை சிரிக்க வைத்துச் சந்தோஸத்தில் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தால் எடுத்துக் கொண்டு விடலாம் என்று மகாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டுவிட்டார்.

''தோர்பி கர்ணம்'' என்பதேதோப்புக் கரணம் என்று மாறியது. 'தோர்பி' என்றால் 'கைகளினால்' என்று அர்த்தம். 'கர்ணம்' என்றால் காது, 'தோர்பி: கர்ணம்' என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

விக்நேசுவரருடைய அநுக்கிரகம் இருந்தால்தான் லோகத்தில் எந்தக்காரியமும் தடையின்றி நடக்கும். தடைகளை நீக்கிப் பூரண அநுக்கிரகம் செய்கிற அழகான குழந்தைத் தெய்வம் பிள்ளையார். அவரைப் பிரார்த்தித்து. பூஜை செய்து, நாம் விக்கினங்கள் இன்றி நல்வாழ்வு வாழ்வோமாக.

மாயையை வெல்வோம்!

நல்லாசிரியர் வெ. சுந்தரம், எம்.ஏ.

மாயை எனபது 'வேதாந்தக் கோட்பாடாம் கோயிலைத் தாங்கும் தூண்களில் ஒன்றெனலாம். உண்மையை மறைக்கும் திரை என்றும் கூறுவர். வீண் பேச்சிலும் புலனின்பத்திலும் திருப்தி கொள்வதும் அவற்றையடைய ஆசைகளின்பால் மனத்தை அலையவிடுவதும் மாயையாகும். நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளதோற்றத்தையும்அதன் அறிவிப்பை உணர்த்துவதே மாயை.

அங்கெங்கெனாதபடி ஆன்ம தத்துவம் எங்கும் நிறைந்திருக்கிறது. வேதங்களின் பகுதிகளான பிராம்மணங்களில் இது காணப்படுகிறதென வேதமறிந்தவர் கூறுவர். வேத கால ஞானிகள் துணிவுமிக்கவர்களாகவும் வெளி உலகத்தை ஆதாரமாகக் கொண்டு பிரபஞ்சத்துக்கு அவர்கள் கண்ட முடிவு மிகவும் ஆரோக்கியமான திருப்தி தருவதாகும்.

இருப்பு மற்றும் இல்லாமை (சத், அசத்) இரண்டின் கலப்பே உலகம். தன் அறிவை விரிவாக்கி அறிவைக் கடந்திட ஆசை கொள்ளும் மனிதனிடம் சுயநலம் என்ற மாயை திரையிட்டுத் தடுக்கிறது. அம்மாயையை விட்டு வெளியேற வேண்டும். சுயநலமின்மை ஒன்றுதான் நன்மைதரும்.

பத்து மாதம் சுமந்து பல நோவுகட்குப் பின் ஈன்றெடுத்தாள்அருமைமிகு குழந்தையை, குழந்தை வளர்ந்து பெரியவனாகி விதிவசத்தால் தாயைக் கொடுமைப்படுத்துகிறான். அவனது கொடுமைகளைப் பொறுக்க முடியாத தாய் தெய்வத்திடம் முறையிட்டு மகன் திருந்தி வாழப் பிரார்த்திக்கின்றாள். அவளது அறிவு விழித்து அவனைத் திட்டினாலும், 'இறைவா ஆத்திரத்தில் திட்டி விட்டேன். அவனுக்கு என் சொற்கள் பலிக்காமல் நன்மை. ஆசீர்வதிக்க வேண்டும்' என மனமுருகி பிரார்த்தனை செய்கிறாள். இங்கு விழித்தெழுந்த அறிவைப் பாசம் என்ற மாயை மறைக்கிறது.

ஒருவருக்கு இன்பமாகத் தோன்றுவது மற்றொருவருக்குத் துன்பமாகத் தோன்றுகிறது. மிருககுணம் மனித மனத்தில் புலனின்ப நுகர்ச்சியைத் தூண்ட அதை ஒழிக்க முடியாத நிலையிலும், அடையமுடியாத நிலையிலும் துன்பமாகிறது. இன்பங்களின் நாட்டமே முன்னேற்றம் என்று எண்ணி ஆடம்பர, அவசியமற்ற தேவைகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது அத்தேவைகள் எப்போதும் உடனே இன்பம் தருவதில்லை.

புலனின்பங்களிலிருந்து விடுபட்டாலே மாயையைக் கிழித்து தூய இன்பம், பேரின்பம் பெற முடியும். தானே வருமின்பத்தையும் சர்வசாதாரணமாக எண்ணும் நிலை வந்து விட்டால் துன்பம் தோன்றியபோதும் சஞ்சலம் கொள்ளாது சமத்துவ நிலை கொள்ள முடியும்.

வாழ்க்கை முரண்பாடுகள் நிறைந்தது. முரண்பாடுகளிலே முக்கியதவம் பேரின்ப நிலை பெற அமைதல் வேண்டும். நன்மை இருக்குமிடத்தில் தீமையும் இருக்கத்தான் செய்யும். இரண்டையும் ஒன்றாகப் பாவித்து மனஅமைதி கொள்ள மனப்பக்குவம் தேவை..

சிறிது நேரமேனும் இன்ப துன்ப இல்வாழ்க்கையை மறந்து இறைத்தியானம் செய்யும்போது இறையாற்றல் உடல் முழுதும் பரவி பேரின்ப காந்த ஆற்றலைத் தோற்றுவிக்கும்.

இன்பம்-துன்பம் நன்மை-தீமை பிறப்பு-இறப்பு என்பவற்றின் கலப்பினமே உலகம். ஒன்றுமட்டும் அதிகமாகி மற்றொன்று குறைவது என்று நினைப்பதே மாயை. ஒன்று அதிகரிக்கும்போது மற்றொன்றும் நிச்சயம் அதிகரிக்கத்தான் செய்யும்.

பிரபஞ்சத்தில் உள்ள எவையுமே முற்றும் நன்மை தருவன என்றோ தீமை தருவன என்றோ கூற முடியாது. மரணமற்ற வாழ்வு, துன்பமற்ற இன்பம் என்பன முரண்பாடானவைகளாகும்.

பிரபஞ்சத்தை இயக்கும் சக்திகளாக நன்மையும் தீமையும் விளங்குகிறது. மனம், புத்தி, புலன்கள் இவற்றின் மூலமாக நாம் பெறும் அறிவு ஓர் எல்லைக்குட்பட்டதே. எல்லைக்கு அப்பாற்பட்டதை உணரத்துடிக்கும்



R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

மனம் துறவு கொள்கிறது. இங்கு துறவு என்பது தேவையற்ற ஆசைகள், காமக்குரோத லோப, மதமாச்சரியங்களை நீக்குதல் எனக் கொள்ளல் வேண்டும்.

பற்றை விட்டு துறவு மனம் கொண்டுவாழ முயற்சிக்க வேண்டும். ஆசைகளை அனுபவிப்பதால் அவ்வாசை தீர்ந்து விடாது. எரியும் தணலில் நெய்யூற்றியது போல அனுபவ ஆசை சூழ்நிலைப் பற்றாக, கடும் பற்றாக நெடிய துன்பத்திற்கு வழி வகுக்கிறது. இவ்வுண்மை உணரும்போது ஆசை குறைந்து இறை பூசையில் மனம் ஈடுபடும்.

வேகமிகுந்த ஆறு கடலை நோக்கிப்பாயும்-
இறைத்
தாக மிகுந்த மனம் தியானத்திலே தோயும்
சோகமிகுந்த போதில் சுகசாந்தி நாடும்-ஞான
போகமிகுந்த வாழ்வில் யோகசக்தி கூடும்.

தத்தம் குறிக்கோளை நோக்கி அலை பாயும் மனம், உயிர்கள் எனப்படும் யாவுமே காலப்போக்கில் கடவுள், சுதந்திரம், முக்தி என்று பல்வேறாகக் கூறப்படும் முழுமையான எல்லையற்ற பரம்பொருளாம் கடலில் கலந்தாக வேண்டும்.

மதங்கள், புராணங்கள் திருஉருவ வழிபாடு, ரிசிகள், மகான்கள், மதாச்சாரியர்கள் இவர்களைப் பற்றிய செய்திகள்-நுட்பமான வேதாந்தத் தத்துவங்கள் போன்றவை உண்மையாம் ஞானக்கடலில் கலந்தின்புற அமைந்தவையே! ஆன்ம விடுதலையே ஆன்ம நேய உயர்வாகும்.

'உலகம் முழுதும் நன்மைகள் நிறைந்த பின் நானும் நலன் செய்ய முயல்வேன்'' என்று ஒருவன் கூறினால் 'கடலலை நின்றபின் குளிக்க முயற்சிப்பேன்' எனக் கூறுவதற்கொப்பாகும்.

நாம் மேற்கொள்ளும் வழி மாயையைப் பின்பற்றாமல் அதை எதிர்த்துப் போக வேண்டும். இயற்கையை அனுசரிப்பதல்ல வாழ்க்கை. இயற்கையை எதிர்த்துப் போராட வேண்டும். இயற்கையை-அதன் சீற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

மழைக்காலங்களில் மழைநீர் ஓடி ஆற்றில் கலந்து கடலில் இணைவதும் மழையற்ற காலங்களில் வாடியிருப்பதும் இயற்கை. இதை எதிர்த்துப் போராடி பல்வேறு ஏரிகள், குளங்கள் கண்மாய்கள் ஏற்படுத்தி ஆழப்படுத்தி நீரை மழைக் காலத்தில் தேக்கினர்.

மழையற்ற காலங்களில் நீர்நிலைகள் மனிதத் தேவைக்கு, ஏன் எல்லா உயிர்கட்கும் உதவியது. நிலத்தடிநீர் உயிரின வாழ்வுக்குப் வளத்தைத் தந்தது. குளங்களை மேடாக்கித் தன் ஆடம்பரத் தேவைக்களான வீடுகளாக மாற்றி தற்கால இயற்கைக்கு இடம் கொடுத்த காரணத்தால், இயற்கையை எதிர்த்துப்பெற்ற வெற்றியை இன்று மனிதன் இழந்து கொண்டிருக்கின்றான்.

மனிதனுக்குள்ளேயும் இஃதே போன்ற போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மனிதனுள் இருக்கும் மிருகத்தன்மைக்கும் ஆன்மீகத் தன்மைக்கும் போராட்டம். இருளான மாயைக்கும் ஒளியான ஞானத்திற்கும் போராட்டம். இயற்கையின் மாயத்தளைகளை அறுத்தெறிந்தவன் ஒளிமிகு ஞானியாக விளங்குகிறான்.

மாயைக்குக் கட்டுப்படாமல் மாயையைக் கடந்து நின்று உண்மையை உணர்த்தியவர்கள் பற்பல மகான்கள் யோகிகளும் சித்தர்களும், ஞானிகளும் இப்பாரதத்தில் பல்வேறு இடங்களில் தோன்றி உலகு உணர பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைகளில் உண்மையை உணர்த்தினர்.

ஆச்சாரியார்கள் போன்றவர்கள் தாமுணர்ந்ததை மற்றையோரும் பின்பற்ற சீடர்களை உருவாக்கி மடங்களைத் தோற்றுவித்து மாயையிருளகல தோயும் ஞானஒளி பெருகப் பாடுபட்டனர் வழித்தோன்றல்கள் கடமையைக் கனிவுற நடாத்தியும் வருகின்றனர்.

ஸ்ரீராமகிருஷ்ண பரம அம்ஸரின் ஞான ஒளியை மகான் விவேகானந்தர் உலக இருள் அகற்ற சோதிச்சுடர் ஏற்றினார்.

மாயை என்பது ஒரு கொள்கையல்ல. உலகம் உள்ளபடியே எப்படி இருக்கிறதென்னும் உண்மையின் அறிவிப்பாகும்.

கடவுள் மாற்றமில்லாதவர். அதேபோல் உண்மையான மனிதன் மாற்றமடைய முடியாது. மனிதர்கள் கடவுளைப் பற்றிஎண்ணிக் கொண்டிருக்கும், விளங்கிக் கொண்டிருக்கும் கருத்துக்கள் மாறிக் கொண்டும் விரிவடைந்து கொண்டும் இருக்கும். மனித வளர்ச்சிபோல் கடவுள் வளர்ச்சி என்று கொள்ளலாம்..

எப்போதும் மாறாத, தூய்மையான அசைவற்ற கடவுள் மனித எண்ணங்கள் கடவுளைப் பற்றி விவரிக்கும்போது, ஆற்றல்களை அறிந்தவர், அவரவர் கூறியதற்கேற்ப, பின்னாலிருக்கும் உண்மையை அதிகமாக வெளிப்படுத்தும் போது கடவுள் வளர்ச்சி எனக்கூறப்படுகிறது. தெய்வ வளர்ச்சி மனிதமனவளர்ச்சியோடு தொடர்புடையதாகிறது.

மனிதர்கள் தங்கள் தலையில் உள்ள மூளையை தாங்களே பார்த்தது கிடையாது. ஆனால் மூளை இருப்பதையும் செயல்படுவதையும் மறுப்பதில்லை. ஞானம் அஞ்ஞானம்ஆன்மீக ஒளி, இருள், பொய், உண்மை இவை சந்திக்குமிடம் எது?விஞ்ஞானப் பெருமைகளை மனித அறிவு கண்டதெனப் பெருமையைதற் பெருமை கொள்ள முடியும். ஆனால் விஞ்ஞானம் என்ற அளவிட்டு அறிவுக்கும் அப்பாற்பட்ட சக்தியை உணரும் நிலையே மெய்ஞ்ஞானம்.

வேதாந்தம் ஒன்றுதான். உலக மதங்களுக்குள்ளேயே துணிச்சல்மிக்க செம்மைசேர் கொள்கைகள் கொண்டது. இந்தியா ஆன்மீக விஷடத்தில் பரிபூரண சுதந்திரம் கொண்டது. சுதந்திரம் இல்லாதது நல்ல வளர்ச்சி பெறுவது ஏது?

உலக மக்களை தங்கள் மக்களாக நம் பாரத மண்ணில் தோன்றிய ரிசிகள் நினைத்தனர். அன்பின் சக்தியால் அல்லலின்றி வாழும் நெறிமுறைகளை வேதாந்தக் கருத்துக்களாக உபதேசம் செய்தனர். தெய்வீக சக்தியை ஏற்ற மகான்கள் மக்களின் நலனே மகேசன் தொண்டு என வாழ்ந்தனர். எல்லோரிடமும் இரக்கம் காட்டினார்கள். பொறுமை மிக்கவராக விளங்கினர். உண்மையான தந்தையாக வாழ்ந்தனர். பொறுத்துக்கொள்ளும் உயரிய பண்பும், மன்னிக்கும் மாண்பும் மகிமை பெற வைத்தது.

மக்களை பயமுறுத்தாமல், மற்றவர் கொள்கைகளை மறக்காது, அன்பின வடிவமாக படிப்படியாக மனிதரை தெய்வநிலை உணரச் செய்ய முயன்றார்கள். உபநிடதங்கள் இவர்களால் உயர்வடைய வழிகாட்டியது. ஸ்ரீஆதிசங்கரர் விஷ்ணு சகஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் எழுதியதும் சான்றுக்கு ஒன்றாகும், தவிர மக்கள் அவரவர் விருப்பப்படி இறைவழிபாடு செய்ய ஷண்மத ஸ்தாபனம் செய்தது குறிப்பிடத்தக்கதாம்

பலவகையில் பஞ்சபூதங்களின் சக்தியாக விளங்கும் இவ்வுலகில் எல்லாவற்றுள்ளும் ஊடுருவி நிற்கும் ஒரே தத்துவத்தை விளக்கினார்கள், மரணம் நிறைந்த இவ்வுலகில் மரணமற்ற ஆத்மாவைக் காண முயல வேண்டும். ஒளிமிகு ஞானதத்துவத்தை அறிய முயல்கின்ற மனிதரே அமைதி பெற முடியும். பூத உடல் மறைந்தாலும் புகன்ற தத்துவஅலைகள் மாயையை நீக்கும். நிர்குண பிரமம் நிறைந்த உலகை நினைவலைகளில் நிறுத்தமுடியும்.

மாயை மறைய மன அமைதி கொள்ள இறையருள் நிலைக்க மகான்களின் உரைகள் மக்கள் மனத்தில் நிலைக்க உலகு அமைதிப் பூங்காவாக விளங்க இறையருள் கூட்ட இனிதே பிரார்த்திப்போம்.



அருள் வழங்கும் வயலூர் திருக்கோயில்

'ஸ்தபதி' வே. இராமன்

இன்றைய நாளில் எல்லோராலும் வயலூர் முருகன் கோயில் என்றழைக்கப்படும் புகழ்பெற்ற இக்கோயில், திருச்சியிலிருந்து 11 கி.மீ. தொலைவில் புத்தூருக்கு மேற்கே செந்நெல், வாழைத்தோப்பு மற்றும் தென்னை மரங்களுக்கு இடையே இயற்கையான சூழ்நிலையில் அமையப் பெற்று விளங்கும் இத்திருத்தலமானது தூரத்திலேயே கண்டு தரிசிக்கும் வகையில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் இராஜகோபுரத்தை பெற்று அருள்மணம் பரப்பும் திருத்தலமாகும். சோமரசம் பேட்டை, வயலூர், முள்ளிக்கரும்பூர் ஆகிய இடங்களுக்கு செல்லும் நகரப் பேருந்துகளில் வயலூர் கோயிலுக்குச் செல்லலாம்.

கருவறை, முகமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், அம்பாள் மண்டபம், பரிவார ஆலயங்கள், அம்பாள் கோயில், கோபுரம் திருமதில் மற்றும் திருக்குளம் எனப்பல அங்கங்களை தன்னகத்தே கொண்டு சிறப்புபெற்று இருப்பது இத்திருக்கோயில். இருப்பினும் காலத்தால் மிகவும் பழமை வாய்ந்தது கருவறையும் அதனைச் சார்ந்த முகமண்டபமும் ஆகும்.

இக்கோயிலின் கட்டடக்கலை அமைப்புக் கொண்டும் கல்வெட்டுச்சான்றுகளை கொண்டும் இத்திருக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தியது என அறிய முடிகின்றது. இக்கோயில் எடுப்பிக்கப்பட்ட காலத்தே சிவத்தலமாகவே இருந்து வந்தது இச்சிவத் தலத்து ஈஸ்வரனை திருக்கற்றளிப் பரமேசுவரர், திருக்கற்றளிப் பெருமான், திருக்கற்றளி மகாதேவர், அக்னீசுவரமுடைய மகாதேவர் என்றெல்லாம் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுச் சான்றுகளால் அறிகின்றோம். பிற்காலத்தில் பரிவார ஆலயமாக எடுப்பிக்கப்பட்ட முருகப் பெருமானின் புகழ் சிறக்கவும் பழமை மறைந்து ''வயலூர் முருகன் கோயில்'' என சிறப்பு பெயர் பெற்று புகழ்பெற்றது.

தற்போது மூலவர் ஆதிநாதர் என்றழைக்கப்படும் பழமை வாய்ந்த திருக்கற்றளிப் பரமேசுவரரின் கருவறை சதுர அமைப்புடையது. இவ்வமைப்பானது அதிட்டானம் (தாங்குதளம்) பித்தி (சுவர்) பிரஸ்தரம் (கூரை) கிரீவம் (கழுத்து) சிகரம் (தலை), ஸ்தூபி (கலசம்) என்ற ஆறு பெரும்பகுதிகளை சிற்பநூல் மரபுப்படி கொண்டமைந்துள்ளது ஒவ்வொரு பகுதியும் உடல நுணுக்கமான உறுப்புக்களை அளவோடு பெற்றுத் திகழ்கின்றது. தாங்குதளம் முதல் சிகரம் வரை கருங்கற்களால் உருவாக்கப்பட்டதாகும் இதனைக் கற்றளி என்பர். கூரைக்கு மேல் இடம் பெறும் விமானத்தின் கிரீவமும், சிகரமும் நாகரபாணி வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இறுதியில் இடம் பெறும் ஸ்தூபி செப்பு கலசமாக அமைந்துள்ளது.

3.80 மீ. நீள அகலமுடைய கருவறை மூன்று பத்தி அமைப்பு முறையினைக் கொண்டுள்ளது. மையப்பகுதி சற்று முன் வந்ததாய் முகபத்ரமாய் அமைந்துள்ளது. இப்பகுதியின் நீளம் 101 செ. மீ. ஆகும். அடிப்பகுதியான தாங்குதளம் ஜெகதி, எண்பட்டை, குமுதம், கண்டம், பட்டிகை என்ற அங்கங்களைப் பெற்றுள்ளன. கண்டம் பகுதிக்கு கீழும், மேலும், பட்டிகைக்கு மேலும் கம்பு எனும் சிற்றுறுப்பு இடம் பெற்று அணி செய்கின்றது. இவ்வகை தாங்குதள அமைப்பினை இம்மாவட்டத்தில் திருஎறும்பியூர், துடையூர், பெருங்குடி, திருப்பைஞ்ஞீலி, கோபுரப்பட்டி, திருமங்கலம், கோயில்களின் கட்டடங்களில் அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வூர்களில் அமைந்துள்ள இவ்வகை தாங்குதளத்தில் குமுதம் எண்பட்டை வடிவில் இடம் பெற்றிருப்பதும், பட்டிகை இடம் பெற்றிருப்பதும் நோக்கத்தக்கதாகும் இவ்வமைப்பு சோழர்கால கோயில்களுக்கேயுரிய சலைமுறையாகக் கருதலாம். இத்தாங்குதள உறுப்புகள் யாவும் எளிமையான முறையில் அமைந்து வலிமையான கட்டமைப்பை பெற்றுள்ளன. 101 செ மீ. உயரமுடைய இக்கட்டமைப்பை 'பாத பந்தம்' எனச் சிற்பநூல் கூறுகின்றது.

தாங்குதளத்திற்கு மேல் இடம் பெறும் அங்கத்தைக் கருவறை புறச்சுவர் என்பர். இப்புறச்சுவர் புறத்திற்குநான்குமுழுக்கால்களைப் பெற்றமைந்துள்ளன. சதுர அமைப்புடையதாய் காணப்படும் இக்கால் அமைப்பினைப் 'பிரம்மகாந்தகால்' என்பர். கால்பகுதியானது கால், பத்மகட்டு, கலசம், குடம், பலகை, கண்டம், போதிகை என்ற உறுப்புக்களைக் கொண்டமைந்துள்ளது. முகபத்ர அமைப்பில் இடம் பெறும் தேவகோட்டத்தின் மேல் தோரணங்கள் சிற்பக்கலை நுணுக்கத்தோடும் எழில் சிறக்கவும் சித்தரித்துள்ள பாங்கு

போற்றத்தக்கதாகும். இத்தோரணங்களின் மையப்பகுதியில் சிற்றுருவச் சிற்பங்களைச் சிற்பச்செறிவோடு இடம் பெறச் செய்துள்ளனர் சோழர் கால சிற்பிகள்.

292 செ.மீ. நீளமுடைய முகமண்டபமானது கருவறைச் சுவற்றினின்றும் 47 செ மீ. உள்ளடங்கி மூன்று பத்தியமைப்பு முறையில் முகபத்ரம் ஏதுமில்லாமல் நீண்டு செல்கிறது. இம்மண்டபத்தின் வனப்புமிக்க நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் நீண்டு செல்கிறது. இம்மண்டபத்தின் வனப்புமிக்க நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் இரு துவாரபாலகர் சிற்பங்கள் அழகு செய்கின்றன. இத்திருவுருவங்கள் தொடக்க சோழர்கால கலைச் சிறப்பினை பறைச்சாற்றும் அழகுமிக்க அரிய கலைப்படைப்பாகும்.

பிரஸ்தரம் எனப்படும் கூரைப் பகுதியானது உத்தரம், வலபி, கபோதகம் என்ற உறுப்புக் களைப் பெற்றுள்ளது. வலபி வரியில் பூத கணங்கள் பல்வேறு நிலைகளில் வரிசையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தென்புற முக மண்டப வலபியில் லிங்கோத்பவர் சிற்பமும் இச்சிற்பத்திற்கு வலதே வராக அவதாரமும், இடத்தே பிரம்மாவும் அழகுற அமைந்துள்ளனர். இவ்வமைப்பும் சோழர்காலச் சிற்பிகளின் சிற்பக்கலை நுணுக்கத்தை, கற்பனைத் திறனை வெளிப்படுத்துவனவாக அமையப் பெற்றுள்ளன எனக் கூறலாம். கபோதகமானது கூடுகளையும், கருக்கணிகளையும் பெற்றுத் திகழ்கின்றன. கூரையின் மேல் இடம் பெறும் விமானப்பகுதி கற்றளியாக இருந்த போதிலும் தற்போது சுண்ணம் மேல் பூச்சாகப் பூசப்பட்டு வண்ணப்பூச்சு எழில்பட தரப்பட்டுள்ளது.

உண்ணாழியில் எழுந்தருளியிருக்கும் ஆதிநாதரின் ஆவுடையார் வட்ட வடிவமாகும். இதனை 'வேதிபத்ர பீடம்' என்பர். நந்தி பீடம், பலிபீடம், கொடி ஸ்தம்பத்தை அடுத்து இடம் பெறும் எழில்மிகு ராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையதாகும். இக்கோபுரத்தில் பல்வேறு சுதைச் சிற்பங்கள் இடம் பெறச் செய்து அழகூட்டுவனவாக அமைத்துள்ளனர். வடக்குப் பக்கம் வாயில் ஒன்றினை அமைத்து மூன்று நிலைகளையுடைய புதிய கோபுரத்தை எடுப்பித்துள்ளனர். இக்கோபுரத்திலும் பல்வேறு சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோபுரங்கள் கட்டடக்கலைத் திறனும், சிற்பக்கலையின் செழுமையையும் ஒருங்கே கொண்டு விளங்குகின்றன. இக்கோபுரச் சிற்பங்களை யாவரும் கண்டுகளிக்கும் அளவில் சிறந்த முறையில் இன்றைய தமிழகத்துச் சிற்பிகள் தோற்றுவித்துள்ளனர். சிற்பங்களைக் கோபுரங்களில் தோற்றுவிக்கும் முறை சோழர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. இராசராசன் எடுப்பித்த தஞ்சை பெரியகோயில் கோபுரங்களில் அழகிய சிற்பங்களை இன்றும் காணலாம். இம்மரபினை பின்பற்றியே வடக்குவாசல்கோபுரத்தை எடுப்பித்துள்ளனர் இந்நாளைய சிற்பிகள்.

கலைநயம் மிகுந்த விமானங்களையும், கோபுரங்களையும் பக்தி பரவசப்படும் வகையில் அழகுற அமைத்துள்ளார் ஸ்தபதி எஸ். நடராஜன். பழமை வாய்ந்த அருள்மிகு ஆதிநாதர் சுவாமி சன்னதியின் கருவறை மற்றும் முகமண்டப புறச்சுவர் பகுதிகளில் அமைந்துள்ள வரலாற்றுக் கல்வெட்டுகளை அதன் பழமை மாறாது திருப்பணி செய்யப்பட்டிருக்கும் முறை பெரிதும் பாராட்டுதலுக்குரியதாகும். கருவறை புறச்சுவர்களில் இருபது கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. அவை யாவும் வரலாற்றுச் சிறப்புடையதாகும். இக்கல்வெட்டுகளில் ஒன்று சுவையான செய்தியாக அமைந்துள்ளது. அக்கல்வெட்டு இக்கோவிலில் நடைபெற்ற விழாக்கள் பற்றிய குறிப்பினைத் தருகிறது. நக்கன் நாகை என்னும் ஆடல் மகள் விசுத் திருநாளின்போதும் வைகாசித் திங்களில் வரும் இன்னொரு திருவிழா நாளன்போதும் இத்திருக்கோயிலில் விளக்கெரிக்கவும் வழிபாடுகள் நிகழ்த்துவதற்கும் நிலக்கொடை அளித்த செய்தியையும், இவ்வூரின் மேற்கே அமைந்திருந்த அம்பலம் ஒன்றைப் புதுப்பிக்க நிலமளித்ததையும் தெரிவிக்கின்றது.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் முதலாம் ஆதித்த சோழனால் எடுப்பிக்கப்பட்ட சுற்றளி முதலாம் பராந்தகன் மற்றும் முதலாம் இராசராசனின் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டு வளர்ந்த இத்திருக்கோயிலை இன்று புதுப்பொலிவோடு சிறக்கச் செய்து எழில்மிகு திருக்கோயிலாகப் புதுப்பித்து, குடமுழுக்கு கண்டுள்ளனர்.

சிவத்தலமாக இருந்து முருகன் தலமாக மாறி குமரன் குடியிருக்கும் குமாரவயலூர் திருமுருகன், குடமுழுக்கு விழா கண்ட பெருமிதத்தில் உள்ளார். எல்லோருக்கும் திருவருள் புரியும் அப்பெருமானை நாமும் தரிசித்து வாழ்வில் இன்பமும் வளமும் பெறுவோமாக.

மனம் எனும் குரங்கு

ஆ. சுப்பிரமணியன்

முன்னுரை :

பெரியவர்கள் 'மனம் போல வாழ்க' என்று வாழ்த்துரை வழங்குவார்கள். நல்ல மனமுடையவனைத்தான் மனிதன் என்று ஆன்றோர் கூறுவர். மனத்தைக் கட்டுப் படுத்த சாதாரண மனிதனால் முடியாது. ஏன்! தவம் செய்தவர்களே மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதைப் புராணங்கள் மூலம் அறிகிறோம். மான் ஓரிடத்தில் சும்மா இருக்காது. அலைந்து கொண்டேயிருக்கும். மானைப் போன்று அலையும் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகவே சிவ பெருமான் கையில் மானைப் பிடித்திருக்கிறார். மனம் விண்ணிலே பாயும், மண்ணிலே தவழும். எங்கெல்லாம் செல்ல வேண்டுமோ சென்று சென்று திரும்பும். மனதை உயர்மனம் என்றும் தாழ்மனம் என்றும் பகுத்துக்கூறுவர். உயர் மனம் என்பது சத்தியம், நேர்மை, அன்பு வழிபாடு என்ற ஆன்மீக வழியை நாடும், தாழ் மனம் என்பது உலக பந்தபாசங்களில் சிக்கி அதர்ம வழியில் சென்று, காம, குரோத, உலோப, மோக, மத, மாற்சரிய என்று அறுவகைப் பிடியுள் அகப்பட்டுத் தவிக்கும். ஒரு சிலர் நமது மனத்தை பேதை மனம், குரங்கு மனம். ஏவல் மனம் என்று பகுத்துக் கூறுவர். பேதை மனத்தால் பித்துப் பிடித்து, உழன்று, வஞ்ச வாழ்க்கையில் மயக்கமுற்று அல்லல் படுவதை எண்ணி இராமலிங்க சுவாமிகள் இத்துன்பத்திற்கு எல்லையே இல்லை என்று வருந்துகிறார். சுவாமிகள் இத்துன்பத்தை

''பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ

பேயேறி நலிகின்ற பேதையானேன்''.

என்று அவரியற்றிய மகாதேவ மாலையில் குறிப்பிட்டுள்ளார்.

உருவகம்: இத்தகைய மனத்தை அறிஞர்களும், கவிஞர்களும், அருளாளர்களும் பலவகைகளில் உருவகித்துப் பாராட்டியுள்ளார்கள். மனம் எனும் நெடுந்தேர், 'மனம் எனும் மாயப்புரவி, 'மனம் எனும் தோணி' கல் மனம், 'இரும்பு மனம், 'மனம் எனும் காடு' 'மனக்கோயில், 'மனக்குகை' 'மனமலர் என்று கூறிப் பாராட்டியுள்ளார்கள்.

குரங்கு மனம் : என்னுடைய மனம் ஒரு குரங்கு, பேய்க்குரங்கு, கிளைக்குக்கிளை, மரத்திற்கு மரம் தாவும். கள்ளுண்டு கலங்கும். பேய் கொண்டு அலையும். கோலினால் மொத்துண்டு அலையும். பித்துண்டு திரியும் சக்கரம் போல் சுழலும். சூறாவளியில் சிக்கி விண்ணிலே காற்றாடி போல் பறக்கும். கால வடிவம் என்பதா! இந்திரசால வடிவம் என்பதா! காம வடிவம் என்பதா! சொல்ல அறியேன், மூவகை ஆசைகளாகிய மண், பெண், பொன் இவைகளில் சிக்கவைத்து அலைக்கழிக்கும். இதோ வள்ளற்பெருமானின் திருப்பாடல்:

''பேய்கொண்டு, கள்ளுண்டு, கோலினால் மொத்துண்டு

பித்துண்ட வன்குரங்கோ?

பேசுறு குலாலனால் சுழல்கின்ற திகிரியோ

பேதை விளையாடு பந்தோ?

கால் கொண்டு பாய்கின்ற வெவ்விலங்சோ? பெருங்

காற்றினால் சுழல்கறங்கோ?

கால வடிவோ இந்திரசால வடிவோ எனது

கா்ம வடிவோ அறிகிலேன'',

என்று வருந்திப் பாடுகின்றார்.

ஒரு குரங்கு சிறிது மது அருந்தி ஆட்டம் போடுகிறது. அத்துடன் ஒரு தேள் கொட்டி விட்டது. இயல்பாகவே ஆட்டம் போடும் குரங்குக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் எந்த நிலையை அடையுமோ. அந்த நிலையில் மனிதனை மனம் அந்தப்பாடுபடுத்துகிறது.

பொருத்தம் : குரங்கு ஓரிடத்தில் இருக்காமல் கிளைக்குக்கிளை தாவுவது போல மனித மனமும் ஓரிடத்தில் நிற்காமல் அலைந்து கொண்டிருக்கும். பல தீய எண்ணங்கள் தோறும் தாவித்திரியும். குரங்கு காடுகளில் ஓடி அலைந்து திரியும். மலைகளில் ஏறும் பள்ளங்களில் பாயும். அது போல மனமும் வேட்கைஎனும் உலகியல் காடுகளில் அலையும். மகளிர் முலைக்குவடுகளில் சஞ்சரிக்கும். ஐம்புல ஆசைகளாகிய கிளைகளில் சஞ்சரிக்கும் நன்று. தீது என்று பாராமல் எதையும் பற்றிக் கொள்ளும்.

இத்தகைய குரங்கு மனத்தைத் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும். காட்டிலே திரிந்த குரங்கைப் பிடித்து வந்து அதைப்பழக்கி அதற்குச் சட்டைபோட்டு கலை உணர்வை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் உலாவ விடுகிறான் ஒரு குரங்காட்டி. அதைப் போல, நம்முடைய மனத்தையும் ஒரு குரங்காட்டியிடம் ஒப்படைக்க வேண்டும். அலையும் மனத்தைக்கட்டுப் படுத்தி ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து அதை நல்வழிப்படுத்த அவனால்தான் முடியும். அவன் யார் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அவனே முழுமுதற் கடவுள். இறைவனிடம் அடைக்கலம் புகுந்து, அவனிடம் அன்புசெய்து அவனிடம் நமது மனதை ஒப்படைத்து அவன் திருநாமங்களை விடாமல் உச்சரித்து ஒழுகினாலன்றி மனதைக் கட்டுப்படுத்தி ஒருமுகப் படுத்த இயலாது. மனத்துக் கண் மாசில்லாத நிலையை உருவாக்கி, இறை வழிபாட்டின் மூலம்தான் மனக்குரங்கை அடக்கி நல்வழிப் படுத்த முடியும்.

சிவானந்தலகரி : ஆதிசங்கரர் தாமியற்றிய சிவானந்த லகரி என்ற நூலில் பின்வருமாறு இறைவனை வேண்டுகிறார்.

சிவபெருமானே! என் மனம் எப்பொழுதும் உலகபந்த பாசமாகிய காட்டில் உலவிக் கொண்டிருக்கிறது. இளம்பெண்களின் ஸ்தனங்களாகிய முலைக்குவட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது. ஐம்புல ஆசைகளாகிய கிளைகளில் மாறி மாறிக் கீழும் மேலும் தாவிக் கொண்டிருக்கிறது. கட்டுப்பாடில்லாமல் எங்கெங்கோ சுற்றித்தறிகெட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. இத்தகைய மனக்குரங்கை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அதை அடக்கித் திருத்தி நல்வழிப்படுத்துதல் உனது கடமை. பக்தி எனும் கயிற்றால் கட்டி உன்னிடம் வைத்துக் கொள். பெருமானே! கபாலத்தில் பக்தர்களின் அன்பைப் பிச்சையாக ஏற்பதற்குத் திரிந்து கொண்டிருக்கும் உனக்கு இம்மனமாகிய குரங்கு உதவியாக வருவதில் தவறில்லையே! இதோ அச்சமஸ்கிருதப் பாடலின் தமிழாக்கம்.

''மோகமாம் அடவி திரிந்து அரிவையர் தம்

முலைக்கு வட்டிடை நடனமாடித்

தாசமாம் ஆசைத் திருக்குலம்தோறும்

தாவும் என் புன மனக்குரங்கைப்

பாகமார் பக்தி நாண் கொடுபட்டிப்

பலிக்கு நீ செல்க! யான்கொடுத்தேன்

ஏகநாயகனே! தில்லையில் ஆடும்

இறைவனே! எம்பெருமானே!''

இப்பாடலை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தமது இறுதிக்காலத்தில் தமிழில் பாடிக் கொடுத்தார்கள்.

முடிவுரை :

''சினமிறக்கக்கற்றாலும் சித்தியெல்லாம்
பெற்றாலும்
மனமிறக்கக்கல்லார்க்குவாய் ஏன் பராபரமே''!

என்று, தாயுமானார் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்.

''மனமெனும் பேய்க்குரங்கே மடப்பயலே
நீதான்!
மற்றவர் போல் எனை நினைத்து மருட்டாதே
கண்டாய்''

என்று இராமலிங்க சுவாமிகள் எந்த அளவிற்கு மனத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நம்முடைய மனது குற்றமுடையது. நல்லதை நினைத்துப் பார்க்கச் சங்கடப்படும். கற்பனை செய்தாலும்கூட தீயவைதான் முன்னிலை வகுக்கும். அத்தகைய மனத்தைத் திருத்த ஒரே வழிதான் உண்டு. சிவானந்த ஊற்றைக் கண்டு பிடித்து அந்நீரைக் குடித்து அந்த இனிமையை அறிந்து உருகும் அடியார்களின் அருகே நெருங்கி வந்து தன்னுருக் காட்டி நிற்கும் இறைவனுடைய பாதமலர்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விடுவதே அந்த வழி. ''அழுதால் உன்னைப் பெறலாமே' என்பது மணிவாசகம். இதோ அப்பர் பெருமானின் உள்ளக்கிடக்கை.

''திருகுசிந்தையைத் தீர்த்து செம்மைசெய்து

பருகி ஊறலைப் பற்றிப் பதமறிந்து

உருகிநைபவருக்கு ஊனமொன்றின்றியே

அருகும் நின்றிடும் ஆனைக்கா அண்ணலே!''

மனத்தின் குற்றம் ஐம்புல விருப்பு. அதை விரும்பாது தடுப்பது முதற்படி. புறத்தே ஓடும் மனதை உள்முகமாகத் திருப்புதல் இரண்டாம் படி. மனதை ஒரு நிலைப்படுத்தி சிவானந்தத்தை அனுபவிப்பது மூன்றாம்படி அந்த ஆனந்தக் காட்சியில் நிலைத்து நின்று பயன் பெறல் நான்காம்படி. இதைச் சரியை கிரியை யோகம், ஞானம் என்றும் கூறலாம்.

எனவே நம்முடைய மனதை ஒருமுகப் படுத்தி இறை நாட்டத்தில் நின்று, இறைவனுடைய திருவருள் பெற்று உய்வோமாக!

ஒருநேர உதவி

ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
தலைவர், பத்திரப் பதிவுத்துறை
தலைமை அலுவலகம், சென்னை-28.

உயிர்கள் உலவுதற்கு உடல்களைக்
கொடுத்தாய்
உயிரினங்கள் வாழ்வதற்கு உலகத்தைப்
படைத்தாய்
உள்ளத்தின் மகிழ்ச்சிக்குப் போசத்தைக்
கொடுத்தாய்
சள்ளப் புலன்களையும் நீயே கொடுத்தாய். 1

முதற்பிறப்பில் உயிரின் தரத்திற்கேற்றே
செயலென்பார்
அதற்கான பலன் அப்பிறப்பிலும் உண்டென்
பார்
பிற்பிறப்பிற்கும் அச்செயலே ஆதாரம்
ஆகுமென்பார்
எப்பிறப்பிற்கும் வினைதான் வித்தாக
மாறுமென்பார். 2

வினைக்சேற்ப இன்பமும் துன்பமும்
அடைந்திடுவார்
தினையளவு இன்பத்திற்கே வினைகளைச்
செய்திடுவார்
துன்பத்தைப் போக்கும் செயலையே
ஒதுக்கிடுவார்
கன்மத்தை நீக்கும் மர்மத்தை மறந்திடுவார்
3

வேலை இறைவனுக்கு என்னவென்று
கேட்டிடுவார்
வேலைக்கேற்ற கூலிதான் கொடுப்பவர்
என்றிடுவார்
இதில் கருணை எங்கேயென்று வினவிடுவார்
பதில் அறிந்தோருப் குழம்பியே இருந்திடுவார்.
4

ஒருநேர உதவியே செய்கின்றாரென
நினைத்திடுவார்
ஒருநேரமும் உறங்காததை எப்போது
அறிந்திடுவார்?
இருவினைகள் நீங்கும் போதே தெரிந்திடுவார்
நெருக்கினாலோ முழுநேர உதவியெனப்
புரிந்திடுவார். 5

குரு அஞ்சலி

ஞானத் தெளிவு

'பெருங்கவிக்கோ'
டாக்டர் வா. மு. சேதுராமன்



ஓங்கிய உள்ளத்தின்
அடித்தளத்தின் ஆழமான
ஊற்றுக் கண்களைத்
திறப்பவன் எவனோ
அவன்!

தாங்கிய பட்டறிவின்
துணையாலே
தாரணி மக்களுக்கெல்லாம்
தண்ணளி வழங்குகிறவன்
எவனோ!
அவன்!

அழுத்த அழுத்தவும்
அடிக்க அடிக்கவும்
ஆயிரம், ஆயிரம்
ஆயிரத்தின் மேலான
துன்பச் சூழல்களிலே
பாயிருள் படரும் ஒளியினைப்
பகலவன் போலத்
தெளிப்பவன் எவனோ!
அவன்!

நெறியோடு
தான் நடந்த போதும்
அறியாமையும் வஞ்சகமும்
அதட்டலும் உருட்டலும்
'அடும்அடும்' என்றும் 'சுடும்சுடும்' என்றும்
'விடேன்விடேன்' என்றும்
அணிவகுத்து வரும்போதில்
பணிந்தும், கனிந்தும், துணிந்தும்
அவைகளை ஏற்காமலும்
ஏக்கறாமலும்

நாசங்களை வென்றும்
நாசங்கள் குடிகொண்ட
நல்லுடல் ஓம்பும் உயிர்களை
நாசம் செய்யாமலும்

சகித்தலோடும்
மனிதனைக் காத்தும்
மனிதத் தன்மை மாறிய
வஞ்சகத் தன்மையை மாற்றிப்
போராடியும்

மகத்துவத்தின் மகத்துவமான
இரசவாத வித்தையால்
தகத்தகாயம் தந்து
மக்களுக்காக

மாதவத்தால் நோற்று
சோதனை வாழ்வின்
சாதனை புரிபவன் எவனோ!
அவன்!

இறைவனும் மனிதனும்
ஒன்றல்ல!
இறைவனுக்கு மனிதனை
மற்றொன்றை நிகர்வைப்பது
முறைதவறிய மூடர் கூற்றே!
எனினும்,
மாந்தன்

இறைமையை உள்ளத்தில்
ஏற்க வைக்கலாம்
ஏற்றம்பெறச் செய்யலாம்!
ஆயின்
இறைமை என்பதும்

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருக்குட நீராட்டு விழாவில் மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் டி ஆர் பாலு, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன், மயிலை சட்ட மன்ற உறுப்பினர் திருமிகு இராமஜெயம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்-

---

அவரவரால் கண்டும்
எவராலும் காணமுடியாததே!

வல்லமையில் வாய்மையில்
இறைமைக்கு இணை இறைமைதான்
அந்த இறைமை எண்ணம்
வேகத்தின்
மோகத்தின், ஏகத்தின்
மூச்சிலே கலந் ட

நிறைவினை நெஞ்சத்தினிலே
நித்தமும் வளர்ப்பவன்
இறைமைச் சிந்தனையை
எப்போதும் முப்போதும்
எழுகதிராக்கிக் கொண்டிலங்குபவன்

இர்த
ஏற்றிய ஒளிக்கதிர்களுக்கோ
எல்லையென்று ஒன்றும் இல்லை!

எல்லையில்லாத இணையில்லா இவ்
வல்லமை அருளினால்
அனைத்து உயிர்களோடும்
உயிராகவும்
அனைத்து உண்மைகளோடும்
உண்மையாகவும்
கலந்து, உவந்து
வாழ்பவன் எவனோ!
அவன்!

ஆகாயம், பூமி
அத்தனைக் கோளங்களையும்
அறிந்த ஞானியாக
மானியாக இருந்தும்

வாகான உலகியல்கள்
எல்லாம்
வாழ்க்கையின் நிறைவாகும்
வரம் பெற்றிருந்தும்
வாழ்வியல் கூறுகளின்
வழுத்தடங்களின்
வரிசைகளெல்லாம்
மதிக்குப் புலப்பட்டிருந்தும்

வலிமைமிகு வலிமை
மனக்கோயில் ஆளுமைகண்டும்
எளிமைக்கும் எளிமையாகி
எல்லாம் துறந்து
ஏகாந்த வெட்டவெளியைப் போன்ற
மாகாந்த வாழ்வியல் நெறியைப்
எழிலார்ந்த பூமிபடைத்து
வாழ்கிறவன் எவனோ!
அவன்!

கற்பனவெல்லாம் கற்றும்
விற்பன வேந்தர்க்கெல்லாம்
வேந்தனாகியும்
எம்பி எகிறிப் புறப்படும்
வேகத்தின் வேக
இராக்கெட்டைப் போல
விரைவினை அறிந்திருந்தும்

கூற்றையும் வெல்லும்
கோள்களெல்லாம் செல்லும்
குவலயம் முற்றும்
அறிந்திருந்தும்
அவனையும் மறந்து

ஆன்மநேயத்தின்
ஆன்மநேயமாக
அகிலத்திற்காகவும் வாழ்பவன்
வாழ வைப்பவன் எவனோ!
அவன்!

தேவைக்கோ எல்லாம் இருந்தும்
தேவைக்குத் தேவை
தேடியும்
பூவையர் சுகங்களிலே
பூத்திருந்தும்
புதல்வர்கள் இன்பம்
ஏற்றிருந்தும்

ஆவல் மீறிய
ஆசைப் பேராசைகளின்
அச்சுறுத்தலிலே
அடைக்கலம் புகுந்து தன்னை
இழந்து விடாமல்
உடைத்துக் கொண்டு
பீறிடும்
உன்னதமான மேலூற்றைப்போல
நன்னில மெல்லாம்
வாழ்விக்கவும், வாழச்செய்யவும்
தன்னல மறுப்போடு
தன்னை இழக்கிறவன் எவனோ!
அவன்!

உருவமில்லாத
இறைமை நோக்கத்தை
உருவம் தாங்கிய
மானுட மாகி
கருவத்தைச்
செருக்கைக் கைகழுவி

புனையும் உடைகளைப்
போலிச் சின்னங்களை
மேவும் சாத்திரச்
சடங்குக் குப்பைகளை எல்லாம்

போக்கி வீசிவிட்டு
நோக்கத்தின் நோக்கம்
மக்களின், மாந்தரின்
வளவாழ்வே என்று
ஆக்கத்தின் ஆக்கங்கள்
செய்வதற்கான
தாக்கத்தில் தன்னையே
இழக்கிறவன் எவனோ!
அவன்!

உலகத்தையே
தன்னால்—தன்னின்
உறுதிப் பாடான ஆற்றலால்
நலம் பெற அடையமுடியும்
இந்த
பாநிலத்தையும் வளைக்கமுடியும்
சுகம் கோடி கோடி
தேட முடியும்

இகத்தில் எல்லாம்
எனக்குண்டு
என்ற உன்னதநிலையையும்

ஒன்றும் ஈதெல்லாம்
உயர்ந்தது அல்லவென்று
தூக்கி எறிந்துவிட்டு

எழுத்தறிவில்லாத
ஏதிலியர்களுக்கும்
ஆதரவற்ற கோழைகளுக்கும்
ஏழைகளுக்கும்
தொழத்தகும் தன் ஆற்றலின்
தூய்மைக்குத் தூய்மையான
தொண்டுள்ளத்தை
அர்ப்பணிப்பவன் எவனோ!

அவன்!
அவனே இந்த உலகத்தின்
கண்கண்ட இறைமைத் தெய்வம்
ஆகிறான்.

அவனே;
வையகத்தின துறவுக்கெல்லாம்
துறவாகிறான்.

அவனே இவ்வையகத்தில்
ஆசை வைக்காத,
பற்றற்ற
தூய மாமுனிக்கும்
மாமுனியான
மகான் ஆகிறான்!
விஞ்சும் ஆற்றலின்
வெளிப்பாட்டினால்
மக்களின்
நெஞ்சம் கலக்கிறான்

ஒப்பில்லாத
அந்த மகாகுரு
எவனோ!
அவனே தான்.
நல்லது நடக்கும்
தொண்டுசெய்
மேலான நிலை
அடைவாய்
என்றருளிய
மாமனித நேயத்தின்

சாது குருவான
ஓது குரு
யாதினிலும் இனிய
அக்குருநாதனின்
தாமரைத் திருவடிகளை
அஞ்சலிக்கிறேன்.

திருவருள் வடிவே தேவே போற்றி:
குருவருட் கொடையேபடையே போற்றி
நற்றவக் கருவே நாயகா போற்றி!
பற்றிலான் பற்றே பற்றிலாய் போற்றி!
ஏழைகள் துயரம் தீர்ப்பாய் போற்றி!
கோழைக்கும் துணிவைக் கொடுப்பாய் போற்றி!
அறம்தரு அணியே அறிவே போற்றி!
திறம்தரு செல்வச் செயலே போற்றி!
குடமுருட்டி யில்வாழ் குணமே போற்றி!



ஆற்றல் சால் அனுமன் அற்புதத் திருவடி போற்றி! போற்றி!!

புலவரேறு ஆ. ஜெ. இராமசாமி

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

''தென்னாடுடைய சிவனே போற்றி'
''எல்லா உயிர்களும் இன்புற்று இருக்க
நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று
அறியேன் பராபரமே.''

பன்னுமுயர் பேரனுமன்பாதமலர்போற்றினால்
மன்னுமுடர் மாநலங்கள் ஈங்கு.

அன்பின் உருவாம் அனுமா போற்றி!
அஞ்சனா அன்னையின ஆருயிர் மகனாய்
அவனிவந் துதித்தொளிர் அருட்பெருஞ் சோதி
எல்லையில் சிவனார் எழிலஆய் சத்தொடு
வாயுவின் மைந்தனாய் வந்துளோய் போற்றி!
தினகரனையொரு தீங்கனியென்றே
பறிக்கப் பாய்ந்த பலவான் போற்றி!

நல்லொளி நல்கி நானிலம் காக்கும்
கதிரவ னிடத்தில் கலைபல கற்றோய்
சொல்லின் செல்வா! சுக்கிரிவனெனும்
மன்னனுக்கொருநல் மாண்பார் அமைச்சனாய்
விளங்கிய வித்தகா! வீரனே! போற்றி!
இராம பிரான்றன் இனிய துணைவனாய்
இலங்கைக் கேகி இராவணன் குலமாம்
பூண்டைப் பொசுக்கிப் புகலுயர் கற்பிற்
சிறந்த செழுந்திரு சீதா பிராட்டியின்
சீரிய பண்பினைச் சிந்தையில் தெளிந்து
ஆழியை அளித்து அவள்அல்லலை அகற்றி
ஆருயிர் நிலைக்க அருந்தொண்டாற்றிய
அறிஞனே! ஆஞ்சநேயா போற்றிபோற்றி!
மாண்சஞ் சீவிமலையினைக் கொணர்ந்து
மன்னுயிர் காத்த மாமலை போற்றி!

இராம என்னும் இன்னுயிர்த் தாரக
மந்திரம் மறவாது அல்லும் பகலும்
ஏத்தி ஏத்தி எவையும் செயலை
ஆற்றல் உற்றொளிர் அரிமா! போற்றி!
சீதையும் இராமனும் சிந்தித் தளித்த
மாமுத்து மாலையை மகிழ்ந்தினிதேற்று
நற்சிரஞ் சீவி எனவொளிர் நவிலரும்
பொற்குன் றேயுன் பொன்னடி போற்றி
என்றும் மாணியாய் இருப்போய் போற்றி
இந்திர ஜித்துவும் இறும்பூ தெய்த
ஈறுஇலாப் போர்புரி ஏறுஅரி போற்றி
இலங்கை யெரியுணச் செய்தோய் போற்றி
பஞ்சசேனாதி பதிகளை வென்று
பாதக இராவணன் பதறிக் கதற
அக்சுகுமாரனோடு அயன்படை அழித்தோய்!
அசோக வனத்தொடு அரக்கரை அழித்த
அனுமா உன்றன் ஆற்றலைப் போற்றிப்
புகழவெம் ஒருநாப் போதாது எம்மரும்
செம்மலே! செவ்வேள் ஆற்றலுக்கு ஒப்பாய்
ஆற்றலும் அறிவும் உடையோய் போற்றி!
என்றும் எமக்கருந் துணைவா போற்றி!
உற்றவர் உறுதுயர் களைவோய் போற்றி!
சுற்றவர் போற்றும் கலைஞனே! போற்றி!
அற்றவர்க்கு அருள்புரி அண்ணலே! போற்றி!
நற்குணக் கடலே! நலம்புரி கோவே!
அரியணை தாங்கும் அண்ணா போற்றி

பக்தியோடு உன்னுயர்ந்த பதமலர் பராவும்
உத்தமர் அனைவரும் ஒள்ளிய அறம்பொருள்
இன்பமும் இம்மையில் பெற்றுயர் மேலாம்
வீட்டையும் அடைந்திட அருள்புரி விமலா!



அல்லல்இன்றி அனைவரும் நலமாய்
வாழ்ந்திட அருள்செய் வாயுவின் மைந்தா!
மாருதி என்னும்ஓர் மாமலை போற்றி!
போற்றிப் போற்றியுன் பொற்பதம் போற்றி!
சாற்றரும் சதுரா! போற்றரும் புனிதா!
சீதா சமேதன் சேவடி பற்றும்
நாதா நாள்மலர் பாதா! நாளும்
ஏதம் அணுகாது இன்பமாய் ஈண்டு
வதிந்திடப் போற்றுதும் வழிவழி சிறக்கப்
புண்ணியா! அருள்வாய் பொற்புற இனிதே

வாழ்க வாழ்க. மண்ணும் விண்ணும் போற்ற
வாயு குமரனார்
பல்லாண்டு பல்லாண்டு நலமாய் வளமுடன்
இனிது வாழ்க!

(அறுசீர் விருத்தம்)

கருமுகில் அனைய இராமன் கற்பொளிர் சீதா
தேவி
இருவரும் இணைந்து வாழ ஏழுலகேத்தும்
வண்ணம்
அரும்பெருந் தொண்டு செய்த அனுமனே
உன்னைப் போற்றி
வருந்திரு அடியார் இங்கே வளமுடன் வதிய
வைப்பாய்.

பலமிகு இராம தூதா! பதமலர் பரவிப்
போற்றிப்
பல நலம் விழையும் எங்கள் பந்தமாம் பாசம்
போக்கி
உலகினில் நலங்கள் ஓங்க உறுதுயர் அனைத்தும்
நீங்க
நலந்தரு பத்தி நல்கி நலமுடன் வாழ
வைப்பாய்.

(சந்த விருத்தம்)

வனிதை சீதை வருத்தம் எண்ணி வலிய உயிரை
மீட்கவே
இனிய இராம தூதனாக இலங்கை சென்று
மீண்டவா
புனித உன்றன் பொற்பதத்தைப் போற்றி
வாழ்த்தும் எங்களை
இனியும் இன்னல் பிணிகள் அணுகா திருக்கச்
செய்எம் அண்ணலே

என்றும் இராம நாமம் ஏத்தும் இனிய அனுமா
உன்னருள்
நன்றே நின்தாள் நாடிப் போற்றும் நல்லடித்தார்
தம்முடை
துன்னும் தின்மை யாவும் போக்கித் தூய
நன்மை நல்கியே
என்றும் நன்றாம் நலனைப் பெற்றிங் கினிது
வாழ விழைகவே!

உலகோர் ஏத்தும் உயர்சீதா இராமநல்ஒள்ளிய
உத்தமர்ப்
பல நல பணிகளைப் புரிந்தினிதே பண்பொடு
பணிவார் புண்ணியனே
நலம்புரி நற்குணக்குன்றே நல் அனுமனே
அடிபணிந்தேத்துகின்றோம்
நலம் தரு கல்வி செல்வம் பெற்று நலமாய்
வாழ்ந்திடஅருள்கவே.

விநாயகர் குங்குமப் பிரசாதம்

பேராசிரியர் டாக்டர் D. செல்வராஜ்

1. குங்குமம்

''குங்குமம் அப்பி, குளிர்சாந்து மட்டித்து'' என்று அருள்வார் ஸ்ரீ ஆண்டாள் அம்மையார். குங்குமச் சாற்றை உடம்பெல்லாம் அப்பிக் கொள்ளவேண்டுமாம்; சந்தனத்தைத் தடவிக் கொள்ள வேண்டுமாம். இல்லற உலகிலும், இறைமை உலகிலும் குங்குமமும், சந்தனமும் சிறந்த பொருள்களாகத் திகழ்கின்றன. நெற்றியில் தரிக்கத்தக்க சமயச் சின்னங்கள் நான்கு. அவை (அ) திருமண் (ஆ) விபூதி (இ) சந்தனம் (ஈ) குங்குமம் என்பன.

(அ) திருமண் (நாமம்): நாமத்தின் நடுவிலுள்ள சிவப்பு அல்லது மஞ்சள் நிற விளக்கு வடிவம் மகாலட்சுமியைக் குறிப்பிடுகிறது. இதன் இரு பக்க வெள்ளைப்பட்டைகள் ஆண்டவரின் ஸ்ரீ பாதங்கள். திருமண் வைணவர்களுக்கே உரியது.

(ஆ) விபூதி : இது உலக நிலையாமையை உணர்த்தும் சிவச் சின்னம்: சைவர்களுக்கே உரியது.

(இ) சந்தனம் (ஈ) குங்குமம்: இவற்றை இந்து சமயத்தினர் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்துகின்றனர்.

விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியமூன்றை நெற்றியில் (1) தனித்தனியாகப் புனையலாம். (2) எவையேனும் இரண்டை அணியலாம். (3) மூன்றையும் ஒருங்கே சூடலாம்.

2. பெயர்கள்

குங்குமச்சாந்தால் அல்லது பொடியால் நெற்றியில் வைக்கும் பொட்டைத் திலகம் அல்லது குங்குமம் என்பர். 'திலகம்' என்ற பெயர் பழையது; அதற்கு ''மிகச் சிறந்தது'' என்பது பொருள். திலகத்தைக் குறிக்கும் பெயர்கள் வருமாறு; 1. குங்குமம் 2. திலகம் 3. திலதம் 4. பொட்டு 5. கடிகை 6. சுட்டி 8. செஞ்சாந்து 8. சிந்தூரம் 9. செந்தூரம் 10. புள்ளி 11. சிவப்பு.

குங்குமம், பொட்டு முதலிய சொற்களை மக்கள் நாள்தோறும் இயல்பாகப் பயன் படுத்துகின்றனர். மளிகைப் பொருள்களை வாங்கும்போது கூட அவற்றை மறப்பதில்லை. ஒரு வகை அரிசியைக் ''குங்குமச் சம்பா'' என்பர். சந்தனப் பொட்டுப் போல இருப்ப தால் உடைத்த கடலையைப் 'பொட்டுக் கடலை என்பர்.

3. குங்குமம் செய்முறை

குங்குமப்பூ, உயர்ந்த பச்சைக் கற்பூரம் முதலியவற்றுடன் சேர்த்துச் செய்யப்படுவது 'குங்குமம்'. இதைப் பனிநீரில் குழைத்து நெற்றியில் அணிவார்கள். இந்தக் குங்குமச் சாந்து அல்லது குங்குமச்சாறு சிவப்பு நிறமும் நல்ல மணமும் கொண்டது. குங்குமப்பூ கிடைப்பது கடினம். ஆகவே, மஞ்சள் பொடி யுடன் வேறு வண்ணப் பொடிகளையும் சேர்த்துக் குங்குமப் பொடியைச் செய்து இப் போது பயன்டுத்துகிறார்கள். கருநிறச் சாந்து அரிசியாலும், ஜவ்வரிசியாலும் செய்யப் படுகிறது.

4, பொட்டு வகைகள்

பயன்படுத்தும் பொருள்களைக் கொண்டு பொட்டுகள் பலவகைப்படுகின்றன. 1. குங்கு மம் 2. சிந்தூரம், 3. செந்தூரம் 4. சாந்து 5. சவ்வாது, 6. சரிகை, 7. சந்தனம் என்பன சில வகைகளாம்.

5. ஸ்டிக்கர் பொட்டுகள்

இப்போது ஸ்டிக்கர் பொட்டுகள் பல வண்ணங்களில், வடிவங்களில் அதிகமாகக் கிடைக்கின்றன. இவற்றை நெற்றியில் ஒட்டிக் கொள்ளும் மகளிர், குங்குமப் பொட்டால் கிடைக்கும் மருத்துவப் பயன்களை வீணே இழந்து விட்டு, தோல் தொடர்பான நோய் களை மனப்பூர்வமாகஏற்றுக்கொள்கிறார்கள். என்னதான் புடவை நிறத்துக்கேற்ப பொருத்த மான ஸ்டிக்கர் பொட்டுக்களை பயன்படுத்தி னாலும், குங்குமப் பொட்டின் மங்கலப் பொலி வுக்கு முன்னால்ஸ்டிக்கர்பொட்டுகள் தோற்றுத் தான் போகும்.

6. வடிவங்கள்

வட்டக் குங்குமப் பொட்டே பொருத்த மானது வேறு சில பொட்டு வடிவங்கள் வரு மாறு: 1. விளக்கு, 2. பிறை, 3. நட்சத்திரம்

4. பூ 5. பூக்கொடி 6. பாம்பு 7. சிறுபட்டை 8. சிறுகீற்று, நாமம் 9. சிறுபுள்ளிப் பொட்டுகளுக்கு நடுவே வட்டப் பொட்டு, பொட்டின் வடிவம் எதுவாக இருந்தாலும் அது நெற்றிக்கும், வயதுக்கும் ஏற்புடையதாக பொருத்தமாக அமைய வேண்டும்.

7. விரல்கள்

குங்குமச் சிமிழியிலிருந்து குங்குமத்தைக் கட்டை, ஆள்காட்டிவிரல்களில்அள்ளஎடுத்துப் பொட்டைக் கட்டைவிரலால் வைத்தால் சக்தி பெருகும்; நடுவிரலால் அணிந்தால் ஆயுள் நீளும்; மோதிர விரலால் புனைந்தால் உடல் நன்மைகளைப் பெறும்; ஆள் காட்டி விரலால் சூடினால் சுதந்திர வாழ்வு மலரும் என்பர், சுண்டு விரலால் பொட்டிடும் வழக்கம் இல்லை, வலக்கை நடு விரலால் வைக்கப்படும் பொட்டே மிகச் சிறப்பானது.

8. மஞ்சளின் மாண்பு

மஞ்சள் மருத்துவப் பொருளாகவும் மங்கலப் பொருளாகவும் மிகவும் பயன்படுகிறது. மஞ்சள் பூசப்பட்ட எந்தப் பொருளும் புனிதமாகி விடுகிறது. குரு பொன்னிறம் கொண்டவன். இவனுக்குப் பிடித்த நிறம் மஞ்சள். குருவின் பார்வை இருந்தால்தான் திருமணமே நடைபெறும். குருவின் பார்வை பெற்றுக் கணவன் நீண்ட ஆயுளுடன் வாழ, மஞ்சள் கயிற்றில் தாலியை அல்லது மஞ்சள் துண்டினை இணைத்து மகளிர் அணிகின்றனர்.

மஞ்சள் புனிதமானது. அது குங்குமமாக மாறும்போது மிகப் புனிதமாகிறது. குங்குமம் பொட்டாக வைக்கப்படும்போது, அது மகாலட்சுமியின் உறைவிடமாக உயர்ந்து, மிக மிகப் புனிதமாகிறது.

9. சிவப்பின் சிறப்பு

மிகப் பழமையான இயற்கையான நிறம் சிவப்பு. சிவனும் செவ்வேளும் உதிக்கின்ற கதிரவனும், தேவியும் சிவப்பு நிறம் கொண்டவர்கள், இந்நிறம் அதிகமாகக் கண்களை உறுத்தாது. ஆகவே, பல நிறக் குங்குமங்களில் சிவப்பு நிறக் குங்குமமே மிகச் சிறப்பானது; பலரும் பயன்படுத்துவது.

10. பல நிறப் பொட்டுகள்

மேற்குறித்த சிவப்பு நிறப் பொட்டைத் தவிர 1. வெள்ளை 2. மஞ்சள் 3. பச்சை 4. கருப்பு நிறப் பொட்டுகள் உள்ளன. அவரவர் மனநிலை சூழ்நிலைக்குத் தகுந்தபடி எந்த நிறப் பொட்டையும் அணியலாம். வெள்ளைப் பொட்டு அமைதி. தூய்மை தரும். மஞ்சள் பொட்டு செல்வச் செழிப்பையும், கருப்புப் பொட்டு அமைதியையும், சிவப்புப் பொட்டு புனிதமான, வசிகரமான பொலிவையும் தரக் கூடியன. சிலர் பச்சை நிறப் பொட்டைப் பச்சை குத்திக் கொள்வார்கள். இது நிரந்தரப் பொட்டு.



11. மண் பொட்டு

1. பிறந்த குழந்தைக்கு நில மகளின் அருள் நிலைக்க வேண்டும் என்பதற்காக மண் பொட்டு வைப்பார்கள். 2. திருஷ்டிக்குக் காரணமான ஒருவரது காலடிமண்ணை எடுத்து திருஷ்டிபட்டவரின் நெற்றியில் சூட்டி திருஷ்டி சழிப்பார்கள். 3. ஒருவன் கீழே விழுந்தால் விழுந்த இடத்தில் மண்ணை எடுத்துப்பொட்டு வைப்பார்கள். 4. வைணவர்கள் சூடுவது 'திருமண்'. 5. சிவனுக்குரிய வில்வ மரத்தடி மண்ணும், விஷ்ணுவுக்குரிய துளசிச் செடியடி மண்ணும் பொட்டாக வைத்துக் கொள்ளலாம் இவை தெய்வத் தன்மையும் மருத்துவக்குணமும் கொண்டவை. கவசப் பொட்டாகவும், திருஷ்டிப் பொட்டாகவும் இந்த மண் பொட்டு பயன்படுகிறது.

12. நெற்றி

அறிவும் சிந்தனைகளும்கூடுமிடம் நெற்றி. புருவ நடுவிலும், நெற்றி நடுவிலும் உயிர்த்துடிப்புடைய சில முக்கிய நரம்புகளின் ஓட்டம் உள்ளது. அந்த நரம்புகளின் மீது மருத்துவக் குணமுடைய பொட்டுகளை வைத்தால் உடலுக்கும், உள்ளத்திற்கும், உயிருக்கும் பலப்பல நன்மைகள் விளைகின்றன. பொட்டு வைப்பதன் அடிப்படைத் தத்துவமே இது தான்.

13. பொட்டு வைக்கும் இடங்கள்

நெற்றியில் பொட்டு வைக்கும் இடங்கள் மூன்று. அவை (1) புருவ நடு (2) நெற்றி நடு (3) வகிடு என்பன.

1. புருவ நடு: முதன் முதல் புருவ நடுவில் பொட்டுவைக்க வேண்டும். குங்குமப் பொட்டைப் போல, புருவ நடுவில், மறு இருந்தால் மறுவுடைய அப்பெண் மிகச் சிறந்த புண்ணியவதியாவாள்.

(அ) ஆக்ஞை சக்கரம்: மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களில் ஒன்றான 'ஆக்ஞை' என்பது புருவ நடுவுக்கு நேர் பின்புறம் மண்டையோடு முடியும் இடத்தில் இருக்கிறது. இது மிகவும் முக்கியமான ஆதாரச் சக்கரம். இதன் இருப்பிடத்தைச் சுட்டப் புருவ நடுவில் பொட்டு சூடப்படுகிறது.

(ஆ) உயிரின் நிலை; உயிர் உடலின் ஐந்து இடங்களில் பொருந்திக் கீழும் மேலும் இயங்கிக்கொண்டிருக்கும் நுட்பமானபொருள். ஒருவர் விழித்துக் கொண்டிருக்கும்போது புருவ நடுவில் அவரது உயிர் நிலைத்து நிற்கிறது. புருவ நடு என்பது உடலின் உயிரும், உயிருக் குயிரான அல்லது உயிரைத்தன் உடம்பாகக் கொண்டிருக்கும் இறைவனும் உறையும் இடம். ஆகவே அது பொட்டு வைக்கத்தக்க சிறந்த இடமாகத் திகழ்கிறது. புருவ நடு நெற்றியின் முக்கிய இடம்; இதைப் பொட்டு என்றும் 'பொட்டில்' அடிக்கக் கூடாது என்றும் கூறுவார்கள்.

2. நெற்றி நடு: (அ) நெற்றி நடுவில் சில முக்கிய நரம்புகள் செறிந்து, சற்றுப் புடைத்துக் கொண்டிருப்பதை உணரலாம், அந்த நரம்புகளுக்குக் குளிர்ச்சியைத் தரவும், சில மருத்துவ ஆற்றல்களை ஏற்றவும் நெற்றி நடுவில், அந்த நரம்புகளின் மீது பொட்டிடப் படுகிறது.

(ஆ) சிவனுக்கும், விநாயகருக்கும் நெற்றிக் கண் உள்ளது. மிகமிகப் பழங்காலத்தில் மக்கள் அனைவருக்கும் நெற்றிக் கண் இருந்ததாகக் கூறுவர் சிலர். காலப்போக்கில் அது மறைந்தது. முக்கண் கடவுள்களை வழிபட வேண்டும் என்று அறிவுறுத்தவும், முன்னர் நெற்றிக்கண் இருந்ததை நினைவுறுத்தவும் நெற்றி நடுவில் பொட்டு அமைகிறது.

(இ) அறிவு முதலியன முதிர்ச்சி பெறும் இடம் நெற்றி நடு, ஞானக்கண் பொலியும் இடம் அது. பொட்டு ஞானக்கண்ணின் அடையாளமாக விளங்குகிறது.

3. வகிடு: பகவத் பாதர் ஸ்ரீ ஆதி சங்கரர் அம்பாளின் வகிட்டழகை, அழகுடன் வருணிக்கிறார். (சௌந்தரிய லகிரிபாடல்44).

"தேவி! உன் கேசங்களுக்கு இடையிலுள்ள வகிடு) உன முக அழகு வழிந்தோடும் வாய்க்கால் போல் இருக்கிறது. உனது கேசங்களாகிய பலமான பகைவர்களால் இருட்டறையில் அடைக்கப்பட்ட கைதிபோல் வகிடு காணப்படுகிறது. இளஞ் சூரியனைப் போல அது ஒளிர்கிறது. குங்குமம் அப்பிய அந்த வகிடு எங்களுக்கு நன்மைகள் அருளுவதாக''.



நெற்றியின் மேற்குறித்த மூன்றிடங்களைத் தவிர, வேறுஎங்கும் புனிதக் குங்குமம் அணிவதில்லை.

(அ) குங்குமத்தை ஒன்றாக வைத்தால் புருவ நடு அல்லது நெற்றி நடுவில் வைக்கலாம். வகிட்டில் மட்டும் தனிக் குங்குமப் பொட்டு வைப்பது எப்போதும் இல்லை.

(ஆ) இரட்டைப் பொட்டுகளை, (1) புருவ நடு, நெற்றி நடு, அல்லது (2) நெற்றி நடு, வகிடு அல்லது (3) புருவ நடு, வகிடு ஆகிய மூன்று இடங்களில் அணியலாம்.

(இ) புருவ நடு, நெற்றி நடு. வகிடு என்ற மூன்று இடங்களிலும் முறையே குங்குமத்தைச் சூடுவது மிகச் சிறப்பானது புருவ நடு, நெற்றி நடுப் பொட்டுகளை வட்டமாக அல்லது பிற வடிவங்களாகப் புனைந்து வகிட்டில் குங்குமத்தை அப்பி வைப்பதை மங்களகரமாக கருதுகிறார்கள்., மூன்று பொட்டுகளும் ஒரே நிறமுடையதாக இருக்க வேண்டும். வகிடு முழுவதும் குங்குமத்தை வரிசையாக-ஒரு நேர்க்கோடாக-அணிந்து மகிழ்கின்றவர்களும் உண்டு.

ஆண்கள்: ஆண்கள் புருவ நடுவிலும், நெற்றி நடுவிலும் ஒன்று அல்லது இரண்டு

பொட்டுகளை வைக்கலாம். வகிட்டுப் பொட்டு ஆண்களுக்கு இல்லை. மேலும் இவர்கள் பொட்டுகளை வட்டங்களாக அல்லது சிறு பட்டைகளாக அணிவார்கள். சிலர் விளக்கு வடிவக் குங்குமப் பொட்டையும், அதன் கீழே பிறை வடிவ விபூதியையும் புனைவார்கள். குங்குமம்-சக்தி; பிறை-சிவன்; சிவசக்திக்குரிய அடையாளங்கள் இவை. விபூதியையும், சந்தனத்தையும் பட்டையாகத் தீட்டிக் கொள்வதைப் போலக் குங்குமத்தையும் பட்டையாக அப்பிக் கொள்ளக் கூடாது. விபூதிப்பட்டை, சந்தனப் பொட்டு, அதன் மேல் குங்குமப் பொட்டு என்று முறையாக, கச்சிதமாகப்புனைந்தால் லட்சுமிகரமான சிவப் பொலிவு தானே வரும். விபூதி-சிவன்; சந்தனம்-விஷ்ணு: குங்குமம்-தேவி.

பெண்கள் : பெண்கள் திருமணத்திற்கு முன் சாந்துப் பொட்டும், பின் குங்குமப் பொட்டும் அணிவது மிகப் பழைய மரபாக இருந்தது.

14. அலங்காரப் பொட்டுகள் : பொட்டு என்பது ஒரு புனிதப் பொருள்; அலங்காரப் பொருள் அன்று. புனிதத் தன்மையில் அலங்காரம் கலந்திருக்கிறது. பொட்டுகளை மிக அலங்காரப்படுத்துவதால் அவற்றின் புனிதத் தன்மை பாதிக்கப்படக் கூடாது. 1. நெற்றி நடுவில் வைத்த சிறு பொட்டைச் சுற்றி அரை வட்டமாக அல்லது முழு வட்டமாகச் சிறு சிறு புள்ளிகளைப் பொட்டுகளாக வைப்பார்கள். 2. இரண்டு புருவங்களுக்கு மேலே சின்னஞ்சிறிய பொட்டுகளை வரிசையாகப் புனைவார்கள். இவை முழுக்க முழுக்க அலங்கார நோக்குடையவை. தினமும் அணியத் தக்கன அல்ல.

15. அளவு : குங்கும வட்டத்திற்கு ஓர் அளவில்லை. பெரிய ஒரு பொட்டு அல்லது இயல்பான அளவுடைய இரண்டு பொட்டுகளைப் புனையலாம். அவை நெற்றியின் அல்லது முகத்தின் அழகை-கவர்ச்சியை-கம்பீரத்தை-பொலிவை-மங்கலத்தை- புனிதத்தைப் படிப்படியாக உயர்த்த வேண்டும்.

16. கோயில்களில் குங்குமம்: கோயில்களில் விக்ரகங்களுக்கு அர்ச்சனை, அபிடேகம், அலங்காரம் செய்யக் குங்குமம் பயன்படுகிறது. இது பிரசாதமாக வழங்கப்படும்போது மகளிர் பக்தியுடன் பெற்று வகிட்டிலும், நெற்றியிலும், நெஞ்சிலும், தாலியிலும்புனைந்து பிறர்க்கும் கொடுத்து, மீதியைப் பாதுகாப்பதே மங்கலமுறை. ''மீனாட்சி குங்குமம்,'' 'காமாட்சி குங்குமம்' என்று கோயில்களில் வழங்கப்படும் குங்குமப் பிரசாதங்களைச் சிறப்பாகக் கூறுவார்கள்.

17. குங்குமத்தில் கோயில் : இறைவன் உறையும் நம் உடம்பு ஒரு கோயில்: நெற்றி கருவறை; நெற்றித் திலகத்தில் எழுந்தருளிவதிபவள்-'திலகவதி'. குங்குமத்தில்வீற்றிருந்து அருளுபவள்'—'குங்கும அம்பாள்' அக்குங்குமத்தை மகளிர் மிகவும் பக்தியுடன், கவனத்துடன், பொறுப்புடன் போற்றுவதைத் தம் கடமையாகக் கொள்ள வேண்டும்.

18. ஒரு ''குங்குமத்தின்'' கடமைகள்''. சுமங்கலி வீட்டிலும் சமுதாயத்திலும் ஓர் உயர்ந்த தகுதியைப் பெற்றிருக்கிறாள். எல்லா மங்கலக் காரியங்களையும் முன்னின்று இவள் செய்ய வேண்டும். வயது முதிர்ந்த 'பெரிய சுமங்கலிகள்' மற்றவர்களுக்கு வழிகாட்டிகள் ஆவர். சுமங்கலிகள் பூசை அறைகளில் பூசை செய்கிறார்கள். பூசை முடிந்ததும் ஒரு மன நிறைவும் இறையருளும் கிடைக்கின்றன. அவை குடும்பக் கடமைகளை, பொறுப்புகளை அடுத்தடுத்துச் செய்து முடிக்கும் தனி ஆற்றலைத் தருகின்றன. அவளது அனைத்து எண்ணங்களும் செயல்களும் மையம் கொண்டிருக்குமிடம் வட்டக் குங்குமப் பொட்டு.

19. பிரார்த்தனைப் பொட்டுகள் : நினைத்தது நிறைவேறும் என்பதற்காக, பிரார்த்தனை செய்து, சிலர் தெய்வச் சிலைகளிலும், படங்களிலும் வரிசையாகப் பொட்டுகளை வைப்பார்கள். விநாயகர் அம்பாள், அனுமான் படங்களில் நாள்தோறும் அல்லது வாரந்தோறும் பிரார்த்தனைப் பொட்டுகளை வைப்பது வழக்கம். முழு வரிசை வட்டம் நிறைவதற்குள் நினைத்தது நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளது.

20. வாழ்த்துப் பொட்டு : சுமங்கலி ஒருவரை வாழ்த்தி அவருக்குக் குங்குமப் பொட்டு வைப்பது வாழ்த்துப் பொட்டு, அவர் சுமங்கலியின் காலடியில் விழுந்து பணிந்து அந்த வாழ்த்துப் பொட்டைப் பக்தியுடனும், மரியாதையுடனும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சுமங்கலி குங்குமப் பிரசாதத்தை மற்றவர்களுக்கு வழங்க வேண்டிய சூழ்நிலைகள் வருமாறு:

1. கோயிலில், பிரசாதங்களைப்பெற்ற சுமங்கலி அனைவருக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

2. வீட்டுப் பூசை அறைக்கு வந்து, தெய்வத் தரிசனம் செய்பவர்களுக்குக் குங்குமம் தர வேண்டும்.

3. திருமணம் முதலிய மங்கல விழாக்களுக்கு அழைக்க வருபவர்கள் குங்குமம் தருவார்கள். அவர்கள் விடை பெற்றுச் செல்லும் போது அவர்களுக்குக் குங்குமம் அளிக்க வேண்டும்.

4. தம்மை விடப் பெரியவரிடம் ஒருவர் விபூதியைப் பெற்று அணிந்துகொள்ளக்கூடாது. ஆனால், குங்குமத்தைப் பெற்றுப் பொட்டாக அணிந்து கொள்ளலாம்.

5. கோயிலில் பொங்கல் வைத்துப் பூசையை முடித்ததும் அங்குள்ள மகளிர் அனைவருக்கும் குங்குமம் வழங்க வேண்டும்.

21. குங்குமப் பொட்டால் விளையும் நன்மைகள் : குங்குமப் பொட்டு,

1. தெய்வச் சிந்தனை தருகிறது.

2. அதை அணிந்தவள் சிறந்த கற்புடைய சுமங்கலி என்ற பெருமித உணர்வைத் தருகிறது.

3. கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது.

4. இயற்கையான முக அழகை மேலும் அதிகப்படுத்துகிறது.

5. புருவநடுப் பொட்டு வைத்தவரை வசியம் செய்ய முடியாது.

6. மஞ்சள் பூசி, குங்குமம் வைத்து, பூச்சூடுவது தமிழர்களின் மிகப் பழைய பாரம்பரியப் பண்பாடாகும். இன்றும் அவை பழக்கத்தில் அமைந்து, தமிழினத்தவர் என்ற பெருமையைத் தருகின்றன.

7. முக்கிய நரம்போட்டத்தில் குங்குமப் பொட்டுகள் வைக்கப்படுவதால், அவற்றின் மருத்துவப் பயன்களை நரம்புகளின் வழியாக முகமும், உடம்பும் பெறுகின்றன.

8. சுமங்கலிகளைக் காண்பவர் மனத்தில் தீய உணர்வுகள் தீண்டாதவாறு தடுக்கும் பேராற்றல் குங்குமப் பொட்டிற்கு இருக்கிறது.

9. நெற்றியில் இழையோடும் நரம்புகளின் மென்மையான வெப்பத்தைத் தணிக்கப் பொட்டுகள் தேவைப்படுகின்றன.

10. மஞ்சள் பூச்சும், பூவும், பொட்டும் கணவனுக்குரிய மங்கலச் சொத்துக்கள் ஆகும். கணவனின் பாதுகாப்பை, குடும்பத்தைக்



காக்க வேண்டும் என்ற கடமையை விளக்கும் குங்குமம் ஒரு வட்ட விளக்கு. தெய்வத்தின் பீடம். தெய்வத்தின் அருளாணைகளை நெஞ்சில் நிறுத்தி, நேர்வழியில் நடக்கக் கட்டளையிடும் ஆணைச்சக்கரம், செய்யும் செயல்கள் அனைத்தும் இறைவனுக்கே அர்ப்பணம் என்று செம்மையாக எடுத்துக் காட்டும் கண்ணாடி, அவரவர் வாழ்வுக்கு மங்கல ஒளி தந்து வழி காட்டும் சின்னஞ் சிறிய சிவப்புச் சூரியன்.

குங்கும மகிமை

1. குங்கும மாவது குறைகளைத் தீர்ப்பது
குங்கும மாவது குடியினைக் காப்பது,
குங்கும மாவது குணமது அளிப்பது,
குங்கும மாவது கொல்வினை தீர்ப்பது

2. விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்,
நிதிதனை ஈவது நிமலையின் குங்குமம்,
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிதனை ஆள்வதும் குங்கும மாமே.

3. தஞ்சமென் றோரைத் தடுத்தாண்டு கொள்வதும்,
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்,
அஞ்சின பேருக்கு அபயம் அளிப்பதும்,
கஞ்சிகா மாட்சியின் குங்கும மாமே.

4. நற்பதம் ஈவது நாரணி குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரம் ஆவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்கும மாமே.

சொற்பொருள்: பாடல் எண் 2, விமலை: இலக்குமி; நிமலை; குற்றமற்றவள்; கதி-மோட்சம், 3. பரிந்து-பாதுகாத்து; அபயம்-அடைக்கலம்; கஞ்சி-காஞ்சிபுரம், 4. நற்பதம்-நல்ல நிலை; நாரணி-நாராயணி; பொற்பு: அழகு: பூரணி-எங்கும் நிறைந்தவள்.

நல்ல வண்ணம் வாழலாம்

அருள்மிகு சிவந்தியப்பர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் துறைசையாதீன குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கி அருளிய வாழ்த்துரை:

''நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.
கோகழி ஆண்ட குருமணி தன் தாள்வாழ்க.

குரு அருளும் திருஅருளும் துணை செய்ய இன்றைய தினம் அருள்மிகு சிவந்தியப்பர் திருக்கோயில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தது. குடமுழுக்கு தரிசனம் செய்தவர்கள் 12 ஆண்டுகள் இத்திருக்கோயிலை வழிபாடு செய்த பலனை அடைவார்கள். நமது திருக்கோயில்கள் பக்திநெறியை மட்டும் பரப்பவில்லை. கலைகளையும் வளர்த்துள்ளது. (ஓவியம், சிற்பம், கட்டிடம், வரலாற்றுச் செய்திகள், வேலை வாய்ப்பு போன்றவைகள்) இதற்காகவாவது நமது கோவில்களை வலிவும், பொலிவுமாக வைத்திருக்க வேண்டும். கோவில் நன்றாக இருந்து பூசைகள் சிறப்பாக நடந்து வருவதால் 'ஊருக்கு நன்மை ஏற்படும். இதனால்தான் கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என முன்னோர்கள் கூறியுள்ளனர். சடந்தமூன்று தினங்களாக யாகசாலை பூசையில் பலவகையான பொருட்களை (மூலிகைகள், தானியங்கள், உணவு பொருட்கள், நெய், தங்கம், நவமணிகள்) அக்கினியில் சமர்ப்பித்தார்கள். இது தீயில் பஸ்பமாகி வான மண்டலத்தில் கலக்கிறது. இதனால் சுற்றுச்சூழல் தூய்மை அடைகிறது. மழை நன்றாக பெய்யும், பயிர்களை நோய் அணுகாது. பயிர்கள் நன்றாக வளரும். மக்களுக்கும் நன்மைகள் பல ஏற்படும். சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய பிரதேச தலைநகர் போபாலில் ஒரு ரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட விஷ வாயு கசிவினால் அந்நகர் மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்தனர். ஆனால் நாள்தோறும் அக்கினி காரியம் செய்து வந்த குடும்பம் இந்த விபத்தில் இருந்து பிழைத்தது. காரணம் மந்திர பூர்வமாக தெய்வ பக்தியுடன் செய்த யாக பூசைகள் தான். எனவே நமது சமயத்தில் உள்ள பல்வேறு சடங்குகள் அனைத்தும் மக்கள் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டவைகள் ஆகும்.

நமது மதத்தில் இறைவனை சிவம் என்கிறோம். சிவம் என்றாலும் அன்பு என்றாலும் ஒன்றுதான். அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே என திருமந்திரம் சொல்கிறது. எனவே ஒருவருக்கொருவர் அன்பு காட்டி மனித நேயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது மதம் அன்பு மதம். சொல்வதோடு நின்று விடாமல் செயலிலும் காட்ட வேண்டும். கடவுள் வழிபாடு செய்யும்போது கடமையையும் சரிவர செய்ய வேண்டும். அப்போதுதான் முழுமையான பலன் கிடைக்கும். தவறான வழியில் பொருள் ஈட்டக் கூடாது. நல்லவழியில் செலவு செய்ய வேண்டும். பொருளை அருளாக மாற்ற வேண்டும். கோவில்களுக்கும். ஏழைகளுக்கும் பண உதவி செய்யவேண்டும். இறைவழிபாடு செய்யும்போது. ஏழைகளுக்காகவும், துன்பப்பட்டவர்களுக்காகவும், பாவப்பட்டவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும். அதற்கு இறைவன் உடன் அநுகிரகம் செய்வார்.

மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களையும், பிரச்சனைகளையும் தேவாரம் பாடித்தீர்த்துக் கொள்ளலாம்.

வயிற்றுவலி, அல்சர் உள்ளவர்கள்— 'கூற்றாயினவாறு' என ஆரம்பிக்கும் பாடலையும், தடைப்பட்ட திருமணம் நல்ல இடத்தில் விரைவில் நடைபெற—திருவேதிக்குடி தல தேவாரத்தையும், நன்மக்கட் பேற்றுக்கு திருவெண்காடு தல தேவாரத்தையும், பணக்கஷ்டம் நீங்க திருவாவடுதுறை தல தேவாரத்தையும் பக்தியோடு பாடி எல்லா நன்மைகளையும் அடையலாம். இது சத்திய வாக்காகும். பெண்கள் அவசியம் படிக்கவேண்டும். இளைஞர்கள் கோவில் பணிகளிலும், மக்கள் தொண்டிலும் ஆர்வமுடன் ஈடுபட வேண்டும். எல்லோரும் எல்லா நன்மைகளும் பெற்று நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்தனை செய்கிறேன்.

அருள்மிகு தொண்டர்கள் நயினார் கோயில்

'பைம்பொழில்' கே. பாலசுப்பிரமணியன்

முன்னுரை : உலக உயிர்களுக்கு எல்லாம் தாமாகித் தம்மை அன்புடன் அடைந்தார்க்கு. அடைக்கலமாக விளங்கும் அருட்பெருஞ் சோதியாகிய இறைவன் எல்லா உயிர்களும் தன்னை வழிபட்டு மகிழும் வண்ணம் ஆங்காங்கு பல திருக்கோயில்களில் எழுந்தருளியிருந்து திருவருள் புரிந்து வருகின்றான். இத்தகைய தலங்களுள் என்றும் வற்றாது வளம் பெருக்கும் தாமிரபரணிக் கரையிலிருக்கும் திருநெல்வேலியும் ஒன்று.

இருப்பிடம் : இத்தலம் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து 2 கி.மீ. மேற்கே அமைந்துள்ளது. இவ்வூருக்குச் செல்ல மோட்டார் வசதிகளும், புகை வண்டி வசதிகளும் உள்ளன. பொதிகை மலையிலிருந்து உற்பத்தியாகி வரும் தாமிரபரணி இவ்வூரின் வழியே ஓடிவருகிறது. இந்நதிக்குப் 'பொருநை' என்ற மற்றொரு பெயரும் உண்டு. திருநெல்வேலி நகருக்கும், ஆற்றுக்கும் உள்ள தூரம் சுமார் 2 கி. மீட்டர் ஆகும். இவ்வூரைச் சுற்றிலும் அழகிய நெல் வயல்கள் வேலிபோல் அமைந்திருக்கும் காட்சி கண்ணையும், கருத்தையும் கவர்ந்து இழுக்கும்.

ஆலய அமைப்பு : திருநெல்வேலி நகரின் நடுநாயகமாக அருள்தரும் காந்திமதியம்பாள் உடனுறை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில் பெரிய நிலைக் கோபுரங்களுடன் அழகாய் அமைந்துள்ளது. அக்கோவிலின் வடமேற்கே சிறியதும், அழகியதுமாய் அருள்மிகு தொண்டர்கள் நயினார் கோவில் அமைந்துள்ளது. சுவாமி அம்பாள் தனித்தனியே கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளனர். சுவாமி சந்நிதிக்கு எதிரே ஆலயத்தின் பிரதான வாயில் அமைந்துள்ளது.

சுவாமி கோவிலில் இருபிரகாரங்களும் அம்பிகை கோவில் ஒரு பிரகாரமும் அமைந்துள்ளன. சுவாமி கோவில் 2-ஆம் பிரகாரத்தில் வில்வ மரங்கள் அமைந்துள்ளன.

அம்பிகை கோவில் பிரகாரத்தில் ஈசான திசையில் ஒரு வன்னிமரம் செழித்து வளர்ந்துள்ளது.

சுவாமி கோவில் உட்பிரகாரத்திலும், அம்பிகை கோவில் வெளியிலும் அநேக கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன.

சிற்றாற்றின் அருகே இக்கோவிலின் நிபந்தங்களுக்காக அளவிறந்த நிலங்கள் தானஞ் செய்யப் பட்டதாக ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இக்கோவில் பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும், இலங்குகின்றது. இது ஒரு காலத்தில் செல்வச் செழிப்புள்ள கோவிலாய் இருந்துள்ளது. இக்கோவிலில் கர்ப்பக் கிருகம், இடைநாழி மண்டபம், மகா மண்டபம், மணிமண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன.

இறைவன் இறைவி திருநாமம்:

இக்கோயிற் பெருமானுக்கு வில்வநாதித்த, தொண்டர்கள் நயினார், திருமேற்றளியுடைய நாயனார் என்ற பெயர்களும், அம்பிகைக்கு கோமதி அம்பிகை, ஆவுடையம்பாள் என்ற பெயர்களும் அமைந்துள்ளன.

கோவில் தோன்றிய வரலாறு:

சைவமும் தமிழும் தழைக்கச் செய்த திருஞான சம்பந்தப் பெருமான், மதுரைத் தேவபாண்டிய மன்னனுடன் தமது தொண்டர் குழாங்கள் சூழ்ந்து வர, தென்னாட்டுச் சிவ ஸ்தலங்களைத் தரிசித்து வரும் பொழுது திருநெல்வேலியில் வந்து தங்கினார். அந்நாளில் அத்தொண்டர் யாவரும் திக்கெலாம் புகழும் திருநெல்வேலியில் ஒரு சிவலிங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென நினைத்து தமது கருத்தைச் சம்பந்தர் பெருமானிடமும் அப்பெருமானைக் காண வந்த அகத்திய முனிவரிடமும் தெரிவித்தனர். சம்பந்தப் பெருமான் தாமும் ஒரு கோயில் அமைக்க விரும்புவதாக மொழிந்தனர். அது கேட்ட அகத்தியர் நெல்லையப்பர் கோவிலுக்கு மேற்பால் உள்ள வில்வவனத்தினிடையே ஓர் ஆவுடையாரும் லிங்கமும் தேவ பீடமும் அழகுடன் அமைந்துள்ளன. இவற்றை யாரும் அறியார். அவற்றின் பெருமைசொல்லுவதற்கரியது. ஆதலால் அதுவே ஏற்ற இடம் என்று கூறியருளினார்.

அச்சமயத்தில் தேவ பாண்டிய மன்னன், அகத்திய முனிவரையும் ஞான சம்பந்தரையும் அடியார் கூட்டத்தையும் வணங்கி முனிவர் மனக் கருத்தினை உணர்ந்து தாமும் ஒரு கோவில் அமைக்க எண்ணியதை அறிவித்து எல்லோருடனும் வில்வ வனத்தைக் காணும் பொருட்டு ஆங்குச் சென்றனன். அவ்விடத்தே அகத்தியர் கூறியவாறு சம்பந்தர் தேவ பாண்டியனிடம் ஆகமமுறைப்படி கோவில்

அமைக்கும் முறைகளைக் கட்டளையிட்டருளினார். அரசனும் அவ்வாறே அழகியதோர் கோவில் அமைத்து முடித்தான். அவ்வழகிய கோவிலை அகஸ்தியர், ஞான சம்பந்தர் திருத்தொண்டர்கள் எல்லோரும் கண்டு வியந்ததுமன்றி, அப்போதே ஞானசம்பந்தர் மூர்த்திகட்கு காமிக ஆகம விதிப்படி பூஜைகள் செய்ய முனிவர்களும், தொண்டர்களும் அருச்சனை செய்து வழிபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வில் திளைத்து மகிழ்ந்தனர். திருஞான சம்பந்தர் காரணமாகவும், அவரது திருத்தொண்டர்கள் காரணமாகவும், அகத்தியர் ஆணைப்படி அரசன் கோவில் எடுப்பித்தமையால் அன்று தொட்டு இங்குள்ள இறைவர் ''தொண்டர்கள் நயினார்'' என்று பெயர் பெற்று, பக்தப் பெருமக்களுக்குத் திருவருள் புரிந்து வருகின்றார்.

இக்கோயிலுக்குத் தொண்டு செய்வோர் பெறும் பேறு :

இவ்விறைவர்க்கு திருப்பணி செய்தாலும் நந்தவனம் வைத்தாலும், பால் அபிடேகத்திற்காகப் பசுக்கள் தானமாகக் கொடுத்தாலும், பூஜைகள் கட்டளைகள் ஏற்படுத்தினாலும், அவ்வாறு செய்தவர்கள் மரண வாதனையின்றி அரிய செல்வப் பேறும் முத்திப் பேறும் பெற்றுய்யுமாறு இவ்விறைவன் 'திருவருள் புரிவான் என்ற உண்மையைத் தலபுராணத்துள்

''திருத்தொண்டர் நாதர் தமக்கெவரேனும்
திருப்பணி மலர் வனஞ் செய்தோர்
கருத்தொன்றிப் பாக்கள் விடுத்தவர் பூசைக்
கட்டளை செய்தவர் அவர்க்கு
மிருத்துவங்கள் அகன்று செல்வமும் எய்தி
வீடுபேறுய்யவும் அருள்வான்
உரைக்கின்றதெவையும் உண்மை யீதுண்மை
உண்மையென் றுரைத்தனன்.''

என வருவனவற்றால் அறியலாம்.

கருவூர்ச் சித்தர்க்கும் காட்சி கொடுத்தது :

கருவூர்ச் சித்தர் என்பவர் முன்வினைப் பயனால் தவவனம் புகுந்து இறைவனை நோக்கித் தவம் புரிந்தார். அத்தவத்தின் பயனாக இறைவன் இவருக்கு எண்வகைச் சித்திகளும், சிவ ஸ்தல யாத்திரைப் பேறும், சிவ ஸ்தலங்களிற் சென்று, தாம் அழைத்தவுடன் இறைவன் மறுமொழி கூறி நேரில் தோன்றிக் காட்சி கொடுக்கும் பேறும் வழங்கியருளினார்.

இவ்வரங்களைப் பெற்ற கருவூர்ச் சித்தர் திருநெல்வேலியைச் சீவிலிமாற பாண்டியன் அரசாண்டு வந்த காலத்தில் கொல்லம் (310-349) சாலிவாகன சகாப்தம் (1056-1095) இந்நகருக்கு வந்து நெல்லையப்பர் திருக்கோவில் திருமுன்பாக நின்று வழக்கம்போல் 'நெல்லையப்பா' என்று இறைவனைப் பெயர் சொல்லி அழைத்தும் மறுமொழியும், இறைவன் திருக்காட்சியும் கிடைக்கப் பெறாது மனம் வருந்தி 'ஈசன் இங்கிலன் எருக்கு எழுக' என்று சொல்லி விட்டு வடதிசை நோக்கச்

சென்றனர். சித்தர் மானூரில் இருக்கும்போது இறைவன் சோதிமயமாய் அவருக்குக் காட்சி கொடுத்ததும் சித்தர் மனமகிழ்ந்து,

''சீலமார் ஞானபோதந் திரண்ட செஞ்சுடரே போற்றி
வாலை தாய் இமயமீன்ற வடிவொருபாகா போற்றி
ஞாலமேழ் புரந்து செங்கோல் நடத்திய நம்பா போற்றி
நீலமார் களத்தாய் போற்றி நெல்லைநாயகனே போற்றி,''

என்று வாழ்த்தி வணங்கினர்.

அப்போது அச்சோதி தென்திசை நோக்கிச் செல்வது கண்ட சித்தர் அச்சோதியைப் பின்பற்றி நடந்தார். சோதியோ இத்தொண்டர்கள் நயினார் கோயிலுள் புகுந்து லயமாவதைக் கண்டனர். உடனே ''ஈசன் இங்குளன் எருக்கு அறுக'' எனச் சொல்லி, ஆடிப்பாடி ஆனந்தக் கண்ணீர் பொழிந்து வாழ்த்தி, வணங்கி அடியேனுக்குக் காட்சி கொடுத்த இந்நன்னாளாகிய ஆவணி மூலத்தில் ஆண்டு தோறும் காட்சியளிக்க வேண்டும் என்றும், இக்காட்சியை இச்சந்நிதியில் கண்டு வழிபட்டவர் எல்லோரும் இம்மை, மறுமை இன்பங்களைப் பெற்றுய்யுமாறு திருவருள் புரிய வேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்தித்தார். இறைவனும் அவ்வாறே அருள் செய்து மறைந்தனர். இந்த ஐதீகத்தை உட்கொண்டே இத்தொண்டர்கள் நயினார் சந்நிதியில் ஆண்டு

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருக்குட நீராட்டு விழாவில் காஞ்சி தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தோறும் கருவூர்ச் சித்தர்க்குக் காட்சி கொடுக்கும் விழா நடைபெறுகின்றது.

தினசரி பூஜையும். விழாக்களும் :

இத்திருக்கோயில் காலை, உச்சி, மாலை, இரவு என நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. பிரதோஷங்கள், சித்ரா பவுர்ணமி, ஆவணி மூலம் (கருவூர்ச் சித்தர்க்குக் காட்சி கொடுத்த விழா) நவராத்திரி, திருக்கல்யாணம், திருவாதிரை, மகா சிவராத்திரி முதலிய விசேஷ நாட்களில் இவ்வூர் மெய்யன்பர்களது பொருட் செலவின் பேரில் நடைபெறுகின்றன.

இலக்கியங்கள் :

முருகதாச சுவாமிகள் என்றழைக்கப் பெற்ற வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தொண்டர் நயினார் பதிகம் பாடியுள்ளார். அம்பிகை கோமதி அம்மன் பதிகமும் இவரே பாடியுள்ளார்.

''மட்டவிழ் கஞ்சமார்த் தவிசேறிய
மங்கையர் மயிலாலே
கட்டமுறுந் தமியேன் மகிழ்வுற்றுயர்
காலமும் என்றுளதோ
அட்டவிதப் பொருள் ஆனவரே! கடல்
ஆமையின் முதுகோடும்
தொட்டவரே! எழில் வேணுவனத்தமர்
தொண்டர்கள் நயினாரே''

என்று இறைவனையும்,

''உன்றன் அருளே உறுதியெனக் கண்ட
பின்னும்
என்றனுக்குள் ஆசைகொண்டு பேதை
மனம் வாடுவனோ?
மன்றம் அதில் நடித்து மான் மழுவும் ஏந்தி
நிற்கும்
குன்றவில்லியாளு நெல்லைக் கோமதிப்
பெண்ணாரமுதே!''

—என்று இறைவியையும் போற்றிப் பாடியுள்ளார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

நிர்வாகம் : இத்திருக்கோவில் தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நிர்வகிக்கப் பெறுகிறது. திருநெல்வேலி சந்திப்பு அருள்மிகு கைலாசநாத சுவாமி கோவிலின் இணைக்கோவிலாக இத்திருக்கோவில் விளங்குகிறது. நிர்வாக அதிகாரி ஒருவர் அரசால் நியமிக்கப் பெற்றுள்ளார்.

நிறைவுரை :

இம்மை மறுமைப் பேறுகளை ஒருங்கே நல்கும் தொண்டர்கள்நயினார் பக்தர்கள் குறை தீர்க்கும் குணநிதியாவார். எல்லையில்லாப் புகழ் கொண்ட நெல்லைச் சீமைக்குச் சென்று தொண்டர்கள் நயினார் கோமதித் தாயை வணங்கி குறைவற்ற செல்வமும், வளமான வாழ்வும் பெறுவோம்.



நவராத்திரி விழாவின் சிறப்பு!

டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

நவராத்திரி விழா பல உன்னத குறிக்கோள்களை உணர்த்தும் ஒப்பற்ற ஒருவிழாவாகத் திகழ்கின்றது என்பதை நமக்கு நம் பெரியவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

இந்த நவராத்திரி விழா உணர்த்தும் ஒப்பற்ற குறிக்கோள்களில் ஒன்றுதான் ஒரே பராசக்தி என்ற இறைத் தத்துவமாகும்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்கிறார் திருமூலர்.

''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்று அறிவுறுத்துகிறார் பட்டினத்தார்.

''ஒன்று பரம்பொருள் நாம் அதன்மக்கள்
உலகு இன்பக் கேணி'

என்கிறார் மகாகவி பாரதியார்.

இத்தகைய ஒரே பரம்பொருள் என்ற கருத்தை வலியுறுத்தும் ஒப்பற்ற ஒரு விழாதான் நாடு பெருமையோடு கொண்டாடி மகிழும் இந்த நவராத்திரி விழாவாகும்.

மகிசன் என்ற அரக்கனை வெல்ல சிவபெருமானாலும் முடியவில்லை. விஷ்ணுவாலும் முடியவில்லை. பிரம்மாவாலும் முடியவில்லை. இந்த மும்மூர்த்திகளும், தேவாதி தேவர்களும் தம்மை எந்தப் பராசக்தி தோற்றுவித்ததோ அந்தப் பராசக்தியைப் பிரார்த்திக்க, அந்த ஒப்பற்ற பராசக்தி தோன்றி மகிசனை வதைத்துத் தருமத்தை நிலைநிறுத்தினாள் என்பதைத்தான் இந்த நவராத்திரி விழாவின் புராணச் சிறப்பாகக் காண்கிறோம்.

இன்றைக்கு நாத்திகவாதம் பேசும் பலரும்கூட ஒரு சக்தி, நமக்கு அப்பாற்பட்ட பராசக்தி இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்வதைக் காண்கிறோம். அத்தகைய பராசக்தி என்ற தத்துவத்தைத்தான் இந்த நவராத்திரி விழா நமக்கு உணர்த்துகின்றது.

இறைவனை ஆயிரம் பெயர் சொல்லி அழைக்கலாம். எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் அது இறைவனுக்கு மகிழ்ச்சியைத் தருவதே ஆகும். ஆனால் எல்லோரும் பல்வேறு பெயர்களிட்டு, பல்வேறு வடிவங்களில் வணங்குகின்ற தெய்வம் ஒரே தெய்வம் தான். அந்தத் தெய்வமே நமக்கு மேற்பட்ட பராசக்தி என்பதை இந்த நவராத்திரி விழா நமக்கு மிக அருமையாக உணர்த்துகின்றது.

சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும், அம்மன் ஆலயங்களிலும் ஒரு சேரக் கொண்டாடப்படும் விழாவே இந்த நவராத்திரி விழா.

நீங்கள் இறைவனைச் சிவன் என்று அழைத்தாலும் அழைக்கலாம். இல்லை பெருமாள் என்று அழைப்பேன் என்றால் அப்படியும் அழைக்கலாம். இல்லை முருகன் என்று அழைப்பேன் என்றால் அப்படியும் அழைக்கலாம். ஒப்பற்ற ஒரு சக்தி அது பராசக்தி உண்டு. அதனால்தான் இந்த அண்டத்திலே அத்தனை கோள்களும் சீராக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு சக்தி சீர்பெற இயக்கிக் கொண்டிருக்கிறது. அந்த பராசக்தியை உணர்ந்து கொள்வதுதான் பகுத்தறிவு. அதனால்தான் திருவள்ளுவரும்

''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

என்று இறைவனை வணங்குவதே கல்வியினால் உண்டாகும் பயன் என்று பாடினார்.

விறகில் தீயைப் போல, பாலில் நெய்யைப் போல இறைவன் அங்கிங்கெனாதபடி நீக்கமற எங்கும் நிறைந்து விளங்குகின்றான் என்று அப்பரடிகளும் பாடுகின்றார்.

''உணர்வுளோர் மதிக்கும் மாணிக்கம்''
என்று அபிராமி பட்டரும் போற்றுகின்றார்.

எல்லாம் வல்ல இறைவன் சக்தியாய் இருந்து ஆட்டிப்படைக்கின்றான். நாமும் அவன் ஆட்டத்திற்கு இயைய பொம்மைகளாய் ஆடுகிறோம்.

இதை உணர்த்தும் வகையில்தான் பொம்மைக் கொலு வைக்கிறார்கள் இந்த நவராத்திரியிலே:

''நீயும் பொம்மை நானும் பொம்மை
நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை''

என்று ஒரு பாட்டும் இருக்கிறது. இறைவன் கர்த்தாவாக இருந்து ஆட்டுவிக்கின்றான். நாமும் கருவியாக இருந்து ஆடுகிறோம். நாம் ஆடுகிற ஆட்டம் தர்மநியாயங்களுக்குக் கட்டுபட்ட இறைநெறிக்கு மாறுபாடில்லாத ஆட்டமாக அமைய வேண்டும் என்பதையும் இந்த நவராத்திரி விழா நமக்கு உணர்த்துகின்றது.

இந்த நவராத்திரிவிழா பெண்களின் பெருமையை-மகத்துவத்தை நமக்கு எடுத்துக் காட்டும் விழாவும் ஆகும்.

''மங்கையராகப் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா-அவர்
பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா''

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடினார்கள்.

''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பு'
என்றும்

''ஆண்களோடு பெண்களும் சரிநிகர்சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே''

என்றும் ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அத்தகைய பெண்ணின் பெருமையை நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுவதுதான் இந்த நவராத்திரி விழா.

இந்த நவராத்திரி விழா என்பது பெண்களின் விழாதான். இந்த விழாவிலே முதல் மூன்று நாட்கள் துர்க்கையை மங்கையர்கள் வழிபட்டுப் போற்றுகிறார்கள். அடுத்த மூன்று நாட்கள் திருமகளைக் கொண்டாடுகிறார்கள். இறுதி மூன்று நாட்கள் சரசுவதியைக் கொண்டாடுகிறார்கள்.

மலைமகள், அலைமகள், கலைமகள்— இம்மூவரையும், இம்மூவரை உருவாக்கிய ஆதி பராசக்தியையும் வழிபட்டு நல்ல உடல்நலம் தா, பொருள்நலம் தா, அறிவுநலம் தா, சகல வெற்றிகளும் தா என்று வணங்கி வழிபடுகிறோம்.

துக்கங்கள் தீர்த்து உடல்வளம் தருபவள் துர்க்கை. வறுமையைத் தீர்த்துப் பொருள் வளம் தருபவள் திருமகள். அறியாமையை நீக்கி அறிவின் வளம் தரும் கல்வியைத்தருபவள் சரசுவதி.

வாழ்க்கைக்கு என்ன மூன்று அடிப்படைத் தேவைகள் என்று கேட்டால் உணவு, உடை, வீடு என்று யாரும் சொல்வார்கள்.

இந்த மூன்றையும் பெற நமக்கு மூன்று வேண்டும். அவைதான் உடல்நலம், பொருள் நலம், கல்விநலம்.

உடல்நலம் இல்லாத ஒருவன் எந்தஒரு காரியத்தையும் ஆர்வத் துடிப்போடு செய்ய முடியாது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றொரு பழமொழி இருக்கிறது.

''உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே''

என்கிறார் திருமூலர். ஆகவே ஒவ்வொருவருக்கும் மிகமிக அவசியமானது உடல்நலம், அந்த உடல்நலம் தருபவள் மலைமகள்.

''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்று வள்ளுவர் வலியுறுத்திச்சொல்கிறார். பொருளாதாரம் வீட்டிற்கும் நாட்டிற்கும் அடிப்படை. ''இல்லாத என்னும் ஒரு பொல்லாத பாவி'' என்று இல்லாமையைத் தூற்றுகிறார்கள் புலவர்கள். ''பசி வந்திட பத்தும் பறக்கும்'' என்பார் ஔவையார்.

ஆக, இல்லாமை தீரவேண்டும், இங்கு எல்லோரும் வாழவேண்டும்.

அதற்கு வேண்டிய செல்வத்தை அருள்பவள் திருமகள்.

அறிவு இல்லாவிட்டால் பொருளைப் பெற முடியாது. உடல்நலத்தையும் பேணிக் கொள்ள முடியாது. ஆகவே அறிவைத் தரக் கூடிய கல்வி ஒவ்வொருவருக்கும் அவசியத் தேவை.

''கேடில் விழுச்செல்வம் கல்வி''

என்பது திருவள்ளுவர் வாக்கு.

''கல்வியழகே அழகு'' என்று கல்வியின் சிறப்பைப் போற்றுகிறார்கள் புலவர்கள்.

அரசனை விடவும் அறிஞனுக்குத்தான் சிறப்பு. அரசனுக்கு அவனுடைய ஊரில் மட்டுமே மதிப்பிருக்கும். அறிஞனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, மதிப்பு.

வெள்ளம் வந்தாலும் அறிவுச் செல்வம் அழிந்து படாது,

தீ விபத்து நேர்ந்தாலும் பிறபொருட் செல்வங்களைப் போல் ஒருவன் பெற்ற கல்விச் செல்வம் அழியக் கூடியது அல்ல.

கள்வர்களும் கல்விச் செல்வத்தை வந்து திருடிக் கொண்டு போய்விட முடியாது.

கொடுக்க கொடுக்க வளர்கின்ற செல்வம்தான் கல்விச் செல்வம்.

இத்தகைய கல்விச் செல்வத்தை வழங்குபவள் கலைமகள்.

''ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்

ஏய உணர்விக்கும் என்னம்மை''

என்று சரசுவதியைப் போற்றுகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

இப்படி வாழ்க்கைக்கு மிகமிக அடிப்படையான உடல்நலம், பொருள்நலம், கல்விநலம் இந்த மூன்று செல்வங்களின் முக்கியத்தை உணர்த்தும் விழாதான் நவராத்திரி விழா.

''தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா

மனம் தரும்''

என்று அபிராமி பட்டர் போற்றுகின்றார்.

இதையே அருட்பிரகாச வள்ளலாரும்

''மதிவேண்டும் நின்கருணைநிதி வேண்டும்

நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்'

என்று வேண்டுகிறார்.

இந்த மூன்று செல்வங்களை நாம்பெற வேண்டி நம் வீட்டுப் பெண்கள் கொலுவைத்து மூன்று வயதுமுதல் பன்னிரண்டு வயது வரை உள்ள கன்னிப் பெண்களைக் கொலுவிற்கு வரவழைத்து. நல்ல பக்திப் பாடல்களைப் பாட வைத்து பக்தியோடு பண்பாட்டையும்வளர்த்து இந்தத் திருவிழாக்கள் மூலமாக நம்முடைய மனித சமுதாயத்தை மேம்படுத்துகிறார்கள் என்றால் அந்தத் தாய்க் குலத்தை நாம் போற்றியாக வேண்டும். அதற்குத்தான் இந்த நவராத்திரி விழா.

சிலர் பக்தியெல்லாம் வேண்டாம். முயற்சி செய்தால் போதும் முன்னேறலாம் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய பெரியவர்கள் பக்தியை வளர்த்தது பண்பாட்டை வளர்ப்பதற்குத் தான்.

நமக்கும் மேலே ஒரு சக்தி இருக்கிறது, அது நாம் தவறு செய்தால் தண்டிக்கும் என்று பயம் இருந்தால்தான் பக்திவரும், அதைத் தான் பயபக்தி என்று நம் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வீட்டிலே தந்தைதாயிடம் பக்தி இருந்தால்தான் பிள்ளைகள் பணிவோடு வளர்கிறார்கள். அதைப் போலத்தான் படைத்த கடவுளிடம் பக்தி உள்ள சமுதாயம், பணிவு மிக்க-பண்பாடு மிக்க சமுதாயமாக விளங்குகிறது.

நம்முடைய நாட்டிலே இன்றும் பெற்றவர்களைக் காப்பாற்ற வேண்டும். பெரியவர்களை மதிக்க வேண்டும் என்ற நியதிகள் இருந்து கொண்டு இருக்கின்றன என்றால் அதற்குக் காரணமே நம்முடைய தெய்வ வழிபாடுகள் — இத்தகைய பண்டிகை விழாக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

விஞ்ஞானத்தால் உயர்ந்த மேலைநாடுகளில் பண்பாடுகளும் குறைவு. பெரியவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமை உணர்வும் குறைவு. மெய்ஞ்ஞானத்தால். சிறந்த நம் இந்திய நாட்டில்-அதுவும் சிறப்பாக நம் தமிழ்நாட்டில் இத்தகைய பண்பாடுகள் அதிகம்.

ஆகவேதான்

''தமிழன் என்று சொல்லடா

தலைநிமிர்ந்து நில்லடா''

''தமிழன் என்றோர் இனமுண்டு

தனியே அவர்க்கொரு குணமுண்டு''

என்று பாடினார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

ஆகவே பக்தி வேண்டாம், கோயில் குளங்கள் வேண்டாம் என்று சொல்வதுதான் பத்தாம்பசலித்தனம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

''பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்

பெறுதற்கரிய பிரானடி பேணார்

பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்

பெறுதற்கரிய பேறுஇழந் தாரே''

என்று பாடினார் திருமூலர்.

யாருக்கு இயற்கையிலே அருட்குணம் நிரம்பி இருக்கிறது? எண்ணிப் பாருங்கள்.

நாகம் தீண்டி, பசுமேய்க்கும் இடையன் இறந்து போகிறான். பசுக்கள் அவனைச் சூழ்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கின்றன. இதைக் காண்கிறார் திருமூலர். 'யார் செத்தால் நமக்கென்ன!' என்று அவர் நினைக்கவில்லை. இந்த பசுக்கள் துயரம் தீர வேண்டுமானால் இடையன் உயிர்பெற்று எழ வேண்டும். அதற்கு நம் உயிரை இந்த இடையனின் உடலுக்குள் செலுத்த வேண்டும் என்ற அருளுணர்வோடு செயல்பட்டுத் தம் உயிரை மூலன் என்ற இடையன் உடலுக்குள் செலுத்தி திருமூலர் என்ற பெயரைப் பெறுகிறார்என்ற வரலாற்றைப் பார்க்கிறோம்.

அத்தகைய அருளாளர்களை நமக்குத் தந்த நெறிதான் பக்திநெறி, ஆன்மீகம்.

'வாடிய பயிரைக் கண்டபோதும் வாடினேன்'-

எப்படிப்டட்ட உயர்ந்த உள்ளம் இராமலிங்கருக்கு.

பசுவின் கன்றிற்காகத் தன் மகனைப் பலி கொடுத்தானே ஒரு வேந்தன்-அவன்தான் மனு நீதிச் சோழன்.

ஆக இப்படிப்பட்ட அருளைத் தருவது பக்திநெறி, அறத்தைப் போதிப்பது பக்தி நெறி. மனித நேயத்தை வளர்ப்பது பக்தி நெறி.

இன்றைக்கு இந்தியாவில் 80 கோடி மக்கள் வாழ்கின்றோம். பல சமயங்கள் உண்டு, எண்ணற்ற சாதிகள், கலாச்சாரங்கள் உண்டு· இருந்தாலும்வேற்றுமையில் ஒற்றுமை கண்டு நாம் வாழ்கின்றோம் என்றால் அதற்குக் காரணம் பக்திநெறி-பண்பாட்டு நெறி என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எப்படிப்பட்ட சமத்துவத் தத்துவம். இதைச் சொல்லிய சான்றோர்கள் நம்முன்னவர்கள்.

''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'' இப்படி வாழ்ந்து காட்டியவர்கள் நம் அருளாளர்கள்.

''தில்லை வாழ் அந்தணர் தம்
அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக்
குயவனார்க்கு அடியேன்''

அந்தணரும் ஒன்று, குயவரும் ஒன்று, அரசனும் ஒன்று, ஆண்டியும் ஒன்று-எப்படிப்பட்ட சமத்துவம், இதை நமக்கு உணர்த்தியவர்கள் நம் அருளாளர்கள்.

யானைமேல் ஏறிவந்து கொண்டிருந்தான் மன்னன். எதிரிலே ஒரு வண்ணான்உவர்மண் மூட்டையோடு வந்து கொண்டிருந்தான். வரும் வழியிலே மழைபெய்து உவர்மண் மூட்டை நனைந்து விட்ட காரணத்தால் அம்மண் அவ் வண்ணான் மேனியிலே திட்டு திட்டாகப் படிந்துப் பின் காய்ந்து திருநீறுபோல காட்சியளிக்கின்றது.

அரசன் வண்ணாரை நீறுபூசிய சிவனடியாராக எண்ணி யானை மேலிருந்து இறங்கி சிவனடியாரை வணங்குகின்றார். வண்ணாருக்கு உடல் நடுக்கம் கண்டு விட்டது. 'யான் அடியேன் வண்ணான்' என்று நடுங்கியவாறு கூறுகின்றான். உடனே மன்னனும் 'அடியேன் சேரன், திருநீற்றின் தோற்றம் கண்டு வணங்கினேன். வருந்த வேண்டாம்' என்று கூறித் தேற்றுகிறான். எப்படிப்பட்ட சமத்துவம்.

நீறுபூசும் அடியார்கள் முடிமன்னர்-ஆனாலும், வண்ணாரேயானாலும் ஒன்றுதான். இதைத்தான் நம்பக்தி நெறி காட்டுகின்றது. இந்த நெறியிலே நாம் தொடர்ந்து நடைபோட நமக்குக் கற்றுத் தருவனவே நம்முடைய சமயங்கள், இத்தகைய விழாக்கள்,

''அன்பே சிவம்''

அன்பை விட உயர்ந்த தெய்வம் கிடையாது, அறமே சிவம். தருமத்தைவிட உயர்ந்த தெய்வம் கிடையாது.

இதைத்தான் பட்டினத்தார் இரத்தினச் சுருக்கமாக ஒரு பாட்டிலே கூறுகிறார்.

''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கு உபதேசம்
இதே''

இத்தகைய உயர்ந்த நெறிகளை நமக்கு உணர்த்தக் கூடியது நவராத்திரி விழா.

''அகிலமதில் நோயின்மை கல்விதனம்தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள்
ஆகு நல்லூழ், நுகர்ச்சி [வெற்றி
தொகை தரும் பதினாறு பேறு'' களும்
பெற்று வளமாக வாழ

எல்லாம் வல்ல நவராத்திரி நாயகியைப் பிரார்த்தித்து வழிபடுவோமாக.

மெய்ய மலையான் வாய்மைக்கு அப்பன்

பி. கணேசன், திருமயம்.

தமிழ்நாடு அரசு முத்திரையில் இடம் பெற்றிருப்பது திருவில்லிப்புத்தூர் ராஜ கோபுரம் என்பதைப் பலர் அறிந்திருப்பர். ஆனால் அந்த முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ள 'வாய்மையே வெல்லும்' எனற குறிக்கோளுக்கு திருமயம் திருத்தலத்தின் தொடர்பினை அறிந்தவர்கள் மிகமிகச் சிலரே.

நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்றான திருமயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கும் காரைக்குடிக்கும் இடையில் உள்ளது, 'திருமெய்யத்து இன்னமுத வெள்ளம்' என்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருமயம், மூங்கிற் காடாக வேணுவனமாக இருந்த அந்தக் காலத்தில், இப்பூலோகத்தை அசுரர்களும் ராட்சதர்களும் ஆக்கிரமணம் செய்து கொண்டனர். விளைவு! ரிசிகள், முனிவர்கள் எல்லோரும் பயந்து போய் மலைகளில், குகைகளில் மறைந்து கொண்டார்கள். உலகத்தில் யாகம் முதலான நல்ல காரியங்சள் நடைபெறவில்லை. தேவர்கள் பெரிதும் கல்க்கமுற்றனர்.

இந்நிலைமையில் சத்தியதேவதையும் தர்மதேவதையும்கூட வறுமைவாய்ப்பட்டு மிகுந்த துன்பம் அடைந்தன. எனவே தர்ம தேவதை காளையின் உருவம்சொண்டுஅழகர் கோயிலை அடைந்தது. ஆனால் சத்திய தேவதையோ மான் வடிவு கொண்டு மூங்கிற் காடாகத் திகழ்ந்த திருமெய்யத்தை அடைந்து இங்குள்ள சத்தியகிரி நாதனை வழிபட்டுக் கொண்டு அசுரர்களும் ராட்சதர்களும் ஒழிந்து உலகில் சத்தியம் நிலைக்க வேண்டும் என்று தவம் செய்து சித்தி அடைந்தது.

மேற்கண்ட செய்தியைச் செப்புவது. திருமெய்யத்துத் தலபுராணம்-பிரம்மாண்ட புராணம்.

சத்திய தேவதை தவம் செய்து சித்தி பெற்ற காரணத்தால்தான் இங்கு சேத்திரம், கிரி, வனம், தீர்த்தம், புரம், விமானம், மூர்த்தி எல்லாமே சத்திய சேத்திரம், சத்தியகிரி, சத்தியவனம், சத்திய தீர்த்தம், சத்தியபுரம், சத்தியகிரி, விமானம், சத்தியமூர்த்திஎன்று சிறபபுடன் அழைக்கப்படுகின்றன.

எனவே, வாய்மையே வெல்லும் என்பதன் விளைநிலம், ஒரு சத்திய சரித்திரப் பெருமை பெற்ற, ஆன்மீகச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட திருமயம் அன்றோ! (திருமெய்யம் தான் இன்று திருமயம் என்று மருவி நிற்கின்றது). திருமயத்தில் அருள் பாலிக்கும் எம்பெருமானின் திருநாமமோ, சத்தியமூர்த்தி என்னும் மெய்யப்பன்.

ஆம், வாய்மைக்கு திருமெய்யன்
தன் ஒப்பார் இல்லப்பன்.



மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம்

திருமதி லலிதா பூமணி

திருச்செந்தூர்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியின்கண் திருவாதவூரருக்குச் சிவபெருமான் குருநாதராக எழுந்தருளி திருவடி தீட்சை கொடுத்து தம அடியவராக ஆட்கொண்டுஉய்வித்தார். அந்த அருளினைப் போற்றி திருவாதவூரர் அருளிச் செய்தது சிவபுராணமாகும்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணி தன்தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்றண்ணிப்டான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!

நமச்சிவாய முழக்கம் என்றுப் நிலை பெறுக. நாத தத்துவ முடிவில் விளங்கும் இறைவனது திருவடிகள் எங்கும் நிலைபெறுக. இமைப்பொழுதளவ கூட என் நெஞ்சினின்று நீங்காத திருவடி வாழ்க. ஆகமங்களின் மெய்ப்பொருளும் தானேயாகி நின்று அருள் செய்பவனின் திருவடிகள் வாழ்க! ஏகனாகவும் அனேகனாகவும் விளங்கும் இறைவனது திருவடிகள் வாழ்க!

வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச்சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஆணவத்தால் எழுகின்ற மனவேகங்களைக் கெடுத்து உயிர்களின் பிறவித்தளையினை அறுத்து வீடுபேறளிக்கும் பாம்பை அணிகலனாக உடையவனின் வீரக்கழல்கள் அணிந்த திருவடிகள் ஆன்ம முளையை வெல்வதாக. தன்னை வழிபடும் அடியவரின் உள்ளத்திலும் புறமேயுள்ளவர்களுக்குப் புறமாகவும் தமக்குத் தனல தாழ்த்தும் தம் அடியவரை உயர்நிலை அடைவிக்கும் திருவடிகள் ஆன்ம பந்தங்களை வெல்வதாக!

ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி!

தேசனடி போற்றி? சிவன்சேவடி போற்றி!

நேயத்தேநின்ற நிமலனடி போற்றி!

மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி!

சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி!

ஆராத இன்பம் அருளுமலை போற்றி!

மாசற்ற அன்பர்களின் பிறவிப் பிணியை அறுத்துத்தெவிட்டாதபேரின்டத்தினை அருளுகின்ற ஒளிமயமான மலைபோன்ற சிவபெருமானின் சிவந்த திருவடிகளுக்கு எண்மலர்களின் பொருட்செறிவுடன் அருளிட வணக்கம்.

சிவனவன் என் சிந்தையுள் நின்ற

அவனருளாலே அவன்தாள் வணங்கிச்

சிந்தை மகிழச்சிவ புராணந்தன்னை

முந்தைவினை முழுதும்ஓய உரைப்டன்யான்

சிவபெருமான் என் சிந்தையில் நீங்காது நிலை பெற்றிருப்பதால் என்னுடைய பழவினை அனைத்தும் ஒழியக்கருதியும் உள்ளம் மகிழவும் அவன் திருவருள் துணையால் அவன் திருவடிகளை வணங்கி இச்சிவபுராணத்தை மகிழ்ந்து ஓதுகின்றோம்.

கண்ணுதலான் தன் கருணைக்கண் காட்ட
வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார்கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந்தெல்லையிலா தானே நின்
பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

நெற்றி கண்ணினை உடையான் கருணையினால் இங்கு வந்தேன். விண்ணும் மண்ணும் மற்றுமெங்கும் நிறைந்த பேரொளியாக விளங்கும் எல்லையில்லாதவனே! பொல்லாத வினையினால் நின்னைப் போற்றுவதற்குரிய யாதொன்றும் அறியாத தன்மையுடையவனாக வாழ்கின்றேன்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப்பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யேவுன் பொன்னடிகள் கண்டின்று
வீடுற்றேன்.

உணர்வற்ற கல்லாக, புல்லாக, பூண்டாக புழுவாக, மரமாக, மிருகங்களாக, பறவைகளாக, பாம்புகளாக, மனிதர்களாக, முனிவர்களாக, தேவர்களாக, அசைவன அசையாதன எனுமிவற்றுள் எல்லாப்பிறப்பும் பிறந்து உழன்றுவிட்டேன். இன்று உன் அழகிய திருவடிகளைக் காணும் பேறு பெற்றேன். அக்காட்சிப் பயனால் என் பிறவித் துயரினின்றும் விடுதலைக்குரிய நெறியினைப் பெற்றுள்ளேன்.

உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயாஎன வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய்! இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகலவந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

உயிர்கள் முந்தை வினையால் பல்வேறு உயிர் வகைகளுள் சென்று தோன்றி உழன்று இறையருளை அடைதற்குரிய பக்குவநிலையினை அடைந்ததும் தன்நேரிலா சிவகுருபரனாக எழுந்தருளி அறியாமையினை ஒழித்து திருவடிப் பேறாகிய சிவகதியுள் சேர்க்கிறான்.

ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாயருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்
நின்தொழும்பின்

தோன்றி நின்று, மறைதலாகிய இம்மூன்று தன்மைகளும் இல்லாதவன் ஆயினும் உலகம் அனைத்தையும் ஆக்கியும், காத்தும், அழித்தும், அருள் தருகின்றவன். என்னைப் பிறவிகளிற் புகாது அதனின்றும் ஆட்கொண்டு சிவகதியில் புகுவித்து நற்றவக் குழுவினுள் செலுத்துபவனே.

நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்
போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்.

பூவின்கண் மணத்தைப் போல் நுட்பமாக அனைத்திலும் விளங்குபவன். அன்பர்க்கு அணுக்கமாகவும், அன்பரல்லார்க்கு தொலைவாயும் நிற்கின்ற மறைப்பொருள். கறந்தபால் கருப்பஞ்சாறுடன் நெய்யினையும் சேர்த்து கலந்து சுவைத்தாற்போல இனிமையின் சிறப்புற்று அடியவரின் சிந்தையில் தேனின் இனிமை ஊற்றெடுத்து பெருக நிலைப்பெற்று அவர்கள் பிறந்த பிறவியாகிய தளையினை அறுத்து அவர்களை விடுவிக்கும் எங்கள் பெருமானே!

நிறங்களோரைந்துடையாய் விண்ணோர்
களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினை
யேன்தன்னை

ஐம்பெரும் பூதங்களை திருமேனியாகக் கொண்டவன், ஐந்து நிறங்களைக் கொண்டவன், வானவர்க்குப் புலப்படாதிருந்த அவன் தமக்குத்தானே அருளிச் செய்வான்.

மறைந்திட மூடிய மாய இருளை

அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்

புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்குமூடி

மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை

மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்

கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்

நலந்தானிலாத சிறியேற்கு நல்கி

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குந்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.

கொடிதான வினையினால் பற்றப்பட்டு என் நல்லறிவு மறைந்து வஞ்சனையாகிய அஞ்ஞான இருளில் ஆழ்ந்து கிடந்தேன், நல்வினை தீவினையாகிய இருபாகங்களால் சுட்டுண்டிருந்தேன். புறத்தோலைப் போர்த்து உள்ளே புழுக்களும் அழுக்குகளும் மூடி மறைக்கப் பெற்ற ஒன்பது துவாரங்களிலும் அழுக்கு வடி

கின்ற உடலாகிய இருப்பிடத்தினை எனக்குத் தந்தாய், ஐம்புலன்களும் எனக்கு வஞ்சனை செய்தன! நின்னின்றும் அகன்று போகிய என் உள்ளத்தால் நினக்குக் கலந்த அன்புடைய எனக்கும் நீ அருளிச் செய்தாய். நின் திருவடி களைக் காட்டி நாயினும் கடைப்பட்டவனாகிய அடியேனுக்குத் தாயினும் மேம்பட்ட கருணை வடிவாக எழுந்தருளிய தத்துவப்பொருளே!

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராதுநின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே!

குற்றமிலாத பிரகாசமிக்கவனாய் மலர்ச் சுடர் போன்று ஒளிமயமானவன் அமுதன், சிவபுரத்தன், பாசமாகிய பற்றினை ஒழித்து அறிவினை விரிவடையச் செய்கின்ற மேலோன்! மனதிலுள்ள களங்கம் கெடும்படியாகக் காத லோடு கூடிய அருளினைச் செய்து நெஞ் சினை விட்டு அகலாது நிலை பெற்ற பெருங் கருணைப்பேராற்றினைப்போன்றவன். தெவிட் டாத அமுதம் போன்றவன். உணராதவரின் உள்ளத்தே ஒளிந்திருக்கும் சோதிமயமானவன். என் கல்மனத்தையும் நீராக உருகச் செய்து என்னுடைய உயிருக்கும் உயிராகி கலந்து நிலை பெற்றவன்.

இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கன்பனே! யாவையுமாய்
அல்லையுமாஞ்
சோதியனே! துன்னிருளே! தோன்றாப்பெருமை
யனே
ஆதியனே! அந்தம்நடுவாகி அல்லானே!
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை
பெருமானே!

உலகத்துப் பொருள்களாலே வருகின்ற இன்ப துன்பங்கள் இல்லாதவன். ஆனாலும் அன்பர்கள் பொருட்டு அவற்றை உடையவ வனாகவும் விளங்குபவன். அன்பர்கட்கு அன் பொழுக விளங்குபவன். யாவையும் ஆகியும் அல்லாதவனாகியும் இருப்பவன். இறைவனே இன்பமுடையவன். அருளும் ஒளியுமாக விளங்குபவன். இவ்விடத்துக்கு வருமாறு இழுத்து, என்னை ஆட்கொண்டு அருளிச் செய்த என் தந்தையாகிய பெருமான்.

கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்
வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணி
யனே!
காக்குமெய் காவலனே! காண்பரியப்
பேரொளியே!

நுண்ணிய அறிவினால் சுட்டி அறிவதற்கு அரிதாக விளங்கும் அறிவுப் பொருள் ஒன்றை நாடி அதிலே கலந்து அதனின்று மீளுதல் இல்லாததன்மையன். காண்பதற்கு அரிதாக விளங்கும் பேரொளியானவன்.

ஆற்றின்ப வெள்ளமே! அத்தாமிக்காய் நின்ற
தோற்ற சுடரோளியாய்ச் சொல்லாத
நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே
வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத்தெளிவே' என் சிந்தனை
யுள்
ஊற்றான உண்ணாரமுதே! உடையானே!

ஆற்று வெள்ளத்தைப் போனறு இன்பம் தருபவன். உலகுக்கப்பாற்பட்டவன், உணர் தற்கறிய நுட்ப அனுபவமாய் விளங்குபவன். வெவ்வேறாக அமைந்த உலகினிடையே வெவ்வேறாகக் காணப்பட்டு வந்து அறிவாக வும், தெளிந்தவரிடத்துத் தெளிவாகவும் விளங் கும் மெய்ப்பொருள். என் சிந்தனையுள் ஊற் றாகத் ததும்பி உண்ணத் தெவிட்டாத அமுத மாக அமைந்தவனே எல்லாம் உடையவனே!

வேற்று விகார விடக்குடம் பின் உட் கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ எண்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு
மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப்புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!

ஊனுடம்பினுள்ளே கட்டுப்பட்டு கிடத் தலையான் இனிப் பொறுக்கமாட்டேன். எம் ஐயனே! அரனே! என்று நின்னைப் போற்றிப் புகழ்ந்திருந்து பொய்ப் பொருளின் பற்று கெட்டு மெய்ப்பொருளோடு ஒன்றுபட்ட வர்கள் மீளவும் இவ்வுலகத்தில் வந்து வினைக் கீடாகிய பிறவியினை அடையாமல் ஐம்புல வேடர் சூழ்ந்துள்ள உடம்பினைத் தொடர் அறுக்க வல்லவன். ஊழிக்காலத்தில் அனைத் தினையும் ஒடுக்கி ஊழியிறுதியில் நள்ளிரவில் ஊழித்திருக்கூத்தினை இயற்றுகின்ற நாதன் ஆவான்.

தில்லையுட கூத்தனே! தென்பாண்டி
நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே! ஓவென்று
சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்
கீழ்ப்
செல்வர்சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

சொல்லிம பாட்டின் பொருளுணர்ந்து சொல்லு வார்.

தில்லையில் கூத்தப்பிரானாக விளங்கும் தென்பாண்டி நாட்டை உரிமையாகக் கொண்ட வன், துன்பத்தைக் கொடுக்கும் பிறவித்தளை யினை அறுத்து உதவுபவனே அபயம் என்று புகழ்தற்கு அருமையானவற்றை புகழ்ந்து சொல்லுபவர்களை சிவபுரத்தில் உள்ளவர் களாகவும், சிவனடியாராகியவர்கள் வணங்கிப் போற்றும் நிலையினராகவும் உய்வார்கள், இச் சிவபுராணத்தை ஓதி துன்பத்தைக் கொடுக்கும் பிறவிக்கடலை கடப்போமாக.

திருச்சிற்றம்பலம்.

வக்கரங்கள் தீர்த்து வைக்கும் வக்ரகாளி!

எம். ஜெகதீசன், எம்.ஏ.

வக்கரம் என்றாலே எல்லோருக்கும் ஓர் அச்சம்தான். ஆனால், அன்னை ஆதிபராசக்தி இங்கே உலக வக்கரங்களையெல்லாம் தீர்த்து வைக்க வக்கரக்காளியாக இருக்கிறாள். ஆம் நம் மன வக்கரங்களையும் சமூக வக்கரங்களையும் தீர்க்கக் கூடிய அன்னை காளி உருவில் அதுவும் வக்ரகாளியாக இருக்கின்றாள்.

ஊரே வக்கரமாக ஆனால் திருவக்கரையாக இருக்கின்றது. எல்லாமே வக்கரமாக அமைந்துள்ளது. வக்கரம் என்றால் என்ன? இயல்புக்கு மாறானது என்று பொருள். அந்த வகையில் இந்த ஊரில் மரங்கள் கல்லாகிக் கிடக்கின்றன. ஆம் கல் மரங்கள்தான். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா! ஆம் இங்கு 'FOSSIL WOOD' என்று நிலஇயல் வல்லுநர்கள் கூறும் கல் மரங்கள் ஊரைச்சுற்றிக் கிடக்கின்றன. 2 கோடி ஆண்டுகள் கடந்தால் தான் மரம் கல்லாக மாறக் கூடிய வாய்ப்புள்ளது என புவிஇயல் விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இவ்விடம் புவிஇயல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு தேசிய புவியியல் பூங்காவாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வராக நதி என அழைக்கப்படும் சங்கராபரணியாறு இங்கு வடக்கு தெற்காக ஓடி கிழக்காகத் திரும்புகின்றது இவ்வாற்றின் வடகரையில் இப்புனிதத்தலம் பல்லாயிரம் ஆண்டுகளாக எப்படியிருந்ததோ அதே நிலையில் இருக்கின்றது.

சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் திண்டிவனத்திலிருந்து மயிலம் வழியாக பாண்டிச்சேரி செல்லும் வழியில் பெரும்பாக்கம் என்னும் ஊர் உள்ளது. அங்கிருந்து தெற்காக ஏழு கிலோ மீட்டர் தொலைவில் திருவக்கரை உள்ளது. திண்டிவனத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திண்டிவனத்திலிருந்து பஸ் வசதியுள்ளது. அதேபோல் பாண்டிச்சேரியிலிருந்தும் பேருந்து வசதிகள் உண்டு. பௌர்ணமி நாட்களில் சென்னையில் இருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் சிறப்புப் பேருந்துகள் செல்கின்றன.

பழம்பெருமையும் புனிதமும் நிறைந்த புண்ணியத்தலம் திருவக்கரை: இத்திருத்தலம் ஆளுடையபிள்ளை திருஞான சம்பந்தரும், அருளுடைப் பெரியார் திருநாவுக்கரசரும், அருள்ஞான அருணகிரியாரும், வள்ளலாரும் சேக்கிழார் பெருமானும் பாடிய அருட்தலம்.

''சந்திரசேகரனே அருளாயென்று தண்
விசும்பில்
இந்திரனும் முதலா இமையோர்கள்
தொழுதிறைஞ்ச,
அந்தர மூவெயிலும் அனலாய் விழஓரம்பினால்
மந்தர மேருவில் வளைத்தான் இடம்
வக்கரையே''

—சம்பந்தர்

திருஞானசம்பந்தர் ஒருமுழுப் பதிகம்பாடி திருவக்கரை சந்திர மௌலீஸ்வரரை வழிபட்டால் வினை பற்றகலும் என்கின்றார்.

வள்ளலார் பெருமான் 'சார்ந்தால் வினை நீங்கித் தாங்கு திருவக்கரையுள்நேர்ந்தார் உப நிடத நிச்சயமே' என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் புண்ணியத் தலங்களின் சிறப்பென்பர். அந்த வகையில் இரண்டு கோடி ஆண்டுகளுக்கும் முன்னைப்பழம்பதியாய் இவ்வூர் இருக்கின்றது. அதற்குச் சான்று கூறுவன அங்குள்ள 'கல் மரங்கள்'. சங்கராபரணியாறு இங்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓடி கிழக்காகத் திரும்புகிறது. தலமும் தீர்த்தமும் கூறிவிட்டீர்! மூர்த்தியில் என்ன சிறப்பு? என்ற உங்கள் கேள்வி என் காதில் விழுகின்றது.

இந்தியாவில் வேறெங்கும் காணா வகையில், இங்கே சிவபெருமான் லிங்க உருவில் முகலிங்கம் இருக்கிறதென்கிறார்கள். தென்னாட்டில் திருப்பதி அருகில் திருக்காளத்தியில் (ஸ்ரீகாளஹஸ்தி) நான்கு முகங்களுடன் லிங்கம் இருக்கின்றது. காளத்தி லிங்கம் காளத்தி கோயிலின் தென்புறம் மலைச்சரிவில் ஒரு மண்டபத்தில் தனியாக நான்கு முகங்களுடன் இருக்கின்றது. ஆனால், நான் அறிந்த வரையில் கருவறையில் தனி கோயி

லாக-முகலிங்கம் இருப்பது திருவக்கரையில் மட்டிலுமே இது இக்கோயிலின் தனிச்சிறப்பு.

திருமூலர் திருமந்திரத்தில் ஏழாம் தந்திரத்தில் அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம், ஆத்மலிங்கம் என லிங்க உருவினை ஆறாகக் கூறுகிறார். திருவக்கரையில் மும்முக லிங்கமாக ஞானலிங்கமுள்ளது.

''கூடிப்பாதம் இரண்டும் படிமிசை
டாடியகையிரண்டெட்டும் பரந்தெழும்
தேடுமுகம் ஐந்து செங்கண் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே''

—திருமந்திரம்

திருமூல நாயனார் சதாசிவ லிங்கமாக தென்னாடுடைய சிவனின் திருமுகங்கள் ஐந்தென்பார், அவைசத்தியோ சாதம், வாம தேவம், அகோரம், தற்புருடம் ஈசானம் என்பதாம்.

திருவக்கரையில் முகலிங்கம் மூன்று முகங்களுடன் கிழக்கு நோக்கிய தற்புருடமுகம், தெற்கு அகோரமுகம், வடக்கே வாமதேவம் ஆக திருநீறு அணிந்த திருக்கோலத்தில் தென்னாடுடைய சிவன் இங்கே அருள் பாலிக்கின்றான். அதிகாலையில் தற்புருட முகத்தை மஞ்சள் பூசியும். உச்சிக்காலத்தில் வாம தேவ முகத்தை சந்தனம் சாத்தியும், மாலையில் அகோர முகத்தை குங்குமம் அணிவித்தும் வணங்குவோர்க்கு நல்லனவெல்லாம் வழங்கும் நாயகனாய்ப்பிறைசூடிய பெருமான், கங்கையை முடியில் வைத்த சங்காதரனின் அருள் கிட்டும்.

பத்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த பெருங்கோயில், உள்ளே நுழையும் போதே ஓங்கியுயர்ந்த ராஜகோபுரம் நம்மை வரவேற்கிறது. இராஜகோபுரத்தில் கற்சிற்பங்களும் சுதை வேலைகளும் அருமை. சோழ மன்னன் ஆதித்யசோழன் கண்டாராதித்தன் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்.

இராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே நுழைகின்றோம். வக்ரகாளி வடக்கு நோக்கி வக்ர நிலையில் இருக்கின்றாள். முதலில் இங்கு காளியைத்தான் வணங்க வேண்டும்.

ஆகம விதிகளில் கோவில்களில் பலிபீடம், கொடி மரம், நந்தி, கருவறை லிங்கம் அவையெல்லாமே ஒரே நேர்க்கோட்டில் அமைந்திருக்கும். ஆனால், திருவக்கரையில், எல்லாமே இயல்பு மாறிய நிலையில் வக்கரமாக அமைந்துள்ளது. இங்குள்ள பலிபீடம், கொடி, மரம், நந்தி எல்லாமே வடப் புறமாக நகர்ந்து அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

காளிகோயிலை, பொதுவாக வடக்கு எல்லையில்தான் அமைப்பது வழக்கம். ஆனால் இங்கே ஊரின் நடுவே கோயில், இராஜகோபுரம் அருகிலேயே அமைத்துள்ளது சிறப்பானதாகும்.

வக்ரகாளியின் திருவுருவம் காண்போரை பிரமிக்க வைப்பதாய் உள்ளது. தலைப்பகுதியில் சுடர் தரும் தீ கரங்கள், மண்டை ஓட்டிலான தலைமுடி, வலது காதில் குழந்தைப் பிண்டக் குண்டலம், எட்டுத் திருக்கரங்கள், வலப்புறக் கைகளில் பாசம், சிக்கதம் வாள், காட்டேரி ஆகியவையும், இடக் கையில் உடுக்கைப் பாவனையில் கேடயம், கபாலம் முதலியவற்றையும் ஏந்தியுள்ளாள். மற்றொரு கரம் இடது காலை ஒட்டி கைவிரல்களை மடக்கிக் கொண்டு ஆட்காட்டி விரலால் பூமியை நோக்கிக் காட்டுகிறது. தலைகளை மாலையாகத் தொடுத்து, அதனையே மார்க்கச்சையாக அணிந்திருக்கிறாள் அன்னை. தலைமாலைக்கச்சு இடது தோளிலிருந்து இறங்கி, தனங்களை மறைத்து வந்து வயிற்றில் படிந்து கீழே தொங்கும், வலக்கைவரை நீண்டு முடிகின்றது. தலைமுடியை முப்புரி நூல்போல் அன்னை அணிந்திருக்கும் அழகே அழகு! முதுகுப் புறமும் தலைமாலை தெரிகின்றது. முகத்தில் கோரைப் பற்களும், உருண்டை விழிகளும் சினத்தைக் கக்கியவாறு பூமி நோக்கிப் பார்க்கின்றன. அகிலமெல்லாம் ஈன்றஅன்னையின் மணி வயிற்றில் வளைப்பும், யாவருக்கும் வரம் தரும் அழகு அன்னையின் கால்களில் தண்டைச் சரங்கள் அலங்கரிக்கின்றன. அன்னையின் அரையாடை புதுமையாகத் தோன்றுகின்றது. அகிலாண்டேசுவரியாகிய அன்னை வக்கிராசுரனை அழித்த திருக்கோலத்தில் வந்தவர்க்கெல்லாம் வரம் தந்தருளுகின்றாள்.

காளியின் வலப்புறம் யோகேஸ்வர லிங்கமும், இடப்புறம் வலம்புரி கணபதியும் உள்ளன. காளிகோயில் வெளிப்புறம் இரண்டு பக்கமும் பக்கத்திரண்டாக நான்கு துவார பாலிகைகள் உள்ளனர்.

நவக்கிரகங்களுள் ராகு, கேது இரண்டினுக்கும் அதிதேவதை வக்கர காளி எனச் சொல்லப்படுகின்றது. எனவே, இக்கோயிலை வலப் பக்கமாக ஐந்து முறையும் இடப் பக்கமாக நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

வக்கர காளிக்கு எதிரே தீப லட்சுமி திருக்கோயில், இங்கே திருமணம் ஆகாமல் நீண்ட நாள் தடைப்பட்டோர் இராகு காலத்தில் விளக்கேற்றி வழிபட்டால் விரைவில் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கையாகும்.

வக்கிராசூரன் என்னும் அரக்கன், சிவபெருமானைக் கண்டத்தில் வைத்து பூஜை செய்து வந்தான். தவவலிமையில் சிவபெருமானிடம் சாகா வரம் பெற்றான். ஆணவம் கொண்ட அரக்கன் எல்லோரையும் கொடுமைக்கு ஆளாக்கினான். எல்லோரும் சிவபெருமானை தொழுதிருக்கிறார்கள். சிவபெருமான், ஓங்கி உலகளந்த உத்தமனான, திருவாழ் மார்பினனான மகா விஷ்ணுவை அழைத்து வக்கிராசூரனை வதம் செய்ய வேண்டினார். மகா விஷ்ணுவின் திருச் சக்கரத்தில் வக்கிராசூரன் அழிந்துபட்டான்.

வக்கிராசூரன் தங்கையான துன்முகியும் அவனைப்போலவே, எல்லோருக்கும் நாசம் விளைத்தாள். சிவனது ஆணையாலே, அன்னை பராசக்தி துன்முகியை வதம் செய்தாள். துன்முகியோ கருவுற்றிருந்தாள். கருவை அழிப்பது கூடாதெனக் கருதி, துன்முகியின் வயிற்றைக் கிழித்து குழந்தைப் பிண்டத்தைக் காதணியாக அணிந்து கொண்டு, கொடுமையின் உருவான துன்முகிக்குக் கூற்றானாள். அன்னை காளி, வக்கிராசூரனின் தங்கையை அழித்து, உலக மக்களின் துன்பங்களைப் போக்கிய திருக்கோலத்தில் நினைத்தார்க்கெல்லாம் வல்வினையைத் தீயினுள் தூசாக்கி வரம் தருகின்றாள் வக்கர காளி.

கோயினுள் உள்ளே சப்த மாதர்கள் சிலைகளும் உள்ளன. அவை வாராகி, இந்திராணி, கௌமாரி, வைஷ்ணவி, பிராம்மணி, துன்முகி சாமுண்டிக்குபதிலாக அன்னை வக்கர காளியாக இங்கே அருள்பாலிக்கின்றாள்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாட்களில் இந்த சின்னஞ்சிறு ஊர் விழாக்கோலம் பூணுகிறது. பௌர்ணமி நள்ளிரவில் வக்கர காளி தீப ஒளிச்சுடர் ஏந்திவரும் அன்னையின் அர்ச்சகர் அருள்மொழிகள் கூறுகின்றார்.

அன்னையை தரிசித்து கோவிலின் உள்ளே நுழைகின்றோம்.

கருவறை முன்னால் இரண்டு புறமும், இரண்டு துவாரபாலர்கள்: 10 அடி உயரமுள்ள துவாரபாலர்கள் சிங்கத்தை வாகனமாகக் கொண்டுள்ளார்கள். இதுவும் இங்கே புதுமையானதாகும். கருவறையில் திரு நீறணிந்த கொன்றைப்பிரானைத் தீப ஒளியில் காணும் போது இறைவன் கண் விழித்து நம்மைக் காண்பது போன்ற தோற்றம் நம்மை ஆட்கொள்கிறது.

கருவறைச் சுற்றுப் பிரகாரத்தில் அருணகிரிநாதரால் பாடப் பெற்ற முருகப் பெருமானை தரிசிக்கலாம்.

கருவறையில் நடராஜப் பெருமானின் வக்ரதாண்டவத்தைக் காணலாம். தில்லைக் கூத்தன் இடது காலை தூக்கி வலது காலை ஊன்றி எப்போதும் ஆடுபவன், இந்தத் திருத்தலத்தின் மகிமையால் தானும் கால்மாறி, இடது காலை ஊன்றி வலது காலை தூக்கித் தாண்டவமாடுகின்றார். விரிசடையனாக காட்சிதரும் நடராசப் பெருமான், இத்தலத்தில் கூர்மசடையனாய்க் காட்சி தருகின்றார்.

கருவறையில் தெற்குப் புறத்தில் குண்டலினிமுனிவரின் சமாதி அமைந்துள்ளது. தமிழகச் சித்தர் மரபில் வந்த மாமுனிவர் இங்கே ஜீவ சமாதிகொண்டுள்ளது மற்றொரு சிறப்பாகும். பழனியில் போகர், திருப்பதியில்

தொல்பொருள் ஆய்வுத் துறையில் கலைப் பொருட்களைப் பதிவு செய்திடுக.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை தமிழகத்துள் கோயில்களில் உள்ள செப்புத் திருமேனிகள், வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப் பொருட்கள் ஆகியவற்றைத் தொல்பொருள் பதிவுச் சட்டம் 1972இன்படி பதிவுசெய்து சான்றிதழ் வழங்கி வருகின்றது.

ஆகவே இதுவரை செப்புத் திருமேனிகள் பதிவுசெய்யாத திருக்கோயில்கள் இருப்பின் அவற்றின் நிர்வாக அதிகாரிகள் — இதர நிர்வாகிகள்

உயர்திரு
இயக்குநர் அவர்கள்
தொல்பொருள் ஆய்வுத்துறை
வட்டார நூலகக் கட்டடம்
சி.பி.டி வளாகம்,
தரமணி, சென்னை-113.

என்ற முகவரிக்குத் தொடர்பு கொண்டு கூடுதல் விவரம் பெற்று தத்தம் ஆலயங்களிலுள்ள கலைப் பொருட்களைப் பதிவு செய்து கொள்ளக்கோரப்படுகிறது.

கொங்கணவர்போல் திருவக்கரையில் குண்டலினி முனிவர்குடி கொண்டுள்ளார்.

கருவறையின் வடபுறத்தில் மேற்கு நோக்கிய திருக்கோலத்துடன் ஆழ்வார்களின் அன்பன் ஆராவமுதன் வரதராஜனாக அபய ஹஸ்தத்துடன் பிரயோகச் சக்கரத்துடன் சங்கம் விளங்கக் காட்சியளிக்கின்றார். வைணவத் திருத்தலங்கள் 108-ல் நாகைமாவட்டம் திருக்கண்ணபுரத் திருத்தலத்தில் மட்டுமே சௌரிராஜனாக பிரயோகச் சக்கரத்துடன் பெருமாள் காட்சிதருகின்றார். அதனைத் தவிர இத்திருக்கோவிலில் மட்டுமே பெருமாள் பிரயோகச் சக்கரத்துடன் காட்சியளிப்பது இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு.

பெருமாள் கோவிலின் முன்புறம் கிழக்கு நோக்கிய நிலையில் சகஸ்ரலிங்கம். ஒரே லிங்கத்தில் 1008 லிங்கங்கள் அமையப் பெற்றுள்ளது.

அம்பாள் தனிச் சன்னதியில் உமா மகேசுவரியாகத் தெற்கு நோக்கி இருக்கின்றாள்.

இங்குள்ள சனி பகவான் வக்ரமாக அமைந்துள்ளார். இயல்பாக சனி பகவானில் வலப்புறமாக இருக்கும் காகம். இங்கு இடப்புறமாக அமைந்துள்ளது திருவக்கரைத் தலத்தின் சிறப்பு.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002.



குன்றத்தூரில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஏ. கோதண்டம், அறநிலையத்துறை இணை ஆணையாளர் திரு ப. தனபால், எம்.ஏ.பி.எல்., துணை ஆணையாளர் திரு ப. ராஜா, பி.எஸ்சி.பி.எல்., துணை ஆணையாளர் திரு மு. ராமச்சந்திரன், எம்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயத்தில் அம்மனுக்கு தங்க ஹஸ்தம் அணிவிக்கும் விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. ஆலயப் பரம்பரை அறங்காவலர் திருமிகு மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் தம் கைங்கரியமாக செய்து வழங்கிய தங்க ஹஸ்தங்களை இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையாளர் திரு வ. இராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள் வழங்க விஜயதசமி திருநாளில் அன்னைக்குத் தங்க ஹஸ்தங்கள் அணிவிக்கப் பெற்று விழா சிறப்புற நிகழ்வுற்றது.